# ஆராய்ச்சிக் கட்டுரைகள்

சேதுசமத்தான மகாவித்துவான்
இரா. இராகவையங்கார்
முன்னாள் தமிழ் ஆராய்ச்சியாளர்,
அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

# ஆராய்ச்சிக் கட்டுரைகள்

சேதுசமத்தான மகாவித்துவான்

**இரா. இராகவையங்கார்**

முன்னாள் தமிழ் ஆராய்ச்சியாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

**நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ்**

சென்னை-600 028.

© நியூ சரா பப்ளிகேஷன்ஸ், 1987

விலை 13-00

நியூ சரா பப்ளிகேஷன்ஸ்,
தபால் பெட்டி எண். 2459,
ராஜா அண்ணுமலை புரம், சென்னை-600028.

அச்சிட்டோர் :
நரேந்திரா பிரிண்டர்ஸ்
6, இராமநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600 017.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ''செந்தமிழ்'' முகவுரை | பக்கம் 1—10 |
| 2. | தமிழர் வீரம் | 11—20 |
| 3. | ஆராய்ச்சி | 21 |
| 4. | செந்தமிழ்ச்சான்றோர் திருப்பெயர் | 22—27 |
| 5. | குண்டலகேசி | 28—35 |
| 6. | அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியல் உரைகாரர் பேராசிரியர் என்பது | 36—38 |
| 7. | அச்சிட்ட தொல்காப்பிய மரபியலுரை | 39—44 |
| 8. | புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் | 45 |
| 9. | கொல்லிப்பாவை | 45—47 |
| 10. | அந்தாதிகள் | 48—52 |
| 11. | இரட்டையர் | 55—54 |
| 12. | செவ்வைச்சூடுவாரும், அந்தாரியும் | 55—60 |
| 13. | சயங்கொண்டார் ஊர் | 61 |
| 14. | ஆவிநன்குடி | 62—64 |
| 15. | மாந்தையும், மரந்தையும் | 65—73 |
| 16. | தோல்வித்தானம் | 74—75 |
| 17. | பொய்யாமை | 76—84 |
| 18. | ஆராய்ச்சி (பரிபாடலுரையாசிரியர்) | 85—87 |
| 19. | திருத்தக்கதேவரும் கம்பரும் | 82—95 |
| 20. | கபிலர்முதல் எழுவர் | 97—100 |

நூலாசிரியருக்கு பேராசிரியர்

## எஸ். வையாபுரிப் பிள்ளையின் வாழ்த்து

'சொல்லிற் கொருவனெனத் தோன்றிய இராகவனே
சொல்லிற் கொருவனெனத் வோறிஞன்—கல்விக்
கரைகண்டான் உண்மைக் கரைகண்டான் வாழ்வின்
கரைகண்டான் இன்றுலகின் கண்'.

'வம்மின் புலவீர்! வழுத்துமின் இராகவன் சீர்
செய்ம்மின் உரிய திருப்பணிகள்—மெய்ம்மையுறும்
நன்பன் தமிழன்னை நற்புதல்வன் நாவினிய
பண்பன் புகழைப் பயின்று.'

'நலமிக்க செந்தமிழின் நந்தும் புகழ்வளர்த்தான்
உலகொக்க எண்கம்பன் ஓங்கும் இசைவளர்த்தான்
வலமிக்க ஆரியத்தின் மாண்பை நனிவளர்த்தான்
புலமிக்க ராகவன்றன் புகழ்வளர்க்க வாரீரே.'

# 1. மகாவித்துவான் படைப்புகள்

**பதிப்பு நூல்கள் (15)**

**(அ) சங்கநூல்கள் (4)**

அகநானூறு *1901, 1921*
குறுந்தொகைவிளக்கம் 1946
பெருப்பாணாற்றுப்படை 1949
பட்டினப்பாலை 1951

**(ஆ) பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் (4)**

இனியவை நாற்பது — பழையவுரையுடன்
ஐந்திணை ஐம்பது — ,,
திணைமாலை நூற்றைம்பது — ,,
நான்மணிக்கடிகை — ,,

**(இ) இலக்கண நூல்கள் (3)**

நேமிநாதம்—மூலமும் உரையும் 1903
பன்னிரு பாட்டியல்
தொல்காப்பியம் : செய்யுளியல்
நச்சினார்க்கினியருரை 1917

**(ஈ) பிற நூல்கள் (4)**

கணு நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்

**ஆசிரியர் இயற்றிய நூல்கள் (22)**

**(அ) செய்யுள் நூல்கள் (5)**

புவி எழுபது 1927
தொழிற் சிறப்பு 1932
திருவடிமாலை 1933
நன்றியில் திரு
பாரிகாதை 1937

**(ஆ) உரைநடை பாடல்கள் (9)**

சேதுநாடும் தமிழும் 1924
வஞ்சி மாநகர் (1918?) 1932

| | |
|---|---|
| நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் | *1933* |
| அண்டகோள மெய்ப்பொருள் | *1934* |
| தமிழ் வரலாறு | *1941* |
| தித்தன் | *1949* |
| கோசர் | *1951* |
| இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவை | *1984* |
| ஆத்திசூடி உரை | *1985* |

**இ) மொழிபெயர்ப்பு (1)**

| | |
|---|---|
| அபிஜ்ஞான சாகுந்தலம் | *1938* |

**ஈ) அச்சிடப்படாத நூல்கள் (9)**

பகவத்கீதைத் தாழிசை
பாரத நீதிவெண்பா
காவல் தலைமை
கடவுள் மாலை
திருப்புல்லையமகவந்தாதி—உரையுடன்
திருவேங்கட மாயோன் மாலை
பல்லட சதகம்.

# அறிமுகம்

''ஆராய்ச்சிக் கட்டுரைகள்'' எங்கள் அருமைத் தந்தையின் தந்தையாரான மகாவித்துவான் பாஷாகவி சேகரர் இரா. இராகவையங்கார் அவர்கள் மதுரைத் தமிழ் சங்கத்தில் ''செந்தமிழ்'' பத்திரிகையில் பல சமயங்களில் எழுதியவற்றின் தொகுப்பேயாகும். இவ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எங்கள் தந்தையார் வித்வான் இரா. இராமாநுஜஐயங்கார் காலத்தில் வெளிவந்திருக்குமாஞல் நாங்கள் மிகவும் மகிழ்வுற்றிருப்போம். இந்நூல் வெளிவரும் பொழுது அத்தமிழ்ப் பெரியார் இவ்வுலகில் இல்லாதது மிகவும் வருந்தற்குரியதே.

மகாவித்துவான் ரா.ராகவையங்கார் அவர்களைச்செந்தமிழுலகம் நன்குஅறியும். தமிழ்த் தாத்தா மகா மகோபாத்யாய ஸ்ரீ. உ. வே. சாமிநாதய்யர் அவர்களோடு சேர்த்து எண்ணத் தக்க பேரறிஞர் இவர். தமிழில் ஆராய்ச்சி செய்வது என்பதே கேள்விப்படாதகாலத்தில், ஆங்கில மோகம் தலை தூக்கி நின்ற தருணத்தில், தமிழ் இலக்கியம், வரலாறு போன்ற துறைகளில் தமிழ் ஆராய்ச்சிக்கு வித்திட்டவர். செந்தமிழ்ப் பத்திராதிபராக 1902 முதலாக இவர் வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை இத்தொகுப்பில் காணலாம். கம்பர், திருவள்ளுவர், திருத்தக்கதேவர், உரையாசிரியர்கள் பலரின் வாழ்க்கை வரலாற்றையும் 'சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்ட ஊர்களையும், பெயர்களையும், ஒழுங்கான, பாடல்களையும் பதிப்பித்து பலரின் பாராட்டைப் பெற்ருர். மறைமலையடிகள், வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார், நாவலர் சோமசுந்தரபாரதியார்,எஸ்.வையாபுரிபிள்ளை,ரா.பி.சேதுப்பிள்ளை, கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, மு.கதிரேசன் செட்டியார் போன்ற அறிஞர்கள் இப்பெரியாரைக்கடித மூலமும், கட்டுரை மூலமும், கவிதை மூலமும் பாராட்டி உள்ளனர். டாக்டர் உ.வே.சா தம் குருவிற்குப் பிறகு இவரையே மகாவித்துவான் என்னும் பட்டத்திற்குரியவர் என்று சிறப்பித்தார்.வட மொழியில் உள்ள தேர்ச்சியால் காளிதாசனின் அபிஜ்நான சாகுந்தலத்தைத் தமிழில் மொழி பெயர்த்தும், வால்மீகி ராமாயணம், பகவத்கீதை போன்ற காவியங்களைப் பற்றிப் பிரசங்கித்தும், பாஷாகவி சேகரர் ஆனார். இவர் செய்த தமிழ்த் தொண்டை ''ஆய்வுலகம் போற்றும் ஆசிரியமணிகள்'' என்ற நூலில் காணலாம்.

இக்கட்டுரைத் தொகுதி ஆராய்ச்சியாளர்க்குப் பெருவிருந்தாகும் என்பதில் ஐயம் இல்லை. எப்பொருளையும் நுணுகி ஆராய்ந்து, புதிய உண்மைகளை வெளிப்படுத்துவதில் இவர்க்கு உள்ள ஆர்வம் இந்த நூலில் நன்கு புலப்படும். ஒரு சில கருத்துக்கள் ஒரு சிலருக்கு ஒவ்வாததாக இருக்கலாம். ஆனால் ''தென்சொல் கடந்தான், வடசொற்கு எல்லை தேர்ந்தான்'' என்ற கம்பநாடார் கூறிய வாக்கு இவருக்கு எல்லா வகையிலும் பொருந்தும். புதுநூல்கள் கண்டு பிடிக்கவும், புத்துரைகள் எழுதவும் இவர் ஏடுதேடி அலைந்த ஊர் எத்தனை? எழுதி ஆராய்ந்த குறிப்புரை எத்தனை? அரசாங்கத்தாரால் தமிழ் போற்றப்படாத காலத்தில் தம் சொந்த வருவாயையும், பொருளையும் கொண்டு தமிழ் வளர்த்த பெரியார்களுள் இவர் ஒருவர் என்றால் மிகையன்று.

இவர் நூலை விமரிசிக்க எங்களுக்கு எந்த அருகதையும் இல்லை. வெளிக்கொணர்வதற்கு ஏற்பட்டவாய்ப்பை நாங்கள் பெரிதும்போற்றுகிறோம். பழைய, தெளிவு இல்லாப்பிரதிகளை பார்த்து அச்சுக்கோர்த்ததன் விளைவாக ஒருசில அச்சுப் பிழைகள் இந்நூலில் காணப்படலாம். அறிஞர்கள் பொறுப்பார்களாக.

இந்நூலை வெளியிட உதவிய எங்கள் உறவினர் திரு. என். சீனிவாஸராகவன் அவர்களுக்கும், பதிப்பிக்க ஊக்குவித்த எங்கள் தந்தையாரின் நண்பர், தமிழ் பல்கலை கழக சிறப்பு நிலை பேராசிரியர், திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும், இத்தொகுதியை கூர்ந்து பார்த்து, அச்சுப் பிழைகளை நீக்கி உதவிய, மகாவித்துவான் அவர்களின் நண்பரும், தமிழறிகருமான திராவிட கவிமணி வே. முத்துசாமி ஐயரவர்களின் புதல்வரும், மாணக்கருமான திரு. மு. கோ. இராமன் அவர்களுக்கும், பொறுமையுடன் நூலை அச்சிட்டு உதவிய நரேந்திரா அச்சக உரிமையாளர் திரு. டி. எம். சௌந்தரராசன் அவர்களுக்கும் நாங்கள் நன்றியறிதலுடையோம்.

இத்தொகுப்பு வெளிவர விரும்பிய எங்கள் தந்தைக்கு இந்நூலை அர்ப்பணித்து நாங்கள் மனச்சாந்தியை அடைகிறோம்.

**டாக்டர். ஆர். விஜயராகவன்**
டாடா ஆராய்ச்சிக் கழகம்,
பம்பாய்.

**ஆர். கண்ணன்**
காட்பாடி.

# ''செந்தமிழ்'' முகவுரை

## தமிழின் தொன்மை

இப்பரதகண்டத்துள்ள பலவாய மொழிகளுட்டொன்று தொட்டே அறம்பொருளின்பம்வீடு எனப்பட்ட நான்கு உறுதிப் பொருள்களையும் அடைதற்கு வாயிலாகவுள்ள எண்ணிறந்த நூற் பெருக்கத்தையுடையன **ஆரியமுந்தமிழுமாம்**. இவை வடக்கண்ணுந் தெற்கண்ணும் வழங்கல் நோக்கி முறையே வட மொழி தென்மொழியெனப் பெயர் பெறும். வடநாட்டு வழங்கும் பல்வகை மொழிக்கும் வடமொழி பிறப்பிடமாகும். அதுபோலத் தென்னாட்டு வழங்கும் வடுகு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகட்குந் தென்மொழி பிறப்பிடமாகும். இதனால் இவ்விரு மொழியும் ஈண்டு வழங்கும் மற்றை மொழிகட் கெல்லாம் முற்பட்ட தொன்மைமாட்சி உடையனவாம் என்பது நன்று விளங்கும், இவ்விரண்டும் தெய்வத் தோற்ற முடைய வாய்த் தெய்வத்தன்மையுடைய இருடிகளால் வளர்க்கப்பட்டன என்பது இவ்விருமொழியாளர்க்குங் கொள்கை. இவற்றுள், தமிழ் சிவபிரான்பாலே தோன்ற அகத்தியமுனிவரான் வளர்க்கப் பட்ட தென்பர். இதனைக் கல்வியிற் பெரிய **கம்ப நாடர்** ''தழற்புரை நிழற்கடவு டந்ததமிழ் தந்தான்'' (ஆரணிய காண்டம், அகத்தியப் படலம், 41.) என்று கூறியவாற்ருன் உணர்க,

இம்மொழி, ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பினுற் பேரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழியது'' (பொருள திகாரம், செய்யுளியல். 75) என **ஆசிரியர் தொல்காப்பியனுர்**

---

சுபகிருது ௵ கார்த்திகை மாதம் வெளியான முதல் ''செந் தமிழ்ப்'' பத்திரிகை இதழில் பத்திரிகையாசிரியராக இருந்த மகாவித்வான் எழுதிய முகவுரை.

கூறியவாறு சேர சோழ பாண்டியரான் ஆளப்பட்ட வேங்கடங் குமரி என்பவற்றிடைக் கிடந்த நிலவுலகில் அவர் பெருங் கொடையானே நல்லிசைப் புலவர்களாற் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. இம்மூன்று பெருவேந்தரும் இடைக்கட் புகுந்து இந்நாட்டை அடிப்படுத்து ஆண்டவரன்றிப் படைப்புக் காலந் தொட்டே இந்நாட்டின் அரசுரிமை பூண்டார் என்பது செந்தமிழ்ப் பெரியோர் கொள்கை, இதனை, "வழங்குவ துள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பிற் றலைப்பிரித லின்று." (திருக்குறள், குடிமை 5.) என்பதன் உரையில் "பழங்குடி—தொன்றுதொட்டு 'வந்தகுடி' எனவும், "தொன்றுதொட்டு வருதல் சேர சோழர் பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" எனவும் ஆசிரியர் பரிமேலழகர் கூறியதனால் அறியப்படும். "கோதாவரி யாற்றை யும் மற்றும் எல்லாவற்றையுங் காண்பீர்: அவ்வாறே ஆந்திர, புண்டர, சோள, பாண்டிய, கேரள நாடுகளையும் காண்பீர்." (கிஷ்கிந்தாகாண்டம், 41-ம் ஸர்க்கம், 12-ம் சுலோகம்) எனவும் "பின்பு பொன்னிறைந்த தாயும் அழகுடைத்தாயும் முத்துமணி இவற்றால் அணியப் பட்டதாயும் நகரத்து அரணோடு இணைக்கப் பட்டதாயும் உள்ள பாண்டியர் வாயிற்கதவை, வானரர்காள்! போய்க்காண்பீர்." (ஷை, ஷை, 18, 19) எனவும் வான்மீகிமுனிவரும் கூறுகின்றமையால் இவராண்ட தமிழ்நாட்டின் பழமையும் செல்வ நிலையும், மேம்பாடும் நன்று தெளியப்படும்.

## பாண்டியர் தமிழ்வளர்த்த பான்மை

இவருட் பாண்டியரே, பல்வேறு காலங்களில் நான்கு வருணத்துப் பல புலவர்பெருமக்களைத் தொகுத்து அவர்க்கு வேண்டுவன புரிந்து தமிழ்வளர்த்தற்கட் டலைமை வாய்தலால் இவரையே தமிழ்நாடன் எனவும். இவராண்ட நாட்டையே செந்தமிழ்நாடு எனவும், இவரது மதுரையைத் "தமிழ்கெழு கூடல்" (புறம், 58), "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ் நனை மறுகின் மதுரை" (சிறுபாண், 66, 67,) "கூடற் கொழுந் தமிழி னெண்டுறை" (இறையனர் களவியலுரை மேற்கோள்.) "கூடலினாய்ந்த வொண் தீந்தமிழ்" (திருக்கோவையார், 20), "தமிழ்க்கூடல்" (கலிங்கத்துப்பரணி, இராசபாரம் பரியம், 23) எனவுந் தமிழாற் சிறப்பித்துச் சான்றோர் பலரும் வழங்குவரா யினர். ஆசிரிய1 நச்சினார்க்கினியர் தொல்காப்பிய மரபியலுரைக் கண் (94) "மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத்தொடுபட்ட சான்றோரும்" எனக் கூறுதலான் இவ்வரசர் நிறுவிய தமிழ்ச்

சங்கம் மூன்றென்பதும், அச்சங்கத்துத் தமிழாராய்ந்த புலவர் நான்கு வருணத்தவருமாயினர் என்பதும் அறியத்தக்கன. இவருள் யாம் அறிந்தவளவிற் காய்சினவழுதி என்னும் பாண்டியனே தமிழ்ப்புலவர்களை ஒருங்கு சேர்த்துத் தமிழ்வளர்த் தற்கண் முற்படமுயன்றான் என்பது தெரிகின்றது, இவன் வழியிற் பாண்டியரெல்லாம் இந் நன்னெறி கடைபிடித்து தமிழ் வளர்த்தற் கண் ஒருப்பட்டனர். செந்தமிழ் நாடாளும் அரசுரிமையான் மேம் பட்ட இவ்வேந்தர், நல்லிசைப் புலவரை உயிர்த் துணைவராகக் கருதித் தம்மினும் மிக்குமதித்துத், தம் அரசும் கல்வியறி வொழுக் கங்களும் நியாயமும் வீரமும் கொடையும் இவராலே நிலைபெற்று வளர்வனவாகக்கொண்டு இவரைப் போற்றுதற்கண்ணே நின்றனர். தலையாலங்கானத்துச் சேர சோழர் என்னும் இரு பெருவேந்தரையும் ஐந்து குறுநிலமன்னரையும் ஒருங்குபோர் வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான், அப்போர் முகத்து 'இதுசெய்யேனாயின் இன்னனாவேன்' என்னும் வஞ்சினங் கூறுமிடத்து, ''என்னைச் சிறுசொற் சொல்லிய வேந்தரைப் போர் சிதறத் தாக்கி அகப்படுத்தேனாயின் மாங்குடி மருதன் முதலாக நல்லிசைப் புலவர் எனது நிலவெல்லையைப் பாடாது நீங்குக,' என்றதொன்றானே இவர்கள் இப்புலவரை எத்துணையாக நன்கு மதித்தனர் என்பது அறியலாகும். இதனை :—

> ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
> மாங்குடி மருதன் றலைவ னாக
> வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
> புலவர் பாடாது வரைகவென் னிலவரை''

எனவரும் புறப்பட்டான் (72) அறிக.

## சேர சோழர் பங்கு

இனிச் சேரரும் சோழரும் சங்கம் நிறுவாவிடினும் இப் பாண்டியரைப் போன்றே செந்தமிழ் அருமைபோற்றி இப் புலவரைப் பெரிதும் ஆதரித்தனர் என்பது அப்புலவர் பலரும் அவ்வரசரைப் பாடிய பாடல்கள் நிறைந்த எட்டுத்தொகை முதலிய நூல்களான் நன்கு விளங்கும். இவ்வேந்தரெல்லாந் திருவுடை யரேயன்றித் தெள்ளியருமாய்ப் பெருஞ்சுமை பயப்பச் செய்யுள் செய்தலினும் வல்லராயினர் என்பதும் அந்நூலான் உணரப்படும் இம்மூவேந்தரும் நாவீறுடைய புலவர்களையே யாரினும் மீப்பட நன்குமதித்துத், தமக்குள்ளும் பிறர்பாலும் பகைமை விளைந்த போது இவர் உரைத்தவற்றிற்கு இணங்கிப் பகைமை தீர்ந்தும்,

தீயன ஒழிந்தும், நல்லன புரிந்தும் போந்தார்கள், பொய்கையார் என்னும் புலவர், சோழன் செங்கணன் என்பான் சேரமான் கணைக்காலிரும்பொறையோடு பொருது அவனைப்பற்றிக் கொண்டு சிறை வைத்துழிக் களவழி நாற்பது பாடி வீடு கொண்டார். கோவூர்கிழார் என்னும் அறிஞர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான்மக்களை யானைக் கிடுவுழிப் பாடி உய்யக்கொண்டார். இவற்றால் இவ்வேந்தர்க்கும் புலவர்க்கும் உள்ள நட்பும், அரசர் பக்கத்துப் புலவர் செல்வாக்கும் தெளியப் படும். புலவர் அவ்வவ் வமயங்களிற் பாடிய பாடல்களையெல்லாம் பெருநூல்களாகத் தொகுப்பித்து இவ்வுலகிற்குதவியோரும் இத் திருவுடை மன்னரே யாதலால், இவர், தமிழ்வளர்ச்சிக்கண் எத் துணையாக முயன்றனரென்பது அறியத் தக்கது.

## குறுநிலமன்னர், வேளிர் பங்கு

இப்பெருவேந்தரைப் போலவே இத்தமிழ்நாட்டுக் குறுநில மன்னரும்வேளிரும் இப்புலவர்பால் அன்பும் அருமையும் பாராட்டி உபசரித்தனர் என்பது, இக்கல்விச் செல்வர்கள், அவர்களுள்ளே எழுவரைத் தமிழ்நாட்டுப் பெருவள்ளல்களாக எண்ணினமை யானே புலப்படும், இவ்வள்ளல்களை இப்புலவர் மூவேந்தரினும் மீப்பட மதித்து அன்பு பாராட்டினர் என்பது விளங்குகின்றது. இதனை, மூவரும் பாரி என்னும் வள்ளற்றலைவனது மலையாகிய பறம்பினை முற்றிய காலத்துக் கபிலர் என்னும் புலவர்பெருமான் பாடிய பாடல்களாற் செவ்வனம் அறியலாகும். இப்புலவரெல் லாம் இவ்வள்ளல்களது வளர்ச்சிக்கு மகிழ்ந்தும், தளர்ச்சிக்கு வருந்தியும் பேரன்பினால் உள்ளுருகிப் பாடிய பாடல்கள் எண்ணி றந்தனவுளவதாலால் இவர்களானும் தமிழ்ப்பயிர் நன்று வளர்ந்த தென்பது ஒருதலை.

## பௌத்த ஜைனர்கள் தொண்டு

பின் பௌத்த ஜைனர்கள், இந்நாட்டுட் புகுந்து இத்தமிழ் அரசரைத் தமராக்கித் தமது சமயக் கொள்கைகளைப் பரவச் செய்த காலத்தும் இத்தமிழ் அவர்பாலும் வளங்குன்றாது சிறந்து வளர்ந்ததென்பது, அவர்கள், நிகண்டுகளாகவும் இலக்கணங் களாகவும் புராணங்களாகவும் காப்பியங்களாகவும் வாதங்களா கவும் செய்துள்ள பலநூல்களான் அறியப்படுகின்றது. பௌத்த ஜைனர் தமிழில் இயற்றிய பெரிய வாதநூல்கள் குண்டல நீல

பிங்கல அஞ்சன தரிசன தத்துவ கால கேசிகள் முதலியவை என்ப. (யாப்பருங்கலவிருத்தி.)

## நாயன்மாரர்களும் ஆழ்வார்களும்

இவர்கட்கு முன்னும், இவர்கள் காலத்தும், சிறிது பின்னும் சைவசமயிகளாகவும் வைணவசமயிகளாகவும் நாயன்மாரும் ஆழ்வாரும் இவ்வுலகின் பெருந்தவப்பயனாகத் தோன்றியருளி இத்தமிழ்வேந்தரைத் தர்நெறிப்படுத்துத் தமிழ்நாட்டாரை உய்வித்து, மிகவும் இனிய செந்தமிழானே வேதம் ஆகமம் மிருதி இதிகாசம் புராண முதலியவற்றின் நுண்பொருள்கள் எல்லாம் பொலிவுபெறப் பரமஞானவொளியே வீசிப் பத்திச்சுவை மிக்கொழுகி அன்பே வடிவாய்நின்றன எனலாம்படி பல்லாயிரம் பாடல்கள் அருளிச்செய்து செந்தமிழின் தெய்வத்தன்மை புலப்படுத்தினார்கள். இவர்கள் அருளிச்செயல்களெல்லாம் பெரும் பாடியங்கள் அருளிவைதிகசமயம் நிலைபெறுவித்த வடமொழிப் பேராசிரியர்களாற் புகழ்ந்து போற்றப்பட்டனவாயின், இவ்வேதத் தமிழின் பெருமைகளை யாமே எடுத்துரைக்க வல்லேம்? இந்நாட்டு நான்குவருணத்து நன்மக்களும், இவர்கள் தமிழ்வேதங்களையே தந்நாடெல்லாம் பரவச்செய்து இவற்றையே மந்திரமாகக் கொண்டு சுபாசுபகருமங்களிலும், திருக்கோயில்களிலும் வழங்கி வழிபடலாயினர். இத்திருப்பாடல் அருளியோருள் வேந்தரும் உளரென்பதும், இவரது நற்றமிழாற்புகழ்பெற்ற மன்னர் பலரென்பதும், திருமுறைகளைத் தொகுப்பித்தோரும் அரசர் என்பதும் அறியப்படுதலாற் செந்தமிழ்வேத வளர்ச்சிக்கும் வேந்தர் காரணராயினரென்பதில் ஐயமில்லை.

## சேது வேந்தர்கள் தமிழ் வளர்த்த வகை

இவ்வாறு நந்தமிழ்மொழி வளர்ச்சி குலோத்துங்கச் சோழனுக்குப் பின் சில தலைமுறைவரை அரசபரம்பரையினராலும் பெருஞ்செல்வர்களாலும் இடையீடின்றி நிகழ்ந்தது. இம்மூவேந்தருக்குப்பின், இத்தமிழ் ஒழிந்து தேயத்து அரசர்கள் பலர் புகுந்து இத்தமிழ் நாட்டை யடிப்படுத்தியதனால் இத்தமிழ்மொழி இனிது போற்றப்படாதாக, இச்செந்தமிழ் நாட்டுப்பெரும் பகுதியை அரசாட்சி பெற்ற சேது வேந்தர்களே நமது தாய்மொழியாகிய நற்றமிழை நன்கு வளர்த்துவந்தார்கள், இவர்கள் முற்காலத்துப் புலவர் பலர்க்கு முற்றூட்டாக எண்ணிறந்த ஊர்களையும், யானை சிவிகை முதலிய வரிசைகளையும் அளித்தமைக்குச் சாஸனங்களும் சான்றுகளும் பலவுள்ளன.

இவ்வாறு அளிக்கப்பெற்ற புலவர்களுள் மிதிலைப்பட்டி அழகிய திருச்சிற்றம்பல கவிராயர் முதலாய புலவர் வழித்தோன்றியோர் இன்றும் அவ்வூர்களையும் வரிசைகளையும் உடையவர்களாக விளங்குகின்றார்கள். தெலுங்கு விஜய நகரத்தரசராலும், கன்னடம் மைசூர் அரசராலும் போற்றப்படுதல்போலத் தமிழும், பிற்காலத் தமிழ்வள்ளல்களான சேதுபதிகளானே பெரிதும் போற்றப்பட்டு வந்தது. இவ்வாறே கல்வியறிவொழுக்கங்களான் ஆன்று செல்வந்தானும் சிறந்த சைவாதீனத்தாரும் இத்தமிழ் வளர்த்தற் கண் மேம்பட்டு விளங்கினார்கள் என்பது நன்கறிந்ததாகும். இவருள் தலைமை வாய்ந்தோர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் களே ஆவார். இவ்வாதீனத்து விளைந்த செந்தமிழ் நூல்கள் அள வில்லன. இவர் செந்தமிழ்ப்பயிர் வளர்த்தலை நன்குதேர்ந்த சேது மன்னர்கள், இவர்கட்கும் எத்துணையோ ஊர்களை முற்றூட்டாக முற்காலத்தே உதவியுள்ளார்கள். இந்நன்றியினைப் பாராட்டிக் ''காவேரிநீரும் சேதுபதிகள் அன்னமும் ஆவுடையப்பிள்ளை நிழலும்'' தாமுடையவனாக அவ்வாதீனத்தார் இன்றைக்கும் வழங்குத லானே அஃதறியப்படும். இத்துணையுங் கூறியவாற்றாற் றமிழ் மகள் பெரும்பான்மையாக அரசர்களானும் பெருஞ்செல்வர் களானுமே நன்று வளர்க்கப்பட்டு வந்தனளென்பது அறியலாகும்.

இவ்வாறு செழித்தோங்கிய நம் தாய்மொழி, இக்காலத்துத் தன்னை வளர்த்தற்குரிய தமிழரசர்களும் தமிழ்ச்செல்வர்களும் அருகினமையாற் போற்றப்படாது நாளும் மறைந்து வருகின்றமை நாம் அறிந்ததே. ஊக்கம் அளித்து உதவுவோரின்மையான் இதனைக்கற்போரும் கற்றற்குக் காமுறுவோரும் மிகச் சிலராயினர். வழக்கின்கண்ணும் எத்துணையோ வேற்று மொழிகட்கு இடை யிடையே தமிழும் வழங்கப்படுவனவன்றி மற்றன்று. அவைதாமும் பண்டையுருமாறி எவ்வளவோ திரிபுடையவாகின்றன. வழக்கத் தமிழே இத்தளர்நிலை எய்திற்றாயின் செய்யுட்டமிழின் கதி யென்னும்? புலவர்வழித்தோன்றியோரும் தமிழினை முற்றமறத்த லான், அவர் தம் முன்னோர் அருநிதியம் எனத்தொகுத்த செந்தமிழ் முறைகளை இடருறுத்துஞ்செத்தை எனமதித்து ஆற்றி லிடுவாராயினர். இங்ஙனம் நாளும் நீர்வாய்ப்புகும் ஏடுகள் எண்ணிறந்தன. மற்றுஞ்சில சிதலுந் தீயும் உண்ணக் கவலையின்றி விடப்படுவன. இவற்றாற் கேடுறாது எஞ்சியவற்றுட் சிலவற்றைப் பல்வழியானும் முயன்று தேடித் தமிழ்வளர்ச்சி ஒன்றே கருதி ஆராய்ந்து, பலகுறிப்புகளுடன் தெளிவுபட அச்சிட்டு வெளிப் படுத்தியும், அவற்றைப்பெற்று உற்றுநோக்குவோர் சிலரே

யாயின், அவ்வேடுகளைத் தொகுத்து ஆராய்வோர் எத்துணைய ராவர் என்பது சொல்லவேண்டுவதன்று. இக்காலத்துப் பொருள் வருவாய்க்கு உரிய கல்விகள் இத்தமிழ்மொழிக் கண்ணன்றி ஆங்கிலமொழிக்கண்ணே உளவாயினமையான் நந்தமிழ், கல்வி யின்பம் ஒன்றே கருதிக் கற்கப்படுவதாயிற்று, ஜீவனோபாயங் கட்கே முட்டுப்பாடு பெரிதுமுடைய இக்காலத்து இன்பமே பயனாகக் கல்விகற்பார் மிகச்சிலர் என்பது உண்மையாதலின் இக் கல்வியின் பண்டைநிலை தளர்வுற்றது. நமது ஆங்கிலவரசாட்சி யார், தமது மொழியைப் பெரும்பான்மையாகவும். தமிழ் மொழியைச் சிறுபான்மையாகவுமே இந்நாட்டுக் கலாசாலைகளிற் பயில்விப்பது, பிறமொழியை இடைவிடாது பயிறலானே தாய் மொழியை முற்றும் மறவாமையாகிய அத்துணை நன்மையை மாணாக்கரளவிற்பயப்பதன்றி வேறன்று. (அந்நன்மையும் இனி யுளதாவதோ அன்றோ தெரியோம்.)

## மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவியமை

இத்தளர்நிலையினின்றும் நம் தாய்மொழியை வளர்நிலையில் நிறுவும் வள்ளல்கள் யாவரேனும் உளராகாரா என்று தமிழுலகம் அவாவுகின்ற இக்காலத்துத் தமிழறிஞர்க்குப் பெரும் பொருளு தவிச் செந்தமிழ்ப் பெருநூல்கள் வெளியிடுவித்து மதிநுட்ப நூலோடுடைய புலவர் குழாத்துள் வீற்றிருந்து தமிழாராய்தலையே பேரின்பமாகக் கருதியோரும், நாடெலாம் புகழ்பெற்ற ராஜ்ய தந்திர மகாநிபுணருமாகிய இராமநாதபுரம் **ஸ்ரீமாந்-பொன்னு சாமித் தேவர்கள் அவர்கள்** அருமைப் புதல்வரும், தந்தந்தையார் நல்லொழுக்கம் போற்றி, அத்தமிழாராய்ச்சியிலும் அதனின் வளர்ச்சியிலும் நாளும் முயலும் அருங்கலை விநோதரும், பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய **ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள்**, சென்னை மாகாணக்கூட்டம் இம்மதுரை மாநகரிற் கூடிய காலத்து அறிஞர் பலரையும் ஒருங்குகூட்டி ஓர் பேரவை தொகுத்து, எவ்வாற்றாற் றமிழ் வளர்ச்சி புரியலாகும் என ஆராய்ந்தார்கள். அவ்வவையுள், தமிழ்க் கலாசாலை உளவாக்குதலானும், இறவாதுள்ள தமிழேடுகள் பலவற்றையும் அச்சிட்ட தமிழ் நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறு ஒருவழித் தொகுத்துவைத்தலானும், வெளிவராத அரிய தமிழ்நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுப் பரவச் செய்த லானும், வடமொழி ஆங்கிலம் முதலிய பிறபாடைக்கண்ணுள்ள அரியநூல்களைத் தமிழின் மொழிபெயர்த்துப் பதிப்பித்தலானும், தமிழ்க்கல்வியே பற்றிய பத்திரிகை வெளியிடலானும், தமிழிற் பரீக்ஷைபல வைத்து உயர்தரத்தே தேறியோர்க்குப் பட்டம் பரிசு

முதலிய அளித்தலானும்' தமிழறிஞரான் உபந்நியாஸங்கள் புரிவித்தலானும், இக்காலத் தமிழறிவு மிக்கார் பலரையும் ஒருங்குகூட்டித் தமிழாராய்தலானும், வேண்டும் நூல் உரை முதலியன செய்வித்தலானும், பிறர் செய்த நூல் உரைமுதலிய வற்றை அரங்கேற்றுவித்தலானும், தமிழினை வளர்த்தலாகும் எனத் தேர்ந்து, முற்காலத்துத் தமிழ் விளைந்த நிலமாகிய இம்மதுரை மாநகரையே இவையெல்லாம் நிகழ்த்துதற்குரிய தலைமை யிடனாக்கி, 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' எனப் பெயர்தந்து ஓர் தமிழ்க்கழகம் நிலைபெறுவித்துத் தமிழ்வளர்த்தற்கு முயல்வாரா யினர்.

இவ்வயைத்துத் தமிழ்வளர்த்தலையே தம் குலவொழுக்க மாகக் கொண்டபெருவள்ளலும், நுண்ணறிவானும் பெருங் கல்வியானும் மேம்பட்டு அறிஞர்பலராற் பெரிது புகழப் பெற்ற செந்தமிழ் வேந்தருமான இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் மாட்சி பொருந்திய ஸ்ரீமத் விஜய ரகுநாத பாஸ்கரசேதுபதி மகாராஜர வர்கள், தாம் செய்வதற்குரிய பேரறங்களுட்டலைமையான இச் செந்தமிழ்ப் பரிபாலனம் நிலைபெறுதற்கு உரியகாலம் வாய்த்த தென்று பெருமகிழ்ச்சியுடையராய் முன்வந்து, இச்சங்கம் பெரும் பான்மையும் நன்னிலையில் நடைபெறுமாறுவேண்டும் பொருளுதவி புரிந்து, அவ்வுதவி என்றும் நிகழுமாறு தக்கசாஸனமும் அளித் தார்கள். இவ்வேந்தர் பெருநன்றி, இத்தமிழுலகம் என்றும் பாராட்டற்பாலது. இத்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனுதிபதியவர் களாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள் இப்பேருதவி பெற்றும், தாமே வேண்டுவன உதவியும், பிறரை உதவவித்தும் இச்சங்கம் பொருளாற் குறையுருவாறு முயன்று வருகின்றார்கள்.

## சங்கம் தமிழ் வளர்ச்சிக்கு முயன்ற வகை

மேற்கூறியவாறே, இத்தமிழ்ச் சங்கத்தின் அங்கங் களாக 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்னும் பெயரான் உண்டி உடை முதலியவளித்து மாணக்கர்க்குச் செந்தமிழ்க் கல்வி பயிற்றும் கல்லூரியும், 'பாண்டியன் புத்தகசாலை' என்னும் பெயராற் பல்லோர்க்கும் பயன்படும் பெரிய நூனிலையும், நூல் பத்திரிகை முதலியன எளிதின் வெளி யிடற்குச்' சாதனமாய்த் தமிழ்ச்சங்க முத்திராசாலை' என்னும் பெயரான் ஓர் பெரிய அச்சுக்கூடமும் உளவாக்கப் பெற்றன. இவையன்றி, இத்தமிழ்நாட்டு அறிஞர் பலரை வித்வத் அங்கத் தினராக வேண்டி, இச்சங்கத்திற்குக் கல்வியான் உதவற்கண்

அவர் உடன்பாட்டோடு ஓர் 'கல்விக் கழகமும்' கூட்டப் பெறுகின்றது, தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன ஆராய்தற் பொருட்டு இவ்வவையார் ஆண்டுதோறும் இம்மதுரையில் ஒருங்கு சேர்வர். இவருட் பெரும்பாலார் ஒருங்கு சூழ்ந்தவற்றையே இச்சங்கம் முற்பட நிகழ்த்தற்கு ஒருப்படும். தமிழ்ப் பரிக்ஷைகள், ஆங்கிலக்கலாசாலை மாணாக்கர்க்குத் தமிழில் ஊக்கமளித்தற் பொருட்டு அவர் கற்கின்ற சர்வகலாசாலைத் தமிழ்ப்பாடங்களிலே ஆண்டுதோறும் நிகழ்த்துதல் கருதி, இச்சங்கத்தாரால் இவ்வருஷ முதலாகத் தொடங்கப் பெறுகின்றன. அச்சிடாத செந்தமிழ் நூல்கள் தேடி வருதற் பொருட்டுத் தமிழறிவுடையார் பலரை இந்நாட்டுப் பல ஊர்கட்குச் செலவித்து அவர் நன்முயற்சியாற் கிடைத்தவெல்லாம் ஒருவழித்தொகுக்கப்பட்டு நல்ல காகிதபுத்தகங்களிற் பிரதிகள் செய்யப் பெறுகின்றன. அச்சிடாத பழையதமிழ் நூல்களுள் அகநானூறும் மாறனலங்காரமும், அச்சிட்டருகியவற்றுள் யாப்பருங்கலக்காரிகையும் தண்டியலங்காரமும் உரையுடன் இச்சங்கத்தினின்றும் இப்போது அச்சிட்டுவெளியிடுவதற்குரிய நூல்களாகத் தெரியப் பெற்றுப் பரிசோதிக்கப்படுகின்றன. இவற்றால் இச்சங்கம் தமிழ்வளர்ச்சிக்கட் பல்லாற்றானும் முயறல் நன்கறியப்படும். இன்னும் இச்சங்கத்தைப் பற்றி அறிய வேண்டுவன யாவும் இச்சங்கத்தினின்றும் வெளிவரும் அறிக்கைப்பத்திரத்தான் இனிது விளங்கலாகும்.

## செந்தமிழப் பத்திரிக்கையின் தோற்றம்

இனிமேல், இச்சங்கத்தினின்றும் வெளியிடுவதாகக் குறித்த பத்திரிகை. வேண்டுங் கருவிகள் எல்லாம் முற்றப் பெற்ற ஓர் அச்சுயந்திரசாலை இச்சங்கத்திற்கு உரித்தாக்கச் செவ்விதின் அமைக்கப்பெறும் அளவும் தொடக்கம்பெருது நின்றது. இப்போது அது முற்றப் பெற்றமையான், இனி இது முதலாக, மாதந்தோறும் தவருமல் வெளிவரும். இஃது தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கறிவுறுத்தலானும், செந்தமிழ் வளர்ச்சியேசெய்தலானும், செவ்விதாய தமிழானே நடத்தலானும், செந்தமிழ்நாட்டுத் தலைநகர்க்கண்ணே தோற்ற முடைத்தாகலானும் 'செந்தமிழ்' எனப் பேர் பெற்று விளங்கும். இதுகாறும் அச்சிடப்பாடத செந்தமிழ் நூல்களும், தமிழ் நாட்டுப் புராதன சரிதங்களும், சாஸனங்களும். வடமொழியினும் ஆங்கிலத்தினும் தமிழற்கு—வேண்டுவனவாகக் கருதப்படும் நூல் மொழிபெயர்ப்புகளும், தமிழின் அருமைபெருமை அடங்கிய விஷயங்களும், தமிழாராய்ச்சியைப் பற்றியனவும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் இதன் வாயிலாக வெளி

வரும். கல்வியறிவாற் பெரியார் பலர் இதற்கு விஷயதானம் புரிதலால், இச்செந்தமிழ்ப் பத்திரிகை வளம் பல நிரம்பி விளங்குவதென்பது உற்றறியத்தக்கது. இதற்கு விஷயதானம் புரிவோர் பெரும்பான்மையும் இச்சங்கத்தின் கல்விக் கழகத்தினராவர். இது செந்தமிழ்வளர்ச்சி ஒன்றே கருதி வெளியிடப்படுதலான் அவ் வளர்ச்சியினை அவாவவும். அதனால் எல்லோரும் நம் செந்தமிழை நன்கு போற்ற வேண்டும், உதவிபுரிய வேண்டுமென எதிர் நோக்குகின்றேம்.

இச்சங்கத்தின் நன்னோக்கமெல்லாம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிக.

---

# தமிழர் வீரம்

## மும்முரசம்

நல்லாசிரியர் பல்லோரானும் நாடாள்வேந்தர்க்கு இன்றியமையாதனவாகச் சிறப்பித்தோதப்பட்ட பெருங்குணங்கள் மூன்று, அவை வீரம், நியாயம், தியாகம் என்பன. பண்டைக் காலத்து இத் தமிழ்நாட்டு மன்னர் கடைத்தலைகளில் இம்முக் குணங்களையும் தம் ஒலிவேற்றுமையால் அறிவுறுத்து முழங்கிய முரசங்கள் மூன்றுண்டு. இதனை, "இமிழ்குரன் முரச மூன்றுடனாளுந்—தமிழ் கெழு கூடற் றண்கோல் வேந்தே" எனவரும் புறப்பாட்டுரையான் உய்த்துணர்க. "மூன்று முரச முகின் முழங்க (விக்கிரமசோழனுலா) எனவும் "பரம்புங், கடைத்தலை மும்முரசங் கண்ணிரட்ட" (சங்கரசோழனுலா) எனவும் வருதல் காண்க. இத்தமிழரசர் பெரும்புகழெல்லாம் இம் முக்குணங்களடியாகவே பிறந்தனவாம். இம்மூவகைப் புகழினும் அரசர்க்குத் தலைசிறந்து வீரப்புகழே என்பர். இதனை "மறம் வீங்குபல்புகழ்" என்னும் பதிற்றுப்பத்துக்கு (2, 2) "அரசர்க்குச் சிறந்த மறப்புகழ்" மற்றைப் புகழினும் மிக்கபல்புகழ் என்றவாறும் என அதனுரையாசிரியர் கூறு மாற்றானுணர்க. அன்றியும் பிறரை நியாயநெறிப் படுத்தற்கண்ணும், பிறர்க்கு வேண்டுவதொன்று கொடுத்தற் கண்ணும்இவ்வீரச்செயல் நிகழ்தலானும் இதன்றலைமை நன்கறியத்தக்கது. இரகு எனப்புகழ்பெற்ற இரவிகுல வேந்தன் பெருவேள்வி வேட்டு உள பொன்னனைத்தையும் அந்தணர்க் களித்து வறியனாய் மட்கலங்களே தனக்குரிய உபகரணங்களாகக் கொண்டுள்ள ஏல்வைக்கண், தன்பாற் பெரும் பொன்வேண்டி எய்திய பிரமசாரி ஒருவற்கு இல்லையென்றுரையானாய் அஃதீவே னென்று கூறிக் குபேரன்பாற் போர்க் கெழுந்தமை கொடைக்கட்டோன்றிய வீரமாம். இராமன் இலங்கை கொள்வதன் முன்வீடணற்கு அதனைக் கொடுத்தும் இஃதென்ப, இவ்வென்றியொடு கூடிய கைவண்மையினையே ஊன்பொதிபசுங்குடையார் என்னுஞ் செந்தமிழ்ச் சான்றோர், நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னிபாற்

சிறப்பித்து அவனை ''ஒன்னாரெயி லவர்கட் டாகவு, நுமதென்ப பாண்கடனிறுக்கும் வள்ளியோய்'' (புறம்—203) எனப் புகழ்ந்தார்.

## வீரத்தின் தலைமை

மேற்சொல்லிய மூவகை முரசினும் வீரமுரசினையே நீராட்டி, கட்டிலேற்றி, ஒலிநெடும் பீலியு மொண்பொறி மணித்தாரும் பொலங்குழை யுழிஞையும் பொலியச் சூட்டிக், குருதிப் பலியீந்து பூசை செய்தலும் பண்டைவழக்காம். இதனை ''மாசற விசித்தவார்புறு வள்பின், மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை, யொலிநெடும் பீலியொண்பொறி மணித்தார், பொலங்குழை யுழிஞையோடு பொலியச் சூட்டிக், குருதி வேட்கையுருகெழு முரச, மண்ணிவாரா வளவை'' எனவரும் புறப்பட்டான் (50) உய்த்தறிக. இம்முரசினைப் போர்த்தற் குரிய தோலும் வீரம்பற்றியே கொள்ளுவர். ''புனைமருப் பழுந்தக்குத்திப் புலியொடு பொருதுவென்ற, கனைகுரலுருமுச் சீற்றக் கதழ்விடையுரிவை போர்த்த, துனைகுரன் முரசத்தானை'' எனவருஞ் சிந்தாமணியானும் (முத்தி—301) ''உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து, மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி' எனவருஞ் சிலப்பதிகாரத்து (இந்திரவிழவு) அடியார்க்கு நல்லார் ''புலியைப் பொருது கொன்றுநின்று சிலைத்துக் கோட்டு மண்கொண்ட ஏறு இறந்துழி அதனுரி வையை மயிர் சீவாமற் போர்த்தமுரசு' என்பது முதலாகக் கூறியவாற்றுனும் உணர்க. இதனாலும் அவ்வீரத்தின்றலைமை ஆராயத்தக்கது. 'மாண்டவறநெறி முதற்றேயரசின் கொற்றம் (புறம்—55) என்று கூறுபவாதலால் இவ்வீரம் நியாயத்தினும் தியாகத்தினும் வழுவாது நிகழுமென்று கொள்க. அரசர்க்குச் சிறப்பாக இவ்வீரத்தைப் புலப்படுத்துகின்ற உடையும். மாலையும், அணியும், பிறவுமுண்டு. அவை, வீரவுடை, வென்றி மாலை வீரவளை. வீரக்கழல் முதலியனவாம். தாளணியாகிய வீரக்கழலிற் பண்டுத் தாம் செய்த அரிய வீரச்செயல் களைப்பொறித்தலும் முன்னைவழக்கம். இதனை 'ஒண்பொறிக் கழற்கால்' என்னும் பதிற்றுப்பத்திற்கு (4, 4) 'தாங்கள் செய்த அரிய போர்த் தொழில்களைப் பொறித்தலையுடைய ஒள்ளிய கழற்கால்' என அதனுரையாசிரியர் கூறியதனுன் உணர்க. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பான் ஏழர சரை வென்று, அவர்கள் எழு முடியானுஞ் செய்ததோர் ஆரத் தினைத் தன் திருமார்பில் அணிந்திருந்தான் என்பர், (பதிற்றுப் பத்து-2,4) இவ்வரசர் அரண்மனைவாயிலில், வலியறியா

தெதிர்க்கும் பகைவரை ஆண்மையழித்து மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுவதற்கு இவை தருதல் ஒருதலையாம் என்னும் வீரச்செயலை வெளிப்படுக்கும் பெருங்குறியாகப் பந்தும் பாவையுங் கட்டித்தூங்கவிடுவது முற்கால வழக்கம். இது 'செருப்புகன் றெடுத்தசேணுயர் நெடுங்கொடி, வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப், பொருநர்த் தேய்த்த போரறு வாயில்' என்னுந் திருமுருகாற்றுப்படையுரையான் அறியப்படும். கழாஅர் என்னும் ஊரிடத்திருந்த மத்தி யென்னும் வீரன், தன்னொடு பகைத்த எழினி என்பவனுடைய பல்லினை யெறிந்து, அதனைத் தனது வாயிற் கதவிற் கட்டிய மணியில் அழுத்திவைத்திருந்தனன் என்ப. இதனைக் கல்லாவெழினி பல்லெறிந் தழுத்திய, வன்கட் கதவின் வெண்மணி வாயின், மத்தி' எனவரும் அகப்பாட்டான் (211) அறிக. இவ்வீரர் தம்மார்பினும் முகத்தினும்பட்ட விழுப்புண்களையே தமக்குச் சிறந்த அணிகலன்களாகக் கொண்டு, அப்போர்ப்புண்படாது கழிந்த நாள்களை வீணாள்களாகக் கருதுவர். முன்னைச் சோழனொருவன், ஒருநாட்போரில் தன் மார்பின்கட் டொண்ணூற்றாறு புண்கொண் டிருந்தானெனச் சிறப்பித்துப் புலவர் கூறுவர். இதனை 'மீதெலா மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்றும், புண் கொண்ட வென்றிப் புரவலனும்' (விக்கிரமசோழனுலா) 'புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணகத், தொண்ணூறு மாறுஞ் சுமந்தோனும்' (சங்கரசோழனுலா) என்பனவற்றானுணர்க. கூற்ற முடன்று மேல் வரினும் பிறக்கடியிடாமையும், பகைவரை வெகுண்டு நோக்கிய கண்சிறிதும் இமையாமையும் இவ்வீரர்க்குச் சிறந்த பெருங் குணங்களாகும்.

## வீரத்திலும் அறம்

மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெருதோனையும் மயிர்குலைந் தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண்பெயரோனையும் படையிழந்தோனையும், ஒத்தபடையெடாதோனையும் பிறவுமித்தன் மையுடையோரையும், கொல்லாது விடுதலும் கூறிப்பொருதலும் இவ்வீரர்க்குச் சிறந்த அறமென்பர் (தொல். புறத்; 10). எவ்வாற் றானும் புறங்கொடுத்தலையும், புறப்புண்படுதலையும் பேரிளிவரவா யெண்ணி நாணி உயிர்துறப்பார் வீரர். சேரமான் பெருஞ்சேர லாதன், சோழன் கரிகாற் பெருவளத்தானோடு வெண்ணி யென்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களத்துப் பொருதவழி, அவன்மார்பு குறித்து விடுத்த அம்பு மார்பைத்துளைத்துஊடுருவி முதுகினின்று வெளிப் பட்டமையானுளதாகிய முதுகிற் புண்ணும் புறப்புண்ணாகுமென்று

நாணித் தன்கையிற் பிடித்தவாளோடு வடக்கிருந்துயிர் துறந்தான் என்பர். இதனைத் 'தன்போல் வேந்தன், முன்பு குறித்தெறிந்த புறப்புண்ணுணி, மறத்தகைமன்னன் வாள்வடக்கிருந்தனன்' என்னும் புறப்பாட்டானும் (65) 'கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப் பொருதுபுண்ணுணிய சேரலாத, னழிகள மருங்கின் வாள்வடக்கிருந்தென, வின்னு வின்னுரை கேட்டசான்ரூே, ரரும் பெற லுலகத்தவனொடு செலீயர், பெரும் பிறிதாகி யாங்கு' என வரும் அகப்பாட்டானும் (55) அறிக. மார்பு குறித்தெறிய ஊடுரு வியதாலுளதாகிய முதுகிற்புண்ணும் புறப்புண்ணென நாணப்பட்ட தென்பதொன்ருனே பண்டைத்தமிழர் பெரு வீரம் நன்கறியப், படும். பெருஞ்சேரலாதன் மரிக்கின்ருன் என்ற இன்னுமையும். புறப்புண்பட்ட பழிதீரவிருந்து உயிர்விடுகின்ருனென்ற இனிமை யும் உடைமையால் வாளோடு வடக்கிருந்தானென்னும் இன்னு வின்னுரையைக் கேள்வியுற்ற அவன் படைக்கமைந்த வீரர்பலரும் அவன்புக்குழிப் புகவேண்டி உயிர்துறந்தார் என்பதும் மேற்காட் டிய அகப்பாட்டால் அறியக்கிடத்தலால் இத்தமிழரசர்க்கும் அவர் படை வீரர்க்கும் வீரங்குறித்துளதாய பெருநட்பு ஆராயத்தக்கது. இவ்வரசரும் தம்படைவீரர்க்குக் கவசம்போலப்போரில் அவர் முன் னின்று அவரைப்பாதுகாப்பது வழக்கம். இதனைச் 'சான்ருேர் மெய்ம்மறை' என்னும் பதிற்றுப்பத்திற்குச் 'சான்ருேர்-போரில மைதியுடைய வீரர். மெய்ம்மறை- மெய்புகு கருவி. இச்சான் ருேர்க்கு மெய்புகுகருவிபோலப் போர்புக்கால், வலியாய் முன் னீற்றற் சிறப்புநோக்கி இதற்குச் சான்ருேர் மெய்ம்மறையென்று பெயராயிற்று' என அதன் உரையாசிரியர் கூறியதனுன் அறிய லாகும். இப்படை வீரரெல்லாம் தொன்றுதொட்டே வீரச் செயலிலே காழ்த்த மறக்குடியினராவர்.

## மறக்குடிப்பெண்டிர்

இக்குடிப்பெண்டிரும் இவ்வீரச்செயலொன்றற்கே மகிழ்வர். ஒருத்தி தன மகன் படைக்கு வலியழிந்து புறங் கொடுத்தோடினன் என்று பலர் கூறக்கேட்டு, அவ்வாறு போருக்குடைந்தனுயின் அவன் பாலுண்டுவளர்தற்குக் காரணமாகிய என்முலைகளை அறுத் திடுவேன் என்று வாள்கைக் கொண்டு, படுகளம் புகுந்து பிணங் களைப் பெயர்த்துத்தேடுவாள் இருதுணிப்பட்டுக்கிடந்த மகனுடல் கண்டு, அவனையீன்ற நாளினும் பெரிது மகிழ்ந்தனள் என்னும் பொருள் புலப்படுத்துவரும் புறப்பாட்டான் (278) இஃதறியலாகும். இம்மறமகள் முன்னுட்டந்தை களம்புக் கொழிந்தமைக்கும், நேற்றுக் கொழுநன் போரிற்பட்டமைக்கும் அஞ்சாளாய் இன்று

போருக்குரிய பறை முழக்கங்கேட்ட மாத்திரையின் மகிழ்ந்து தன்னொரு மகனைச் செருமுகநோக்கிச் செல்கவென்றுவிடுவள் (279) என்பதனால் இக்குடிக்கு இயல்பாயுள்ளவீரம் நன்குதேறப் படும்.

## காவன் மரம்

இனி, இத்தமிழ்நாடாண்ட அரசர்பலர் தம்மரசு நிலையிட்ட தலைநகர்க்கண் தம்வீரத்துக்கறிகுறியாய்த் தம்மாலும் தம்படை வீரராலும் சிறப்பித்துக்காக்கப்பட்ட 'காவன்மரம்' எனப் பெயரிய மரங்கள் பல இருந்தனவென்பது பண்டைநூல்களால் அறியப்படுகின்றது. தங்காவன் மரத்தினைப் பகைவரழியாமற் காத்தலும் பிறர் காவன் மரத்தினைத் தாமழித்தலும் ஒருவர்க்குச் சிறந்த வீரச்செயலாகும். தம்வென்றி தோல்விகட்குக் காரண மாதலால் இதனை அரண்பலசூழ்ந்த தலைநகரிற் பெருங்கா விடை வைத்துப் போற்றி வளர்த்தனரென்பது தெரிகின்றது. மோகூர் என்னும் ஊரிடத்துப் பழையராற் சிறப்பித்துக்காக்கப்பட்ட வேம்பாகிய காவன்மரத்தினைச் சேரன் செங்குட்டுவன் படை யெடுத்துச்சென்று வேரறக்கடிந்து அதனைப் பெருஞ்சகட்டேற்றி, அச்சகட்டினை யிழுத்தற்கு அம்மோகூர் மன்னர் ஏறுங்களிறு களையே கடாவாகவும், அப்பழையர் மகளிர் கூந்தல்களையே அரிந்து திரித்துக் கயிருகவும் கொண்டு பூட்டியுய்த்தனன் என்று கூறுவர். இதனைப் பதிற்றுப்பத்தினுள் ஐந்தாம்பத்தின் நான்கைந் தாஞ் செய்யுள்களாலும், அதன் பதிகத்தாலும் நன்றுணர்க. குறுக்கை என்னுமூர்ப்புறத்துப் புன்னையாகிய காவன்மரத்தினை விரும்பி அன்னிக்குந் திதியர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தமை 126, 145 அகப்பாட்டுக்களான் அறியப்படும். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்பான் நன்னன்என்பவனுக்குரிய வாகையினை வெட்டி அவனை வென்றமையும்பதிற்றுப்பத்தின் நான்காம் பத் திறுதியிலுள்ள பதிகத்தாலுணரப்படும். பகைவரை வென்று அவருர்க்காவன் மரங்களையே தம்யானைகளைப் பிணிக்கும் பெருந் தறியாகக் கோடல் ஒருவர்க்குச்சிறந்த வென்றியாம். இதனைக் "கடிமரந்தடித லோம்புநின், னெடுநல் யானைக்குக் கந்தாற் ருவே" (புறம்-57) என்பதனால் ஆராய்ந்து கொள்க.

## முப்படை

இனி, இத்தமிழ்நாட்டில் முடியுடை மன்னர்க்குப் போர்த் துணையாயமைந்த தானை, யானை, குதிரையென்னும் மூவகைப் படையின் பெருக்கமும் அளவிடப்படாதாகும். தேர் குதிரை

களால் இழுக்கப்படுவதாகலின் வேறு கூறப்பட்டதில்லை இதனைத் ''தானை யானை குதிரையென்ற நோனா துட்கு மூவகை நிலையும்'' என்னும் புறத்திணையியற் சூத்திரவுரையான் அறிக. இப்படைகளை முற்படை, இடைப்படை, கடைப்படை என மூன்றாக அணிவகுத் துரைப்பர். இவற்றை முறையே தூசி, இடை, கூழை என்னும் பெயரான் வழங்குவர். ஆலத்தூர் கிழார் என்னும் புலவர், சோழன் நலங்கிள்ளியின் படைப்பெருக்கினைச் சிறப்பித்துக் கூறுமிடத்துப் படைசெல்கின்ற வழியிலுற்ற பனைமரங்களில் நுங்கினைத் தலைப் படையும், பழத்தினை இடைப்படையும், அப்பழத்தின் கொட்டை களாலுண்டாகிய கிழங்கினைக் கடைப்படையும் நுகரும்படி அத் துணைநாள் படைச்செலவு நிகழ்ந்தது என்னுங்கருத்தில் ''தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய, விடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக், கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடு கிழங்கு நுகர'' எனவுரைத்தனால், இவ்வரசர் படைப்பெருக்கம் நன் றுணரத்தகும். நுங்கு பழமாங் காலம்வரை தூசிப்படையும், அப்பழத்தின் கொட்டை கிழங்காங்காலம் வரை இடைப்படையும். செல்லவேண்டிய அத்துணைப் படைப் பெருக்கத்தினையுடைய னென்பது இதன் கருத்தால்காண்க. இவற்றுள் யானைப் படை முன்னிற்றலையும், அவற்றை எறிதலையும், அவற்றை அகப்படுத்தலையும் போருக்குரிய சிறந்தவீரமென்ப ''களி றெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'' (புறம் 312) என்ப பண்டு இத்தமிழ்நாட்டு மன்னர்பலரும் ஆயிரக்கணக்கான யானைப் படையினையுடையராயினர். இவர் பிறர்யானைகளை வென்றகப்படுத் தியபோர்த் தொழில்களைச் சிறப்பித்து வரும் செந்தமிழ்ப்பாடல்கள் எண்ணிறந்தன. வேற்றரசரது ஆயிரம் யானைகளை ஒருபோரில் மாய் வித்தவீரனை ''பரணி'' என்பதோர் நூலாற் புகழ்ந்துபாடுவர். முன்னொருகாலத்துச் சோழன் படைத் தலைவனான கருணாகரத் தொண்டைமானென்பான் கலிங்க பட்டினத்து ஆயிரம்யானைகளை எறிந்து கொன்றமையைக் **கலிங்கத்துப் பரணி** என்னுநூலாற் புகழ்ந்துள்ளார். மற்றொரு சோழன் ஒருபோரில் தன்னொரு களிற்றினால் தன்பகைவரது ஆயிரங்களிற்றினையும் அகப்படுத்தின னென்று புகல்வர், இதனை 'பற்றலரை, வெப்பத் தடுகளத்தில் வேழங்களாயிரமுங், கொப்பத் தொருகளிற்றாற் கொண்டோனும்'' என வரும் **விக்கிரம சோழனுலா**வானறிக. இம்மன்னரெல்லாம் எத்துணையோ காலங்கட்கு முன்னரே போரிற்சிறந்த பெருவீரமும் அவ்வீரச்செயற்கேற்ற அரண், கருவி, படை, யானை, குதிரை, தேர் முதலியனவும் உடையராயிருந்தனரென்பது பண்டைத் தமிழ்நூலுணர்ச்சியுடையாரெவரும் எளிதிலறிவர்.

## நால்வகை அரண்

இவர், நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண் எனப்பட்ட நால்வகையரணும் உடையராயிருந்தனர். இவையன்றிப் பிறர்நீரரணை யழித்தற்கு வேண்டும் மரக்கலப்படையு முடையராயினர். பண்டொரு சேரன் கடலிற்றன்பெரும்படையினைச் செலுத்திக் கடம்பெறிந்ததனைப் பழைய நூல்கள் பலவற்றிலுங் காணலாம். ''கடற் கடம்பெறிந்த கடும்போர்வார்த்தையும்'' என்பது சிலப்பதிகாரம் (காட்சிக் கதை) இன்னும் ஒரு சோழன் பெரியகடற்கண் மரக்கலத்தை யோட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வாயு பகவானையழைத்து ஏவல்கொண்டானென்பர். இதனை,'' நளியிரு முந்நீர் நாவாயோட்டி, வளி தொழிலாண்டவுர வோன்மருக' எனக்கரிகாற்சோழனை வெண்ணிக்குயத்தியார் கூறியதனானறிக. 'வாதராசனை வலிந்து பணி கொண்டவவனும்' என்றார் கலிங்கத்துப்பரணியினும். 'உடைதிரைப்பரப்பிற் படுகடலோட்டிய, வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்,' என்னும் பதிற்றுப் பத்தினுள் 'கடலோட்டியயென்றது தன்னுள் வாழ்வார்க்கரணாகிய கடல் வலியையழித்தது என்றவாறு' என அதனுரையாசிரியர் கூறியதனான் நீரரணிருந்தமை ஆராய்ந்து கொள்க. உறையூர் காட்டரணுடையது. ''நொச்சிவேலித்தித்தனுறந்தைக், கன்முதிர் புறங்காட்டன்ன, பன்முட்டினதாற் றோழி நங்களவே'' எனவரும் அகப்பாட்டானறிக. பாரியினுடைய பறம்பு மலையரணுடையது. இதுமூன்றுபெருவேந்தரும், ஒருங்கு சேர்ந்து நெடுங்காலம் முற்றியும் அவராற் கொளற்கரிதாயிருந்தது எனச்சிறப்பித்துக் கூறுவர். இதனைக் ''கடந்தடுதானை மூவிருங்கூடி, வுடன்றனிராயினும பறம்புகொளற்கரிதே' என்பது முதலாகவரும் புறப்பாட்டுக்களானறிக. இவ்வரண்கள் போர்நிகழ்காலத்து நெடுங்காலம் அடைமதிற்பட்டால் அகத்துள்ளார் நன்றுயிர் வாழ்தற்குப் போதுமான விளைவினை விளைத்துக் கோடற்குரிய குளனும் விளைநிலனும் உடையவாகச் செய்யப்பட்டனவாகும். இதனை ''நாடுகண்டன்னகணை துஞ்சு விலங்கல்'' என்னும் பதிற்றுப்பத்திற்கு அதனுரையாசிரியர் ''நெடுநாட்பட அடைமதிற்பட்டகாலத்தை விளைத்துக் கோடற்கு வயலுங் குளமு முளவாகச் சமைத்துவைத்தமையாற் கண்டார்க்கு நாடுகண்டாற் போல்ற அப்புக் கட்டுகள் தங்கும் மலைபோன்ற இடைமதில் என்றவாறு'' எனக் கூறுதலானுணர்க.

பண்டொரு காலத்து மேற்கூறிய பாரி யென்னும் வள்ளற்றலைவற்குரிய பறம்பு என்னும் மலையரணை, சேரன், பாண்டியன், சோழன

எனப்பட்ட மூவரும் படையெடுத்து வளைத்திருந்த காலத்து நெடுங் காலம் அடைமதிற்பட்டதாக, ஆண்டிருந்த பாரிக் குயிர்த்துணை யாய்ச் சிறந்த கபிலர் என்னும் புலவபெருமான் கிளிகளைப்பழக்கி அரண்புறத்து நெடுந்தூரத்துள்ள விளைநிலன்களினின்று விளைகதிர் களைக்கொணர்வித்து, அப்பாரியையும் அவன் படைகுடிகளையும் முற்றுகை நீங்கும்வரை பாதுகாத்தனரென்பர். இவ்வரியசெயலை "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன் சூழச்சேய்நின்று, செழுஞ்செந் நெல்லின் விளைகதிர் கொண்டு. நெடுந்தாளாம்பன் மலரொடு கூட்டி, யாண்டுபல கழிய வேண்டு வயிற்பிழையா, தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி, யேந்து கோட்டியானை வேந்த ரோட்டிய, கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" என்னும் அகப்பட்டானும் (78) "இதனுட் 'கபிலன் சூழ' என்றது பாரியை அரசர் மூவரும் வளைத்திருப்ப அகப்பட்டிருந்து உணவில்லாமைக் கிளிகளை வளர்த்துக் கதிர் கொண்டுவரவிட்ட கதை" எனவரும் அதனுரையானும் நன்கறிந்து கொள்க. போர்களிற் பறவைகளைப் பழக்கிப் பயன்கொள்ளும் இவ்வரிய செயல் இக்காலத்து மேற்றிசை வீரர்களாற் சிறப்பித்துப் பாராட் டப்படுவதொன்று. இஃது இன்றைக்கு ஈராயிரவருஷங்கட்கு முன்னர் இத்தமிழ் நாட்டகத்து மூவேந்தருக்கும் பாரிக்கும் நிகழ்ந்தநெடும்போரில் நடந்த பெருஞ்செயலாகக் காண்டலால் இத்தமிழரது தொன்மைப் பட்ட யுத்த நாகரிகம் நன்கறியப்படும். இவ்வாறு இத்தமிழ்மூவேந்தரும் அவர் படைத்தலைவரும் குறுநில மன்னரும்நிகழ்த்திய வீரச்செயல்களை ஒவ்வொன்ருக எடுத்துரைக் கப்புகின் வரம்பிலவாக நிறையும்.

## புரிந்த சில வீரச்செயல்கள்

சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுத்துச் சென்று தமிழரசரை இகழ்ந்த ஆரியவரசர்களாகிய கனகவிசயரையும், அவர்க்குப் போர்த்துணையாகிய உத்தரன், விசித்திரன், உருத்தி ரன் முதலிய ஆரியமன்னரையும் பதினெட்டு நாழிகைப் போரில் தோற்பித்து வென்றனன் என்பது சிலப்பதிகாரம் கால்கோட்கா தையானும், பதிற்றுப்பத்தினுள் ஐந்தாம்பத்தானும் அறியலாகும். தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டிலும் இராம இராவணயுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவதுரியோதன யுத்தம் பதி னெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயருஞ் செய்தயுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தவென்று பண்டைப்போருடன்

இதனையுஞ் சிறப்பித்தெண்ணுவர் (நீர்ப்படைக்காதை, 5-10). பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் (புறம் 183) எனவும், ''வடவாரியர் படைகடந்து, தென் றமிழ்நாடொருங்கு காண, புரைநீர் கற்பிற்றேவிதன்னுட, னரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்'' (மதுரைக்காண்டம், கட்டுரை) எனவும். வழங்கலாற் பாண்டியர் வடநாட்டாரியரை வென்றமை அறியப்படும். சோழன் கரிகாற்பெருவளத்தான் வடநாடுபுக்கு வச்சிரம், மகதம், அவந்தி யென்னுந் தேயங்களையாண்ட மூன்று பெரிய ஆரியவரசர்பால் முத்துப்பந்தரும், வித்தியா மண்டபமும், வாயிற்ருேரணமும் தன்வென்றிக்குத் திறையாகப் பெற்றனனென்பது சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையானுணரலாகும். இம்மூவேந்தரும் தந்தமக்குச் சிறப்பித்துக்கொண்ட விற்கொடியையும் மீனக்கொடியையும், புலிக்கொடியையும் குமரிமுதல் இமயம்வரையிலுமுள்ள நாடுகளைத் தம்மகப்படுத்தியதற்கு அறிகுறியாக இமயத்திற் பொறித்துவருதல் பண்டுதொட்டுப் போந்த பெருவழக்கம் என்பது பல நூல்களான் அறியப்படுகின்றது.

## வீரம் விளக்கல்

இங்ஙனம் வென்றியான் மேம்பட்டுத் துறக்கம்புக்க பெருவீரர் பெயரையும் அவர் ஆங்காங்குப் புரிந்த சிறந்த போர்ச் செயல்களையும் ஒரு நெடுங்கல்லில் எழுதி அதனை நட்டு, அதன் கண்ணே அவரைப் பிரதிட்டித்து மாலை, பீலி முதலியன சூட்டித் தெய்வமாக வழிபாடு புரிதலும் இத்தமிழ் நாட்டார் கொண்டதோர் தொன்மை வழக்கம். இதனை 'நடுகல்' என்னும் பெயரான் வழங்குவர். ''காட்சி கால்கோணீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தலென், றிருமூன்று வகையிற் கல்லொடு புணர'' (தொல், புறத், 5) என்புழி நச்சினர்க்கினியர் உரைத்தனுலும் ''ஆடவர், பெயரும் பீடுமெழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'' என வரும் அகப்பட்டானும் (131) இதன் தகைமை ஆராய்ந்து கொள்க. இனி இவ்வீரர் இறந்தது கேட்டு அவ்வக்காலத்து நல்லிசைப் புலவர் பாடியருளிய செந்தமிழ்ச் செய்யுட்களும் வீரச்சுவையே மிகுந்துள்ளனவாகும்.

''நனிபே தையே நயனில் கூற்றம்
விரகின் மையின் வித்தட் டுண்டனை

* * *

வளவ னென்னும் வண்டு முசுகண்ணி
யினேயோற் கொண்டனே யாயி
னினியார் மற்றுநின் பசிதீர்ப் போரே'' (புறம்-227)

''செற்றன் ருயினுஞ் செயிர்த்தன் ருயினு
முற்றன் ருயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
யிரந்தன் ருகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே (புறம்-226)

இத்துணையுங் கூறியவாற்ருன் இத்தமிழ் நாட்டார் பெருவீரம் ஒருவாறு ஆராய்ந்து கொள்க.

3

# ஆராய்ச்சி

## I. உள்ளமுடையான் நூலாசிரியர்

''சகரனாண்டு ஆயிரத்திருநூற்றின் முன்னையோர் வடமொழியினாற் செய்த சாத்திரத்தையெல்லாம் செந்தமிழினாலே செய்து முடித்தான் வெண்பைக்குடி நாட்டுப் பிரதேசம் பாண்டவன் மங்கலமான பஞ்சமாதேவி சதுர்வேதிமங்கலம் கடவூராரியன் திருக்கோட்டி நம்பி யென்று கருதுவது'' இவ்வாறு இச்சங்கத்திற் குக்கிடைத்த பழையதோருள்ளமுடையானேட்டினிறுதியிலுள்ளது. இதனா லிந்நூலாசிரியர் பெயர். ஊர், நாடு, கால முதலியன அறிந்து கொள்க.

## II. மதுரைத் திருவாலவாயுடையார் திருக்கோயின் மேலைக் கோபுரத்துள்ள கல்லெழுத்து

வடிவைத்த வேல்வல்ல வையந் தொழநின்ற மாறன் முன்னும்
படிவைத்த வுந்திப் பராக்ரம பாண்டியன் பார்புரக்க
முடிவைத்த பின்பு பரராசர் தங்கண் முறைமைவிட்டுக்
குடிவைத் தனர்வெய்ய கானிலும் வரனிலுங் குன்றிலுமே.

ஆலி விலிக்கு ளடங்கிய மாய னவனியெல்லாஞ்
சேலி லடக்கிய செண்பக மாறன்றெவ் வேந்தர்தம்மை
வேலி லடக்கிய வையந் தொழுதென்னன் மீண்டுமுன்னைக்
காலி லடக்குவன் கானத் தகுதொழிற் கார்க்கடலே.

# 4

## செந்தமிழ்ச் சான்றோர் திருப்பெயர்

எட்டுத்தொகை நூல்கள் பலவற்றிற் பெரும்பான்மை ஒவ்வொரு செய்யுளின் பின்னரும் பாடினோர் பெயர் எழுதப்பட்டுள்ளன. அவ்வப்பெயர்களை ஆராயுமிடத்து, அவை ஊர், குலம், நிலை, தொழில் முதலியன பற்றி அவ்வவர்க்கு வழங்கப்பட்டனவாதல் புலப்படுகின்றது. இக்காலத்து மக்கட்கிட்டு வழங்கும் பெரும்பான்யான தெய்வப்பெயர்கள், அக்காலத்துப் புலவர்பெயர்களுட் சிறுபான்மையவாகக் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| பிரமனார் | —புறம்- 357. |
| தாமோதரனார் | —புறம்- 172. |
| உருத்திரனார் | —குறுந்தொகை-274. |
| பெருங்கந்தனார் | —குறுந்தொகை-234. |
| கண்ணனார் | —அகம்-161. |

இவை முதலியன அக்காலத்தும் வழங்கிய தெய்வப் பெயர்களாகும். இக்காலத்து மக்கள் பால் அரியவாய இருடிகள் பெயர் பல அக்காலத்துப் புலவர்க்கு வழங்கிய வாதல்.

| | |
|---|---|
| கபிலர் | —புறம்- 8. |
| கோதமனார் | —புறம்- 336. |
| மார்க் கண்டேயனார் | —புறம்- 365. |
| வானமீகியார் | —புறம்- 358. |
| கோசிகனார் | —புறம்- 309, நற்றிணை 44 |
| கார்க்கியார் | —குறுந்தொகை 55. |

எனவரும் பெயர்களான் அறியப்படுகின்றது.

| | |
|---|---|
| நெடுங்கழுத்துப்பரணர் | —புறம்-291. |
| பெருந்தோட்குறுஞ்சாத்தனார் | —குறுந்தொகை 308 |
| நெட்டிமையார் | —புறம்-9. |
| முடவனார் | —புறம்-51. |

முதலிய பெயர்களை நோக்கின், மக்கட்கு வடிவுபற்றிய பெயரும் அக்காலத்துப் பெருவழக்கினவாதல் தெரியலாகும். நெட்டிமையார்- நெடிய இமையினையுடையார்.

| | |
|---|---|
| ஆவூர்கிழார் | —புறம்- 122. |
| இடைக்குன்றூர்கிழார் | —புறம்- 76. |
| கல்லாடனார் | —புறம்- 23. |
| கூடலூர்கிழார் | —புறம்- 229. |
| இடைக்காடனார் | —புறம்- 42. |
| கோவூர் கிழார் | —புறம்- 31. |

முதலியன ஊர்பற்றி போந்த பெயர்களாம். கல்லாடம்-சிவத்தலம். ''கல்லாடத்துக் கலந்தினிதருளியும்''என்பது வாசகம்.

குறமகள் இளவெயினி (புறம் 157) முதலியன குலம்பற்றியனவாகும். பிரமசாரி (நற்றிணை- 34.) நிலைபற்றி வழங்கிய பெயராகும்.

| | |
|---|---|
| வண்ணக்கன் பெரியசாத்தனார் | —புறம்- 125. |
| அறுவைவாணிகன் இளவேட்டனார் | —புறம்- 369. |
| கூலவாணிகன் சாத்தனார் | —மணி- பதிகம். |
| பெருங்கொல்லன் | —குறுந்தொகை 141 |

முதலியன தொழில்பற்றிப் போந்தனவாகும். வண்ணக்கன்-நாணய சோதகன். அறுவைவாணிகன்- ஆடைவிற்போன். கூலவாணிகன்-பதினெண் வகைத்தானியமும் விற்போன. கூலவாணிகன் சாத்தனாரைச் சீத்தலைச் சாத்தனார் என வழங்கலுமுண்டு. அவர் பிறர்பாடற் பிழைபொருது எழுத்தாணியாற் றந்தலையிற் குத்திச் சீயுண்டாகச் செய்ததனால் அவர்க்கு அப்பெயர் போந்ததென்ப. ''வள்ளுவர்முப்பாலாற், றலைக்குத்துத் தீர்வுசாத்தற்கு.'' என்பதனால் இக்கதையினை அறிக.

மதுரை நக்கீரர் (புறம்-59) உறையூர் முதுகூத்தனார் (புறம்-331)எனப்பல பெயர்கள் அவ்வப்புலவர் வதிந்த ஊரான் விசேடிக்கப்படுவன. அவற்றை ஆராயின், இம்மதுரை மாநகரொன்றின் கண்ணே ஐம்பதின்மருக்குமேற் செந்தமிழ்ப் புலவரிருந்தமை நன்கறியப்படும். இம்மதுரைப்பக்கத்து இன்றுமுள்ள-

| | |
|---|---|
| ஐயூர் | —புறம் 21. |
| இடைக் காட்டூர் | — |

ஒக்கூர் —புறம் 279
கொடிமங்கலம் —அகம் 179.
கள்ளிக்குடி —நற்றிணை 333.
பொதும்பில் —அகம்- 154.
கிள்ளிமங்கலம் —குறுந்தொகை- 76.
கோட்டியூர் —நற்றிணை- 211.
படுமாற்றூர் —குறுந்தொகை- ·76.
வேம்பற்றூர் —அகம் 157.

முதலிய சிற்றூர்களெல்லாம் பெரும் புலவரையுடையன வாயிருந்தமையும் புலப்படுகின்றது. பாரி என்னும் வள்ளல் ஆண்ட பறம்பு நாடென்பது (புறம்-110) அக்காலத்துப் பற நாடு எனவும் வழங்கப்பட்டமை பறநாட்டுப் பெருங்கொற்றனர் (அகம்-323) என்னும் பெயரான் அறியலாகும் இதனுண்மையினை ஆராயாமல் இக்காலதது. "நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப், பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி, பறநாட்டுப் பெண்டி ரடி" என்னும் பாடலுட் பாரிபறநாடு என்ப தனைப் பாரியறநாடு என மாற்றினரும் உளர். புறம், புறம்பு என்பன போலப் பறம், பறம்பு, என்பன ஒரு பொருளவாம்.

## பாடலரல் விசேடிக்கப்பட்டவை

சில அரும்பெயர்கள் அவ்வவர் இயற்றிய பாடலால் விசேடி கப்படுவன. இதனை:-

மதுரைக் காஞ்சிப்புலவன்—அகப்- 89, குறுந்தொகை- 173
மடல்பாடிய மாதங்கீரன்-குறுந்தொகை- 182, நற்றிணை 377
மருதம்பாடிய இளங்கடுங்கோ-நற்றிணை-50, அகம் - 9௰

பாலைபாடிய பெருங்கடுங்கோ—அகம் 5.
பாரதம் பாடிய பெருந்தேவனர்—நற்றிணை-83
கோடைபாடிய பெரும்பூதனர்—புறம் 259.
வெறிபாடிய காமக்கண்ணியார்—புறம் 271.

எனவரும் பெயர்களான் அறிந்துகொள்க.

## அருஞ்சொற்றொடரினெழுந்தவை

மற்றுஞ்சில அரியபெயர்கள் அவ்வவர் பாடலுள் வழங்கிய ஒவ் வோரருந்தொடர்மொழிப் பற்றி அவ்வப்புலவருக்கு வழங்கப்பட் டனவாகின்றன. இவ்வரும்பெயர் வழக்கினைப் புலங்கொளற்கு ஈண்டுச் சில செய்யுளடிகள் உதாரணமாகத் தந்துரைக்கப்படும்.

''உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரில்லையா னுற்ற நோயே'' —குறுந்தொகை-305

இது பாடியருளினர் குப்பைக்கோழியார் என்பார். இவ்வடிகளுட் குப்பைக்கோழியின் தனிப்போரினைத்தலைவியுற்ற நோய்க்கு உவமித்த பெருஞ்சிறப்புப் பற்றிப் பாடினர்க்கும் அதுவே பெயராக வழங்கினர் போலும்!

''.........தண்டுறை யூரனே
டிருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தி
யவனல் லகஞ்சே ரொருமருங் கினமே.''
-குறுந்தொகை-370

இது பாடினர் பெயர் வில்லகவிரலினர் என்பது. இவர் பரத்தைக்குந் தலைவற்கும் உளதாய நெருக்கத்திற்குப் போர் வீரர்களது விற்பிடித்த கைவிரல்களை உவமித்த பெருஞ் சிறப்பால், இது பாடிய புலவர்க்கும் வில்லகவிரலினர் என்னும் பெயர் வழங்கப் பட்டதாகும்.

''நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரத் பொத்திற் கதுமென வியம்புங்
கூகைக் கோழி யானத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே.'' —புறம்-364

இது பாடினர் கூகைக் கோழியார். இவர் பாடலுள் வழங்கிய கூகையுங் கோழியுமே இணைந்து இவர்க்குப் பெயராயினமை காண்க. இவர் ஊர் வாகை என்பதும், இவர்பரணருக்கு முற்பட்ட புலவர் என்பதும்,

''மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலவே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலை
பசும்பூட் பாண்டியன் வினைவல் லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
யொளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே.'' —பரணர்
குறுந்தொகை- 393

என்னும் பாடலால் அறியப்படுகின்றன. அகம்-125, 199 புறம்- 351 ஆம் செய்யுட்களால், வாகை என்பதோர் ஊருண்மை யறிக.

கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பொங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி.'' —புறம்-3

இது பாடினர் இரும்பிடர்த்தலையார். இவர் பாடலிலுள்ள ''இரும்பிடர்த்தலை'' என்னும் அருந்தொடரே இவர்க்குப் பெயரானவாறு கண்டுகொள்க.

''தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.''— புறம்- 243

இது பாடினர் தொடித்தலை விழுத்தண்டினர். இவர் பாடற்கணுள்ள அருந்தொடரே இவர்க்கும் பெயராயிற்று.

''கேட்டியோ வாழிவேண் டன்னை நம் படப்பை
யூட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை.''—அகம்-68

இது பாடினர் ஊட்டியார் என்பார். இவர் பாடலுள் வழங்கிய 'ஊட்டி' என்பதே இவர்க்குப் பெயராயினமை காண்க.

''காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலதர் கொல்லோ வனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே.''—குறுந்தொகை-290

இது பாடினர்பெயர் கல்பொருசிறுநுரையார் என்பது. இவர் தம் பாடலு ளெடுத்தாண்ட உவமையே இவர்க்குப் பெயராயிற்று.

''ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரி பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே.''—நற்றிணை 284

இது பாடினர் தேய்புரிபழங்கயிற்றினர் இவர் கூறிய உவமையே இவர்க்குப் பெயராயிற்று.

''யானே யீண்டை யேனே யென்னல
னேனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை

மீனெறி தூண்டிலி னிவக்குங்
கானக நாடனே டாண்டொழிந் தன்றே.''
—குறுந்தொகை -54

இது பாடினர் மீனெறிதூண்டிலார். இப்பெயரும் முன்னைய விரண்டும் போல எடுத்தாண்டவுவமை பற்றிவழங்கப்பட்டதாகும்.

கூத்தராற்றுப்படையுள், மலைபடுகடாஅ மாதிரத் தியம்ப என வழங்கியமைபற்றி அந்நூற்கு 'மலைபடுகடாம்' என்னும் பெயர் உண்டாயினவாறு போல, புலவர்க்கும் அவர் வழங்கிய அருஞ் சொற்றொடரே பற்றிப் பெயருண்டாயிற்றெனத் தோன்றுகின்றது. இவ்வாறே ஆராயப்புகின் இவ்வரிய புலவர் திருப்பெயரானே அறியக்கிடப்பன பலவாம்.

5

# குண்டலகேசி

## புகுமுகம்

இஃது தமிழிற் சிறந்த பழைய காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று. அவ்வைந்து காப்பியங்களாவன:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன. இவற்றுள் முதன் மூன்றனையும் கும்பகோணம் மகாவித்துவான் ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தாம் அரிதின் முயன்று பெற்ற பல பிரதிகளைக் கொண்டு செவ்வனம் பரிசோதித்துப் பல குறிப்புகளாற் றெளிவுபடுத்தி அச்சிட்டு வெளியிட்டதினால், அவற்றின் வரலாறெல்லாம் தமிழறிவுடையார் பலரும் நன்கறிவர். மற்றைக் குண்டலகேசி, வளையாபதி என்பன இரண்டும் செந்தமிழ்ப் பெருநூல்கள்வெளியிடுவதற்குத் தக்க பெரியாரிடத்து இன்னும் எய்தப் பெருமையால் அவற்றைப்பற்றி நன்கு தெரிதல் அரிதாயிருக்கின்றது. அவ்வாருயினும். இந்நூல்களினின்றும் சில செய்யுட்களை எடுத்தாண்ட சில பழைய நூல்களாலும் இவற்றைப்பற்றிக்கூறிய சில உரைகளாலும் இவற்றின் இயல்புகள் சிற்சில அறியப்படுகின்றன. அந்நூலுரைகளால் யாம் அறிந்தளவு அவற்றை வியக்கக்கருதி முதலிற் குண்டலகேசியைப் பற்றிக் கூறப்புகுந்தாம்.

இன்னும் வெளிவராத 'நீலகேசித்தெருட்டு' என்னும் ஜைன வாத நூலால் இக்குண்டலகேசியைக் குறித்து ஒருசில அறியக் கிடக்கின்றன. அந்நூலின்கண்ணுள்ள குண்டலகேசி வாத சருக்கம், புத்தவாதசருக்கம் என்னும் நான்கு பெரியசருக்கங்களில் அநுவதித்து மறுக்கப்படும். இக்குண்டலகேசிப் பாடல்களும், அதன்கட் கூறப்பட்ட புத்தக் கொள்கைகளுமேயாம். யாப்பருங் கலவிருத்திராலும், புறத்திரட்டாலும் குண்டலகேசி என்று அறியப்பட்ட மூன்ருன்பெருமைக்கணின்ருன்'' என்னுங் காப்புச்செய்யுண் முதலாகப் பலவற்றை அநுவதித்து

மறுத்தலால் இஃது அறியத்தக்கது. (குண்டலகேசி வாத சரு-20) குண்டலகேசி எனப் பெயர் பெற்ற ஓர் வணிககுல மகளின் வரலாறு கூறி, அவள் வைதிகர்முதலாகிய எல்லாச் சமயிகளையும் வென்று தன் பௌத்தமதத்தைப் பரவச்செய்தவாற்றை எடுத்துரைத்தலால், இந்நூல் குண்டலகேசி என்னும் பெயர் எய்தியது என்பது நீலகேசி மொக்கலவாதசருக்கம் ''என்றுளை முசுநோக்கி'' என்னும் பாடலுரையால் விளங்குகின்றது. இதனை மணிமேகலை நீலகேசி முதலிய நூற்பெயர் போலக்கொள்க.

## குண்டலகேசி வரலாறு

''குண்டலகேசி என்பாள் ஓர் வைசிய கன்னிகை; இவள் ஒருநாள் [1] பிராஸாதஸ்தலத்து விளையாடுகின்றாளாக, ஒரு [2]கிது வைசிய புத்ரன் காளன் என்பான்; [3] புத்ததரிசனங்கொண்டு பல்வழியுஞ் சோரவிருத்தி பண்ணிச்செல்வானை அரசன் வதிக்க என்றேவச் சிறைப்பட்டுப் போகின்றானை முன் சொன்ன குண்டலகேசி கண்டு காமபரவசையாக, அதனை அறிந்து அவளுடைய பிதா ராஜாவைக் கண்டு யாதானும் ஒருபாயத்தால் மீட்டு இவனுக்கு குண்டலகேசி என்னுங்கன்னிகையினை' விவாகவிதியாற் கொடுத்து இனிது செல்கின்ற காலத்து, ஒருநாள் [4] பிரணய கலகத்து [5]நர்மோக முகத்தால் ''நீகள்வனன்றோ'' என்று குண்டலகேசி சொல்லக் காளனுந் தன்னுள்ளத்தே சினங்கொண்டு, பின்பு ஒருநாள் வித்தியாஸாதன வியாஜத்தால் இவளைத்தனிக்கொண்டு ஒருபர்வதத்தேறி [7] ''நீ என்னை இவ்வாறு சொல்லுதலில் யான் உன்னைக் கொல்லத் துணிந்தேன்'' என்னக் குண்டலகேசியும் ''தற்கொல்லியை முற்கொல்லிய'' என்றதன்றோ? இவனையான் கொல்வேன்' என நினைந்து, ''யான் சாகிறேனாகில் உம்மை வலங்கொண்டு சாவல்'' என, அதற்கியைந்த காளனை வலங்கொள்கின்றாள் வரையினின்றும் வீழநூக்கினாள். நூக்கக் காளனும் புத்தஸ்மரணத்தினால் [6] மோக்ஷித்தனன். குண்டலகேசியும் [7] பர்த்ருவிரஹதுக்கிதையாகித் துறப்பனென நினைந்து பரஸமயங்க ளெல்லாம் நாவல்நட்டு ஜயித்துப் பௌத்த தரிசனங் கொண்டு முத்தி பெற்றனள்.'' (மொக்கலவாதசருக்கம், 20) என்று

---

1 மாளிகைமேடை 2 தூர்த்தனாகிய வைசியபுத்ரன் 3 புத்தஸ்மயம் 4 ஊடல் 5 பரிஹாஸவார்த்தை 6 மோக்ஷம் அடைந்தான 7 கணவனைப்பிரிந்ததுயரமுடைவளாகி.

மேற்குறித்த நீலகேசிச் செய்யுளுரையிற் கூறியவாற்ருன் இவள் வரலாறு முதலியன நன்கறியத்தக்கன. புறத்திரட்டில் குண்டல கேசி என்று குறிக்கப்பட்ட,

''வேரிக் கமழ்தா ரரசன்விடு கென்ற போழ்துந்
தாரித்த லாகா வகையாற் [1] கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடுத லென்றிவற்ருற் பாலிவின்றி நின்ருன்
பாரித்த தெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்.''

(இடுக்கணழியாமை, 14)

என்ற செய்யுள் இக்காளன் கதையைப்பற்றியது போலும்!

## வாத நூலாவது

குண்டலகேசி என்பாள் பரஸமயத்தாரோடு வாதித்து வென்றவாறு கூறுதலால் இந்நூலை 'வாத நூலாகவும்' அவள் வரலாறு முதலியன கூறுதலால் இதனைக் காவியமாகவுங்கொண்டு வழங்குவர். இந்நூன்முறைப்பற்றி இதன்பின் அநேக வாதநூல்கள் எழுந்துள்ளன என்பதும், அவையெல்லாம் இதுபோலவே பெயரிடப்பட்டுள்ளன என்பதும் யாப்பருங்கல் விருத்திகாரர், ''தருக்கமாவன:— ஏகாந்தமும், அநேகாந்தமும் என்பன; அவை குண்டலநீலபிங்கல அஞ்சனகால தரிசனதத்துவகேசிகளினும், சாங்கிய முதலிய ஆறு தரிசனங்களினும் கண்டுகொள்க.'' என்று கூறியதனுலும், நீலகேசியாலும் ஊகிக்கப்படுகின்றன. குண்டலகேசி என்பாள் ஆவணம் என்னும் ஓர் நகரத்து அருகசமயத்து நாதகுப்தனுர், என்பாரை வென்றனள் எனக் கூறுதலால், (மொக்கலவாதம், 21) அந்த ஜைனர் மிகச்சினந்து அக்குண்டலகேசியையும் அவளுக்கு உபதேசித்த ஆசாரியரையும் வாதித்து வென்றதாக 'நீலகேசி' என வேருெரு நூல் புனைந்துரைத்தனர் போலும்!

இக்குண்டலகேசிக்குப் பௌத்த மதோபதேசஞ்செய்த ஆசிரியன் உஞ்சைமா நகரத்திருந்த அருக்கசந்திரன் என்னும் பௌத்தன் என்பது.

———

1 வீரசோழியம் அலங்காரப்படலம் 1-ம் செய்யுளுரையில் எடுத்துக் காட்டப்பட்ட இப்பாடலில் ''சோரிக்கலத்தின் வகையால்'' என்ற பாட பேதங் காணப்படுகின்றது.

''இருப்பதென் னினியன்றியிதுநுனக் குரைத்தார்யார்
சுருக்கினை கடிதாகச் சொல்லெனக் கெனலோடுந்
திருக்கிளர் மதிலுஞ்சைத் தென்றிசை யதனகரு
ளருக்கசந் திரனென்னு மவாச்கிய னெனச்சொன்னாள்''

(குண்டலகேசிவாதம், 78)

என்னுஞ் செய்யுளால் விளங்குகின்றது. இவள் பரதகண்டத்து அக்காலத்துச் சிறந்த கல்விக்கழகங்களிலும், வேத்தவைகளிலும் வாதஞ் செய்ததற்குச் சென்று, பல்லோரும் இயங்குதற்குரிய கோட்டை வாயில் வழியில் நாவல்மரத்தினை நட்டு அவர் இயங்காமை விலக்கி, ஆங்குத்தன்னோடு வாதிப்போரைப் பெற்றபோது அதனைக்களைந்தெறிந்து பின்பு வாதம் புரிவதைத் தன் வழக்கமாகக் கொண்டிருந்தாள் என்பது,

''கருங்களிறுங் கலிமாவுங் கந்தோடு பந்தியவே
நெருங்குபுபோய் நீருண்ணு தேர்பண்ணு நெடுங்கடைக்குப்
பெரும்படையுஞ் சாராதிப் பெண்பாவி மரநட்டிங்
கிருந்தநன் றிறத்தினு லெனக்கரிது புகலென்றான்''

''வாயிலோ னுரைகேட்டு வடிக்கண்ணான் முகநோக்கிக்
கோயிலையான் புகவிலக்குங் குறையென்னை முறைதிருத்தும்
பூசலிங் குடையையோ பொருளிழவோ வுயிரிழவோ
நீயிலையார் பதனட்டதற்கு நிமித்தமிங் கென்னென்றான்''

''என்கருமம் வினவுதியே லிலிங்கியரி லென்னோடு
நன்குரைப்பார்த் தரல்வேண்டி நாவலங்கொம் பிதுநட்டே
னுன்கரும நீசெய்யாய் நுழைந்தறிவு முடையையேன்
மன்பெரியன்றிருந்தவையுண்மாற்றந்தாவெனச் சொன்னாள்''

''அப்படித்தே யெனின்வாயி லடைப்பொழிக யானைதே
ரெப்படியு மியங்குகநம் மிறைமகற்கு மிசைமினென்
றிப்படியா லிவையுரையா விலைநாவ லிறுத்திட்டா
டுப்போடு கனித்தொண்டைத் துயில்கொண்ட
துவர்வாயாள்''

(குண்டலகேசி வாதசருக்கம், 18, 19, 20, 21)

என்னும் பாடல்களால் அறியப்படுகின்றது. இஃது நாவலந் தண்பொழிலாதலான் (ஜம்புத்வீபம்) இதனை முற்றுந் தன்னறிவான் வென்று தன்னெறிப்படுத்தலைக் கருதியதற்கு அறிகுறியாக நாவலங் கொம்பு நட்டு வாதம்புரிதலை மேற்கொண்டனள் போலும்! இது பற்றி இவளை, எங்குஞ் சம்புரதியாய்த் திரிந்தாள் எனக்கூறுவர்.

—(மொக்கலவாதம் 20) இக்குண்டலகேசி, வாதத்தில்:—
"இறையாவன் நூல்யாது பொருளென்னை மற்றிவற்றின்
முறைபட்ட நிகழ்வுரைக்க முடிபுரைக்க வெனமொழிந்தாள்"

என்று இவ்வாறு பிறரை முதற்கண் வினவுதல் வழக்கம் என்பது. மொக்கலவாதசருக்கத்து "என்றலைவர்" என்னுஞ் செய்யுள் உரையால் விளங்குகின்றது. இவற்றையெல்லாம் குண்டலகேசி நூல் விவரித்துரைப்பதாகும்.

## முறைவைப்பு -ஓர்ஆய்வு

இனி இந்நூல், தமிழில் வழங்கும் ஐந்துகாப்பியங்களுள் நான்காவதாக வழங்கப்பட்டு வருகின்றது. இம்முறை வைப்புக்குக் காரணம் நன்கு புலப்படவில்லை. காலம்பற்றிக் கொள்வோமெனின்:— மணிமேகலை சங்கப்புலவருள் ஒருவரான சீத்தலைச்சாத்தனாராற் செய்யப்பட்டதாதலாலும் சிலப்பதிகாரம் அச்சாத்தனாராலே கேட்கப்பட்டதாதலாலும் அவ்விரண்டுஞ் சங்க காலத்து நூல்களாதல் பெறப்படும். ஆயினும், இவை திருக்குறட்குப் பிற்பட்ட நூல்களேயாகும். இதனை, "தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப் பொய்யில் புலவன் பொருளுரைதேருய்" என மணிமேகலையிற் கூறுதலான் அறிக (சிறை செய்காதை 61). "மணிமேகலை மேல் உரைப் பொருண் முற்றிய சிலப்பதிகாரம்' என்பதனாற் சிலப்பதிகாரம் மணிமேகலைக்குப் பிற்பட்டதாதல் தெள்ளிது. தொல்காப்பியத்துப் பாநிலைவகையே" என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர். 'இனிப்பலவடுக்கிப் பொருள் தொடராய் அறம்பொருளின்பம் வீடென்பன விராய்ப் பொருள் வேறுபடவருந் தரவு கொச்சகம் பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலியனவாம்" எனக்கூறுதலாற் சிந்தாமணி சங்ககாலத்துக்குப் பிற்பட்ட நூலாதல் புலப்படுகின்றது. புறத்திரட்டு என்னும் நூலில் வளையாபதி எனப் பெயர் குறித்து எடுத்தாளப்பட்ட செய்யுட்கள் பலவற்றுள்

" மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்ருர்க் குடம்பு மிகை யவை யுள்வழிப்
பற்ருய் வினையாய்ப் பலபல யோனிக
ளற்ரு யுழலு மறுத்தற் கரிதே " (துறவு, 46)

என்னுஞ் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. இஃது "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க, லுற்ருர்க் குடம்புமிகை" என்ற திருக்குறளினைத் (345) தன்கட்கொண்டு நிற்றலாக வளையாபதி திருக்குறட்குப் பிற்பட்டது என்பது மட்டுந் தெளியப்படும். வீரசோழியம் யாப்புப்படலம் 23-ம் செய்யுள் உரையுள் "குண்டலகேசி முதலான காப்பிய மெல்லாம் விருத்தமாம்" எனக் காணப்படுதலாலும், புறத் திரட்டிலும், நீலகேசித்தெருட்டிலும் எடுத்தாண்ட செய்யுட் களாலும் குண்டலகேசி பெரும்பான்மை விருத்தத்தாலாய தொடர்நிலைச் செய்யுள் எனத்தெரிகின்றது. விருத்தத்தாற் ரொடர்நிலைச் செய்யுள் நிகழ்ந்தகாலம் சங்ககாலத்துக்குப் பிற்பட்டதாம் என்பது, அச்சங்ககாலத்துச் செய்யப்பட்டன என்று தெளியப்பட்ட நூல்களாலே ஊகிக்கப்படும். இம் முறையால் நோக்கிற் சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி இம்மூன்றுஞ் சங்ககாலம் அல்லாமை விளங்கும். இவ்வாற்ருற் காலம்பற்றிக் கொள்ளுமிடத்து மணிமேகலை முதலாகக் கூறுவதே முறையாம்.

சமயம் பற்றி ஆராயுமிடத்துச் சிந்தாமணி ஜைனநூலாதலும் சிலப்பதிகாரம் பெரும்பான்மை பல சமயங்கட்கும் பொது நூலாயினும் சிறுபான்மை ஜைனச்சார்பாதலும், மணிமேகலை குண்டலகேசிகள் பௌத்த நூல்களாதலும் தெளிவாம். இனிப் புறத்திரட்டில் எடுத்தாளப்பட்ட வளையாபதிச் செய்யுட்களில்,

" பொருளொடு போகம் புணர்த லுறினு
மருளொடு சான்ற வருந்தவஞ் செய்ம்மின் "
" தவத்தின் மேலுறை தவத்திறை தனக்கலதரிதே "

என்பவற்ருல் தவத்தின் சிறப்பையும்.

" புகாவலை விலங்காய்ப் பொருதுபிற வூன்கொன்
றவா விலையில் விற்பானு மாண்டருகல் வேண்டும் "
" அறவகை யோரா விடக்கு மிசைவோர்
குறைவின்றித் தன் சுற்றந் தின்றன ராவர் "
" உயிர்க ளோம்புமி னூன்விழைந் துண்ணன்மின் "

என்பற்ற ற் புலாலுண்ணுமைச் சிறப்பையும் நன்கெடுத்துக் கூறுதலால், அவ்வளையாபதி பௌத்த நூலன்மை புலப்படும். நீலகேசித் தெருட்டில்:—

"ஊ ன்றின்ன லிழுக்கென்ன னுயிரினையு முளதென்ன
னேன்றலையு நோன்பென்ன னேக்குடைய கணிகையரே
போஷ்றிருந்து பொதியறுக்கும் புத்தன்றன் புன்னெறியை
யான்சென்றஃ தடிப்படுப்ப னெனக்கரும மிதுவென்றாள்"

(குண்டலகேசிவாதம், 14.)

எனக் கூறுதலாற் பௌத்த சமயத்துக்கு இவை கொள்கையல்ல வாதல் உணரத்தக்கது. இவ்வளையாபதிச் செய்யுட்களிற் கூறிய ஒழுக்கங்கள் ஜைனர்க்குப் பொருந்துவனவாம். இவ்வாறு கூறியவற்றால் பௌத்த நூல்களையேனும் ஜைன நூல்களையேனும் முற்படக் கூறுதல் முறையன்றி, இங்ஙனம் கலந்துரைத்தல் முறையன்றாகும். அன்றியும் இம்முறைவைப்பு வழக்கின் கண் உள்ளதன்றிப், பண்டை நூலுரைகளில் யாமறிந்தவளவிற் காணப்படவில்லை. ஒரு கால், மிகுதியாகவும் குறைவாகவும் அக்காலத்து இந்நூல்கள் சொல்லப்பட்ட முறையானே இவ்வாறு எண்ணப்பட்டன போலும்!

## புனை கதை மேலது

இனிக், காப்பியங்களுள் இக்குண்டலகேசி நான்காவதாக வழங்கப்படினும், வாதநூல்களுட்டலைமையாகவே வழங்கப் பட்டுள்ளது என்பது, மேற்காட்டிய யாப்பருங்கலவிருத்தியால் விளங்கலாகும். இங்ஙனம் ஓர் பெண்ணின் வரலாறு கூறி, அவள் பரசமயங்களை வென்று தன் சமயத்தை நிலைநிறுத்திய தாகக் கூறும் கருத்தும் மணிமேகலை என்னும் நூலுக்குப் பினபே உண்டாயிருத்தல் வேண்டும் எனத் தோற்றுகின்றது மணி மேகலை, குண்டலகேசி என்னும் இவ்விரு நூல்கட்கும் பிற்பட்ட நீலகேசித் தெருட்டு என்பதும் இவ்வாறே ஓர் பெண்ணின் செய்தி கூறி, அவள் பரசமயிகளை வாதத்தில் வென்றவாறு கூறுவதாகும். நீலகேசிக் கதையினைச் செவ்வையாக ஆராய்ந்தால, அது பொய்யே புனைந்து கூறப்பட்டது என்பது புலப்படும். நீலகேசி என்பாள் கபிலவாஸ்துவிற் புத்தரோடு நேரே வாதித்து அவரை வென்றாளெனக் கூறுதலால் இதனை அறிக. இக் குண்டலகேசியும் அவ்வாறு புனைந்துரைக்கப்பட்ட கதையினையுடையதாயினுமாம். பௌத்த ஜைனருக்குள் மதத் துவேஷம் விளைந்த காலத்தில் இந்நூல் செய்யப்பட்டதாகும்.

## சுவையுடைச் செய்யுட்கள் சில:

குண்டலகேசியினின்றும் எடுத்தாளப்பட்ட செய்யுட்களெல்லாம் சொற்சுவை பொருட்சுவைகளால் மிகச் சிறந்தனவாதல் காணப்படுகின்றது. அவற்றுட் சிலபாடல் வருமாறு:—

"வகையெழிற் றோள்களென்று மணிநிறக் குஞ்சியென்றும்
புகழெழ விகற்பிக்கின்ற பொருளில்கா மத்தைமற்றோர்
தொகையெழுங் காதறன்னாற் றுய்த்தியாந் துடைத்துமென்ப
ரகையழ லழுவந்தன்னை நெய்யினா லவிக்கலாமோ."

"அனலென நினைப்பிற்பொத்தி யகந்தலைக் கொண்டகாமக்
கனலினை யுவப்புநீராற் கடையறவவித்துமென்னார்
நினைவில்லாப் புணர்ச்சிதன்னா னீக்குது மென்றுநிற்பார்
புனலினைப் புனலினாலே யாவர்போ காமைவைப்பார்"

(புறத்திரட்டு, புணர்ச்சிவிழையாமை, 14, 15.)

"போதர வுயிர்த்தவாவி புகவுயிர்க் கின்றதேனு
மூதிய மென்றுகொள்வ ருணர்வினான் மிக்கநீரா
ராதலா லழிதன்மாலைப் பொருள்களுக் கழிதல்வேண்டா
காதலா லழுதுமென்பார் கண்பனி கலையலுற்றார்"

"அரவின மரக்கராளி யவைகளுஞ் சிறிதுதம்மை
மருவினாற் றீயவாகா வரம்பில்கா லத்துளென்றும்
பிரிவிமலாகித் தன்சொற் பேணியே யொழுகுநுங்கட்
கொருபொழு திரங்கமாட்டார் கூற்றையாருய்துமென்பார்"

(ஷ, யாக்கை நிலையாமை, 383, 384.)

"அற்றன் றுத லதுதான் மனஞ்செய்தல்
பொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனோர்த்தன்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர்குண மிக்கார்."

(நீலகேசி, பாயிரவுரை மேற்கோள்)

கெட்டகழு தைக்குரல தென்பர்குயில் கூவி
னட்டவர்கள் போன்மகிழ்வர் நண்பதனா டென்னை
பட்டபொருள் சொல்லலுற லுண்டெனினும் யாரும்
வெட்டென வுரைத்தலை விடுத்திடுமி னென்றான்."

(ஷபுத்தவாதசருக்கம், 74-ம் செய்யுளுரை மேற்கோள்)

நீலகேசியுரையிற்கண்ட இவ்விரண்டு பாடல்களும் குண்டலகேசிச் செய்யுட்கள் என்று ஊகிக்கப்படுகின்றன.

6

# அச்சிட்ட தொல்காப்பியச்செய்யுளியல் உரைகாரர் பேராசிரியர் என்பது

## உரையேடுகள் கிடைத்தமை.

இத்தமிழ்ச் சங்கத்தின் பொருட்டுப் பழைய தமிழ் ஏடுகள் தேடுதலை மேற்கொண்டு யான் சில மாதங்கட்கு முன்னர்த் திருநெல்வேலிப் பக்கத்துப் பலவிடங்கட்குச் சென்று பிரதிகள் தொகுக்குங் காலத்து ஆழ்வார் திருநகரியில் இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்கு முன்னிருந்த சிறந்த செந்தமிழ்ப் புலவரும் மாறனலங்காரவுரையாசிரியருமாகிய கவிராஜகேசரி திருமேனி இரத்தினகவிராயர் வழித்தோன்றிய தாயவலந்தீர்த்த கவிராயர் வீட்டில் வெளிவராத சில தமிழ் நூல்களுடன் தொல்காப்பியச் செய்யுளியல் உரையேடுகள் மூன்று கிடைத்தன. அவற்றுள் இரண்டு நச்சினார்க்கினியருரை என்றும் மற்றொன்று பேராசிரியருரை என்றும் எழுதப்பட்டிருந்தன.

## அச்சுப்பிரதியோடு ஒத்திட்டுப் பார்த்தமை.

இவற்றுட் பேராசிரியருரை என்ற ஏட்டினைச் சிறிது உற்று நோக்கியவிடத்து, அது, அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரையின் வேறாகாமை காணப்பட்டது. செய்யுளியலுரை அச்சுப்பிரதியையும் திருநகரியிற் கிடைத்த அவ்வியலுரைத் தனிப்பிரதியையும் ஒவ்வொரு சூத்திரவுரையாக ஒப்பு நோக்கிய போது அவ்விரண்டும் முழுவதும் ஒத்து "எண்ணிடை யொழிதலேதமின்றே (தொல், செய், 146) என்னுஞ் சூத்திரவுரையில் 'எரிவளைதரிக்கும் என்னும், எடுத்துக்காட்டுச் செய்யுள் வருங்காறும் அச்சுப்பிரதியுட் காணப்பட்ட உரை, பேராசிரியருரை என்ற அத்தனிப்பிரதியில் எழுதப்படாது சிறிது வெற்றிடமாக இருந்தது. அச்சூத்திரவுரையில் அத்திருநகரி மற்றைப் பிரதி இரண்டினும் நோக்கியவிடத்து ஆண்டு விடப்பட்டு அச்சுப் பிரதியில் 'எரிவளைதரிக்கும' என்பதுகாறும் உள்ள உரை மட்டில் ஒத்து மற்றது ஒவ்வாதிருந்தது. இவ்வாறு பேராசிரியருரையென்ற ஏட்டுச் செய்யுளியலுரை முற்

றும் அச்சிட்ட செய்யுளியலுரையின் வேருகாமை தேர்ந்து அத்திரு நகரியிற்கிடைத்த மற்றைப் பிரதிகள் இரண்டனையும் அச்சுப்பிரதியோடு வைத்து நோக்கினேன். அவை முற்றும் வேருய்க் காணப்பட்டன. முடிவில் அச்சிட்ட செய்யுளியலுரைப் பிரதியும், திருநகரியிற்கிடைத்த அவ்வியலுரைத் தனிப்பிரதியும் ஒத்ததோர் உரையுடையதென்பதூஉம். ஆண்டுக்கிடைத்த மற்றைப் பிரதிகள் இரண்டினும் அடங்கிய செய்யுளியலுரை அச்சிட்ட அவ்வியலுரையின் வேருயதொன்றென்பதூஉம் தெளியப்பட்டன.

அச்சுப் பிரதிச் செய்யுளியலுரையின் வேறென்று தெளியப்பட்ட அவ்வியலுரைப் பிரதிகளிரண்டினும் ''அகன்று பொருள் கிடப்பினும்'' (தொல், செய்' 211) என்னுஞ் சூத்திரவுரைக்கண் மாட்டுறுப்பு வருமாறு காட்டுமிடத்து ''இனிப் பல செய்யுட்கள் வருமாறு சிந்தாமணியுள் யாங்கூறிய உரைகள் பலவற்ருனும் உணர்க'' எனவும், ''மாட்டுமெச்சமும்'' (ஷை, ஷை, 212) என்பதனுரையுள்ளும் அவ்வாறே ''மாட்டும் எச்சமுமின்றி யுடனிலையாய் அமைந்தன பலவும் சிந்தனையுள் யாங்கூறிய உரையான் உணர்க'' எனவும் காணப்படுதலாற் சிந்தாமணிக்கு உரைசெய்த ஆசிரியர் நச்சினர்க்கினியரே அவ்விரு பிரதிகளில் உள்ள செய்யுளியலுரை செய்தாருமாவர் என்பது நன்று தெளியப்பட்டது.

## உரைசெய்தார் இன்னரெனத் துணிதல்.

இனி, அச்சுப்பிரதியினுந் தனிப்பிரதியினும் கண்ட செய்யுளியலுரை செய்தார் யாவரெனின்-அதுவும் மேற்கூறிய நச்சினர்க்கினியருரையானே தெற்றென அறியக்கிடந்தது. என்னை? ''இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கின்'' (தொல் செய், 62) என்னுஞ் சூத்திரவுரையுள், ''இனிக்'' 'கொலைநவில் வேட்டுவன் கோள் வேட்டெழுந்த, புகர்நுதல் யானை நுதன்மீ தழுத்திய, செங்கோற் கடுங்கணை போலு மெனு அது, நெஞ்சங் கவர்ந்தோ ணிரையிதழ்க் கண்ணே. இது வெள்ளடிமுழுதும் வந்ததென்று பேராசிரியர் காட்டினர். இதனை அகவலோசை பிறக்கும்என்று கொள்ளின் இயற்சீர் வெண்டளையான் தருமென்ற கட்டளைவெண்பா இன்ருமென மறுக்க'' என ஆசிரியர் நச்சினர்க்கினியர் பேராசிரியரைச் சுட்டி, அவர் ஆசிரியமுழுதும் இயற்சீர் வெள்ளடி வருமென்றதனை மறுத்துரை செய்தாராகலானும், அவ்வாசிரியர் எடுத்துக் கொண்டு மறுக்கும் மேற்கோட் செய்யுளும் பொருளும் அச்சிடப்பட்ட செய்யுளியலில் ''இயற்சீர் வெள்ளடி'' என்னும் அச்சூத்திர உரைக்கிடையிற் காணப்படுதலானும் அவ்வச்சுபிரதியினுந் திருநகரித்

தனிப்பிரதியினுங் கண்ட செய்யுளியலுரை செய்தார் பேராசிரியர் என்பது ஒரு தலையாகத் துணியப்படுதலான் என்க. இதுபற்றி யன்றே ஆழ்வார் திருநகரியுட் டொன்மைசான்ற திருமேனி இரத் தினகவிராயர் வழித்தோன்றியோர் வீட்டிற் கிடைத்த அச்செய்யு ளியலுரைப் பிரதியும் தன்கட் பேராசிரியருரை என்ற பெயர் கொண்டு நின்றதூஉ மென்பது.

இனி, அவ்விருவேறுரைகட்குங் கருத்து வேறுபாடுகள் பல வுள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு:—

''ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்'' (தொல், செய் 8.) என்னுஞ் சூத்திரத்திற்குப் பேராசிரியர் ''மேற்கூறிய எழுத்திலக் கணவகையானும், ஈண்டோதும் அசைக்குறுப்பாமாற்றானும் எல்லாங் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம்'' எனப்பொருள் கூறி, அது அலகு பெருதென நிறுத்தியும் அலகு பெறுமென்பார் காட்டிய உதாரணங்களை அவை சான்றோர் செய்யுள் அல்லவெனை மறுத்தும் உரைவிரித்தார்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் அச்சூத்திரனைக்''குற்றியலிகரம் ஒற்றியற்று எழுத்தியற்று'' எனக் கண்ணழிவுசெய்து ''குற்றியலி கரமாவது ஒற்றியல்பினையுடைத்து; அதுவேயன்றி எழுத்தியல்பி னையுமுடைத்து. எனவே, அலகு பெருத வழி ஒற்ரும்; அலகு பெற்றவழி எழுத்தாம் என்றவாறு'' எனப் பொருள் கூறி ''வனப் புநினக்கியானுரைப்பக்கேண்மதி எனவும், ''நினைக்கிய மாரேமா குதும்'' எனவுங் குற்றியலிகரங்கள் அலகுபெறுதலால் எழுத்தி யற்ருயிற்று. இங்ஙனம் சான்ரோர் செய்யுள் வருதல் பெருவர விற்று'' எனக் குற்றியலிகரம் அலகுபெற்றுச் சான்ரோர் செய் யுளுள் வந்தமையுங் காட்டினர்.

இவ்வாறே இவ்விருவேறுரைகட்கும் உள்ள வேறுபாடுகள் எண்ணிறந்தனவாதலான், அவையெல்லாம் ஈண்டுக் காட்டப் புகின் பெருகுமென்று அஞ்சி இதனேடு நிறுத்துகின்றேன்.

இனிச் 'சிந்தாமணியுள் யாங்கூறிய உரைகள் பலவற்ருனும் அறிக, எனப் பலவிடத்துங் காண்டலால் நச்சினர்க்கினியரது எனத் தேர்ந்த இருபிரதிகளினும் மறுக்கப்பட்ட உரையும், 'இது போசிரியர் காட்டினர்' என்பதனுற சுட்டிய மேற்கோளும் அம் மறுப்பு நிகழ்ந்த சூத்திரவுரைக்கண்ணே தன்கட்காண்டலாற் பேராசிரியரதெனத் தெளிந்த செய்யுளியலுரைத் தனிப்பிரதியோ முழுதும் வேற்றுமை யின்மையின் அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரை பேராசிரியரதென்பதூஉம், நச்சிகினர்க்கினியர தன்றென்பதூஉம் நன்குணர்ந்து கொள்க.

# 7

# அச்சிட்ட தொல்காப்பிய மரபியலுரை

## அச்சிட்ட மரபியலுரை நச்சினார்க்கினியருரையன்று

இஃது அச்சிட்ட தொல்காப்பியப் பொருளதிகார விறுதிக்கண் உள்ளதாகும். 'தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் இயற்றிய உரையோடும் பதிப்பிக்கப் பட்டது' என்று வெளியிட்டவாற்றான், அப்பொருளதிகாரம் அச்சிட்டார் கருத்து அவ்வதிகாரத்துள்ள ஒன்பதியலுரையும் நச்சினார்க்கினியரியற்றி யனவே என்பதாம். செந்தமிழ்' முதற்றொகுதி ஆராய்ச்சிக்கண் அச்சிட்ட பொருளதிகாரச் செய்யுளியலுரைகாரர் பேராசிரியரென் பதூஉம், நச்சினார்க்கினியர் அல்லரென்பதூஉம் தெளிவிக்கப் பட்டன. அச்செய்யுளில் நச்சினார்க்கினியருரை இப்போது 'செந் தமிழ்' வாயிலாக வெளிவருதலும் பலரும் அறிவர், மற்று அவ் வதிகாரத்துள்ள மரபியலுரையினை, நச்சினார்க்கினியரியற்றியன என நன்கு தெளியப்பட்ட இயல் நூல் உரைகளோடு வைத்து ஆராய்ந்த இடத்து அம்மரபியலுரைக்கும், மரபியல்பற்றி ஆங் காங்கு வந்துள்ள அந் நச்சினார்க்கினியருரைகட்கும் கருத்து மாறு பாடும், உரைவேறுபாடும், ஒவ்வாமையும், பல பலவாகக் காணப் படுதலால், இப்போது வழங்குகின்ற அம்மரபியலுரை நச்சினார்க் கினியருரையன்றென்பது தெரிவது அவ்வொவ்வாமை முதலிய வற்றைப் பின்வருவனவற்றானுணர்க.

### 1 ஒவ்வாமைக்கு மேற்கோள்கள்

### சிந்தாமணியுரையினின்று

சிந்தாமணி குணமாலையாரிலம்பகத்து, 'மங்கை நல்லவர்' எனினுஞ் செய்யுளுரையில், நச்சினார்க்கினியர் சுரும்பு, ஞிமிறு, வண்டு, தேன் என்னும் நான்கும் தும்பியது கிளையாமென்று கூறி, இவற்றிற்குச் செவியுணர்வும் உண்டென்று கூறுவாராய் ''நண்டும் தும்பிய நான்கறிவினவே' பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே'' (மரபியல் - 31) என்னும் மரபியற் சூத்திரத்து'' ''ஆசிரியர் நண் டுந்தும்பியும் என்று தும்பியைப் பின் வைத்தது, மேல் வருஞ் சூத்-

திரத்தின் 'மாவுமாக்களுமையறிவென்ப' என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கென்றுணர்க; இதனை வாராததனால் வந்தது முடித்தல் என்னும் தந்திரவுத்தியாற் கொள்க என்று ஆண்டு உரைகூறிப் போந்தாம்'' எனவுரைத்தார்,

இக்கருத்தே பற்றிப் பெரும்பாணாற்றுப் படையுரையினும்' 'பல் காற்பறவை கிளை செத்தோர்க்கும்' என்புழி[1] ''வண்டுந்தும் பியும் என்னுஞ் சூத்திரத்துச் செவிப்பொறியால் ஆவையுணர்தல் கூறினும்'' என வுரைத்தார்.

இவ்வாறு இவ்வீரிடத்தும் வற்புறுத்துகின்ற இந்நச்சினார்க் கினியருரைக் கருத்தாலும் அச்சிட்ட மரபியலுரைக்கண் இல் லாமை காண்க.

மற்றுஞ் சிந்தாமணி நாமகளிலம்பகத்து 'மெல்விரன் மெலி யக்கொய்த' என்னுஞ் செய்யுளுரையில் ''குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை'' (மரபியல் 1 ) என்றதனுட் கொடை யென்றதனுன் ஆமான்குழவியுங் கொண்டவாறுணர்க'' எனவும். கனகமாலையரிலம்பகத்து ''ஊனுண் சிங்கக்குழவி''என்னுஞ் செய் யுளுரையில்அம்மரபியற் சூத்திரத்தையேஎடுத்தோதி,என்றதனுட் கொடை யென்றதனாற் சிங்கக் குழவியுங் கொண்டவாறு காண்க எனவும் காந்தருவதத்தையாரிலம்பகத்து 'எழுந்துவிண் படருஞ் சிங்கம் பெட்டைமேலிவர்ந்து நின்றால்' என்னுஞ் செய்யுளுரையில் ''ஒட்டகங் குதிரை கழுதைமரையிவை' பெட்டைஎன்னும் பெயர்க் கொடைக் குரிய, (மரபியல்- 52) இதனும் கொடை யென்ற தனாற் சிங்கத்துக்கும் பெட்டை கொண்டவாறு காண்க'' எனவும் நச்சினார்க்கினியர் கூறினர்.

அச்சிட்ட மரபியலுரைக்கண் ஈண்டு நச்சினார்க்கினியர் கூறி யவாறென்றுமில்லாமை அவ்வச்சூத்திரவுரை நோக்கித் தெளிக.

---

1 பத்துப்பாட்டுரையில் 'வண்டுந்தும்பியும்' என்ற பாடங் காணப்படுவது ஏடு எழுதினர் பிழைப்பாகும். நச்சினார்க்கினியர் வண்டு முதலிய நான்கும் தும்பியது கிளையென்றும், இச்சூத்திரத் துத் தும்பியைப் பின்வைத்தது வருஞ்சூத்திரத்துக் கூறப்படுகின்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற்கு என்றுங் கருதியதனால், தும்பியது கிளையல்லாததும் ஐயறிவு ஏறலாகாததும் ஆகிய தொன்றே தும் பிக்குமுன் வைத்ததாகும் என்பது நன்கறியத்தக்கது.

## ii கலித்தொகை யுரையினின்று

இனிக் கலித்தொகையில் 'வாரிநெறிப்பட்டு' என்னும் முல்லைக்கலியுரையில் நச்சினார்க்கினியர் ''எருமைப் பெடையென்றது 'பேடையும் பெடையும்' (மரபியல்-54) என்னுஞ் சூத்திரத்து நாடின் என்றதனால் அமைத்தாம்'' எனக் கூறினார்.

அச்சிட்ட மரபியலுரைக் கண் அச்சூத்திரவுரையில் ''நாடின் என்றதனால், பெட்டை யென்பது வழக்கினுட் பயிலா என்பது'' என வேறொருரையுள்ளதல்லது ஈண்டு நச்சினார் கினியர் கூறியாங்கு ஒன்றுங்காணாமை யுணர்க.

'மன்னுயிரேமுற' என்னும் பாலைக்கலி யுரையில் நச்சினார்க்கினியர்,

'கரிபொய்த்தான் கீழிருந்த மரம் போலக் கவின் வாடிஎன்புழி ''புல்லு மரனு மோரறி வினவே, பிறவு முளவேயக்கிளைப் பிறப்பே மரபியல்-28 இதனுட் பிற அறிவும் உளவென்று கூறினார், அதனாற் பாவத்திற்கு அஞ்சி மரங்களின் வாடிற்றென்றார்' எனவுரைத்தார்.

அச்சிட்ட மரபியலுரைக்கண், ஈண்டு நச்சினார்க்கினிய ருரைத்தாங்கு, மரங்கட்குப் பிற அறிவும் உளஎன்று ஒன்றும் கூறப்படாமையும், ''பிறவும் உள' என்பதற்கு ''அப்புல்லுக்கும் மரனுக்கும் ஒத்த கிளையாய புதலுங்கொடியும் அவற்றுக்கொத்த பிறப்பாகிய ஓரறிவுப் பருவமுள்ள மக்கட்குழவியும் விலங்குக் குழவியும் எஞ்ஞான்றும் ஓரறிவினவாகிய என்பில் புழுவும் ஆகிய பிறவும் உள்ளன'' என்று வேறு கூறுப்பட்டிருத்தலும் அச்சூத்திரவுரை நோக்கித் தெளிக.

## iii தொல்காப்பிய அகத்திணையியலுரையினின்று

தொல்காப்பியத்து அகத்திணையியலுரையில் நச்சினார்க்கினியர் 'உயர்ந்தோர்க்குரிய வோத்தினான் என்புழி' இது நான்கு வருணத்தோர்க்கும் எய்தாததெய்து வித்தது; இதன் பொருள்-வேதத்தினாற் பிறந்த வடநூல்களும் தமிழ் நூல்களும் அந்தணர்,அரசர், வணிகர் உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்றவாறு'' எனக்கூறினார். இதனால் நச்சினார்க்கினியர் 'உயர்ந்தோர்க்குரிய' என்னும் இவ் வகத்திணையியற் சூத்திரம் நான்கு வருணத்தோரையும் நோக்கிய தென்று கருதினாராதல் தெள்ளிது.

அச்சிட்ட மரபியலுரைக்கண் 'வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும், வாய்ந்தன ரென்ப வலர்பெறும் பொருளே' (மரபியல்-81) என்புழி "இது நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை இதன் பொருள்-வேந்தர் கொடுப்பின் வேளாண்மாந்தர்க்குப் படைக்கலமும் கண்ணியும் பெறும் பொருளாகச் சொல்லப் படும் என்றவாறு (இது) அகத்திணையியலுள், 'உயர்ந்தோர்க் குரிய வோத்தினான்' என்புழிக் கூறப்பட்டதெனின், வேளாளரை யொழித்து ஒழிந்தோரை நோக்கிற்கு அச்சூத்திரமென்பது" என வுரைக்கப்பட்டுள்ளது.

ஈண்டு இவ்விருரையும தம்முண் மலைதல் எளிதிலுணரத் தக்கது.

## தொல்காப்பியப் பொருளியலுரையினின்று

தொல்காப்பியப் பொருளியலுரையில் 'உயர்ந்தோர் கிளவியும் என்னுஞ் சூத்திரவுரைக்கண் நச்சினார்கினியர் 'வழக்கெனப்படுவது" என்னும் மரபியற்சூத்திரத்தான் வழக்கு உயர்ந்தோர் கண்ணதாயிற்று: அவர் அகத்தியன் முதலியோரென்பது பாயிரத் துட் கூறினாம்" என்றார். பாயிரவுரைக் கண்ணும் அவ்வாறே "உயர்ந்தோராவார் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும், தலைச் சங்கத்தாரும் முதலாயினோர்" என்றார். இவற்றிற்கேற்பப் புறத் திணையியற்கண் மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியினாற் றிய வறிவன் றேயமும்' என்பதனுரைக்கண் "கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவர் என்றுணர்க்" என்றார். இவை யெல்லாம் ஒரு கருத்தாதல் காண்க.

அச்சிட்ட மரபியலுரைக்கண் 'வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே' என்னுஞ் சூத்திரத்து உயர்ந்தோரெனப் படுவார் அந்தணரும் அவர்போலும் அறிவுடையோரும் ஆயினர் எனவுள்ளது.

இவ்வச்சிட்ட மரபியலுரைக் கருத்து 'பார்ப்பாரறிவர்' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையிற் பேராசிரியர் 'அறிவரெனப்படுவார் மூன்று காலமுந் தோன்ற நன்குணர்ந்தோரும் புலனன்குணர்ந்த புலமையோரும் ஆகலானும், இனிப்பார்ப்பாரும் அவ்வாறே சிறப் புடையராகலானும் அவர் வழி நிற்றல் அவர்க்குக் கடன்" எனவுரைத்தனோடு பெரிதும் ஒப்பதாகும்.

நச்சினர்கினியர் இச்செய்யுளியற் சூத்திரவுரைக் கண் பெரும் பான்மையும் பேராசிரியர் உரைத்தவையே தழீஇயுரைத்து. 'இனிப்பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலான் என்பது மட்டிற் கூருமல் விடுத்தமையால் உயர்ந்தோர், என்பதற்கு அந்தணரும் அவர் போலும் அறிவுடையோரும் என்பது அவர் கருத்தன்றென்பதூ உம், மேற்பசயிரத்தும் பிறவிடத்தும் உரைத் தாங்கு 'அகத்தியனர் முதலியோர்' என்பதே அவர் கருத்தாம் என்பதூஉம் உய்த்துணர்க.

## தொல் அகத்திணையியலுரையினின்று

தொல்காப்பியத்து அகத்திணையியலுரையில் மன்னர் பாங்கிற் பின்னே ராகும் என்புழி வேளாளர்-உழுவித்துண் போரும் உழுதுண்போரும் எனப்பலராவர் என்று கூறி, அப்பலராதற்கு இலக்கணங்காட்டுவாராய் 'வேளாண்மாந்தர்க்கு' (மரபியல்-80) 'வேந்துவிடுதொழிலிற்'(மரபியல்-81)என்னும் மரபியற் சூத்திரங் களான் வேளாளர் இருவகைய ரென்ப எனவுரைத்தார்.

அச்சிட்ட மரபியலுரைக்கண், இவ்வாறு இரு வகையரென வகுத்துரை கூறப்படாமையும், அவ்விரு சூத்திரவுரைகளிலும் உழுவித்துண்பேர் என்னும் வகையே அறியலாகாமையும் நோக் கித் தெளிக.

## IV சிந்தாமணியுரையினின்று

சிந்தாமணி இலக்கணையாரிலம்பகத்து எத்துணைத்தவஞ் செய் தான் கொல் என்னுஞ் செய்யுளுரையில்; நச்சினர்க்கினியர் ''அந்தணாளர்க் கரசுவரை வின்றே'' (மரபியல்-82) என்பதனுன் அந்தணரொழிந்த இருவருக்கும் முடியுடை வேந்தாதற்றன்மை யின்மையின் ஈண்டு அரசளித்தது குறுநில மன்னர்க்குரிய அரசா யிற்று'' எனவுரைத்தார்.

இதன் கண் 'அந்தணரொழிந்த இருவர்' எனப்பட்டார் வைசியரும் வேளாளரும் ஆவர். இதனுல் வேளாளரும் குறுநில மன்னராதற்குரியர் என்று கருதினராயிற்று.இதற்கேற்பவே அவர் அகத்திணையியலுரைக்கண் பலவிடத்தும் வேளாளரில் மண்டில மாக்களுந் தண்டத்தலைவருமாய் வேள் எனவும் அரசு எனவும் உரிமையெய்தினேரும், காவிதிப்பட்டமெய்தினேரும். குறுமுடி குடிப் பிறந்தோரும் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரியர்' (30) எனவும் வேளாளரே' அரசரால் சிறப்புச் செய்யப்பெறுவர் (24) எனவும், அவர் அரசரான் ஏவப்பட்டுப் பகைவர் மேலும்

நாடுகாத்தன்மேலும், சந்து செய்வித்தன் மேலும், பொருள் வருவாய் மேலுஞ் சென்று வினைமுடித்தற்குரியர் (30) எனவும் புறத்திணைக்கண் தருக்கமும் கணிதமும் வேளாளர்க்கு உரித்தாம் (20) எனவும் வேளாளரைச் செல்வம் பற்றியும் கல்வி பற்றியும் சிறப்பித்தே கூறுவர்.

அச்சிட்ட மரபியலுரைக்கண் வேளாண்மாந்தரைப் பற்றி வருகின்ற சூத்திரவுரைகளில் மேற்காட்டிய நச்சினார்க்கினியர் கருத்தொன்றும் பயிலாமையும், அவர் வேளாளரும் குறுநில மன்னராதற்குரியர் எனறு கருதிய கருத்திற்குமாருகக் குறுநில மன்னர்க்குரியன கூறிய 'வில்லும் வேலும்' என்னும் மரபியற் சூத்திரத்து 'மன்பெறுமரபினேனோர்க்குமுரிய' என்பதன் கண் 'மன்பெறு மரபினேனோர்' எனவே அரசர் வைசியரன்றிக் கீழ் அமையா ஆயிற்று 'எனவுரைக்கப்பட்டிருத்தலும்' 'அன்னராயினு மிழிந்தோர்க்கில்லை' என்னுஞ் சூத்திரவுரை நோக்கித் தெளிக. 'வேந்துவிடு தொழிலிற்' என்னும் மரபியற் சூத்திரவுரையில் 'உயர்ந்தோர்க்குரிய வோத்தினன' என்னும் அகத்திணையியற் சூத்திரத்து வேளாளரை ஒழித்து ஒழிந்த மூவரையுமே உயர்ந் தோரெனக் கருதியுரைத்தமை மேலே காட்டினும்.

இவ்வாறு இன்னும் நுனித்து ஆராயின் நச்சினார்க்கினியருரைக்கும் அச்சிட்ட மரபியலுரைக்கும் வேறுபாடு மிகப்பலவாகக் காணலாகும்.

## அச்சிட்ட மரபியலுரை பேராசிரியரது எனத்துணிந்தமை

இத்துணை மாறுபாடு தெளியக்காண்டலால், அச்சிட்ட மரபியலுரை நச்சினார்க்கினியர் இயற்றியதன்றென்பது நன்கு கொளற்பாற்று. மற்றிம்மரபியலுரைகாரர் யாவரெனின்;- ஆழ்வார் திருநகரியினின்று இச்சங்கத்துக் கிடைத்த இம்மரபியலுரைப் பழைய ஏட்டுப் பிரதிகள் இரண்டிலும் 'பேராசிரியனுரை' யென்றெழுதப் பட்டிருத்தலாற் பேராசியரேயாவரென்க.

இதுபோலவே ஆராய்ந்த அளவில், அச்சிட்ட பொருளதிகாரவுரைக்கணுள்ள மெய்ப்பாட்டியலுரையும் உவமவியலுரையும் நச்சினார்க்கினியருடையன அல்ல எனத் தெரிவது.

## 8

# புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர்

"ஒப்பரிய மாகறலூ ரான்கிழா ராதிபன்
செப்பரிய தெய்வநாய கன்றெரிந்து தப்பரிய
வெண்பாமாலை தனக்குத் தக்க விருத்தியினை
நண்பா லுரைத்தா னவின்று".

'செயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர்கிழான் சாமுண்டிதேவநாயகன் உரைத்த வெண்பாமாலையுரை ஒருவகையான் முற்றும்.'

## 9

# கொல்லிப்பாவை

**கொல்லிமலை வல்விலோரிக்குரியது.**

இஃது கொல்லிமலை[1] என்னும் மலையின்கணுள்ள ஒரு பெண் பாற் படிமை. இக்கொல்லிமலை செந்தமிழ் நல்லிசைப்புலவர் களாற் சிறப்பித்துப்பாடப்பெற்ற தமிழேழு வள்ளல்களில் ஒருவனாகிய வல்விலோரி என்னுஞ் சிற்றரசனுக்குரியதாகவிருந்தது. இதனை "கொல்லியாண்டவல்விலோரி" எனவரும் புறப்பாட்டானும் "வல்விலோரி கொல்லிக்குடவரை" என்னுங் குறுந்தொகையானும் (100) உணர்க. அதன்பின் மலையமான் திருமுடிக் காரி என்பான் வல்விலோரியொடு பொருது அவனைக் கொன்று அவனது கொல்லிமலையைச் சேரலற்குக் கொடுத்தான் என்பது.

'செவ்வேன்'

"முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்தவல்வி
லோரிக் கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி"

---

1 இம்மலை இப்பொழுது சேலம் ஜில்லாவைச் சார்ந்தது என்பர்.

என்னும் அகப்பட்டசன் (209) விளங்குகின்றது. ஓரிக்கும் காரிக்கும் போர்விளைந்தமை ''காரிக்குதிரைக்காரியொடு மலைந்த ஓரிக்குதிரை யோரியும்'' என்னும் சிறுபாணுதற்ருனும் புலப்படும். இம்மலை காரிஎன்பவனுற் சேரலற் குரித்தாக்கப் பட்டபின் இதனைப் ''பொறையன் கொல்லி'' எனவழங்குவராயினர். ''இரவலர் மெலியா தேறும் பொறையன், உரைசாலுயர்வரைக் கொல்லிக் குடவயின்'' எனநற்றிணையினும், (185) ''துன்னருந் துப்பின் வென்வேற் கானவன் கானத்துக் கொல்லி போல'' (அகம் 338) எனவும்' ''மறமிகு தானைப் பசும்பூட் பொறையன்......கொல்லிக் (ஷ303) எனவும் ''வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை'' (ஷ213) எனவும் வரும் அகப்பாட்டுக்களினும் இதனைக் கண்டுகொள்க.

## கொல்லி மலைப்பாவை தெய்வத்தான் அமைக்கப்பெற்றது.

இனி, இக் கொல்லி மலையிற் பாவையாவது-கண்டார் உள்ளமும் விழியுங்கவர்ந்து பெருங்காம வேட்கையுறுவித்து இறுதியிற் கொல்லத்தக்கதாகத் தெய்வத்தானே அமைக்கப் பெற்ற ஒரு மோகினிப்படிமையாகும். இப்பாவை தேவதைகளாற் காக்கப்படுவதென்பதும்' காற்று, மழை, இடி, பூகம்ப, முதலிய இடையூறு களானும், தனது திருவுருக்கெடாமல் என்றுந்தன்னியல்பு குன்ருத தொன்றென்பதும்,

''கொல்லித்

தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினு
முருமுடன் றெறியினு மூறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநலவுருவின்
மாயா வியற்கைப் பாவை''

எனவரும் நற்றிணைப்பாட்டான் (201) விளங்குகின்றன. ''கொல்லி நிலைபெறு, கடவுளாக்கிய பலர்புகழ்பாவை'' என்னும் அகப்பட்டானும் (209) ''பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக், கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய, நல்லியற் பாவை'' என்னுங் குறுந்தொகையானும் (89) 'கொல்லிக் குடவரை, பூதம் புணர்த்த புதிதியல் பாவை' என்னுநற்றிணையானும் (192) இப்பாவை தெய்வத்தான் ஆக்கப்பட்ட தென்பது தெளிவாம். ''சிலைத் தொழிற் சிறுநுதறெய்வப் பாவைப்போல்'' என்னுஞ் சிந்தாமணியில் (காந்தருவ- 165) ''தெய்வப்பாவை-தெய்வத்தாற் செய்த கொல்லிப்பாவை; 'பூதம் புணர்த்த புதியல் பாவை' என்ருர் பிறரும்' என்பர் ஆசிரியர் நச்சினுர்க்கினியரும்.

## அதினியல்பு

இனி இஃது காமுகரைக்கொல்லும் இயல்பிற்றென்பது
''கூற்றுவன்வேல் போன்று குகன்வேலை வென்றுகொலை
யாற்றலுறும் வன்கணமர் விளைப்பத்- தோற்றமுறுங்
கொல்லிப்பா வைக்கிணையாய் நின்றதெவன் கோகனக
வல்லிப்பா வைக்கிணையா வாய்''

என்னும் மாறனலங்கார உதாரணச்செய்யுட்கண் (உவமையலங்காரம் 15) உரைகாரர் திருமேனி-இரத்திநகவிராயர் ''கொல்லிப்பாவை-காமுகரைக் கொல்லும்பாவை'' என்றுரைத்தவாற்ருன் உணரலாகும்.

''செருவெங் கோல மவுணர் நீங்கித்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்''
(6-கடலாடுகாதை- 60-60)

என்னுஞ் சிலப்பதிகாரத்தானும், அதற்கு அடியார்க்குநல்லார் உரைத்தவாற்ருனும் திருமகள் முன்ெருரு காலத்து அவுணர் வெவ்வியபோர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலத்தோடு மோகித்து விழும்படி இக்கொல்லிப்பாவை வடிவாய்த் தோன்றி யாடினுள் என்பது விளங்குகின்றது. இப்பாவை நல்லிசைப்புலவர் பல்லோரானும் ஆங்காங்குச் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளது.

இத்துணையுங் கூறியவாற்ருல் தமிழ்நாட்டுத் தெய்வப் படிமையின் பழமையும், அளவில் பேரழகும், இயல்பும் நன்கறியத் தக்கன.

---

1 இத்தகைய பாவை, கொல்லிமலையில் இப்பொழுது எங்கேனு முள்ளதா என்பதைச் சரிதவாராய்ச்சி செய்யும் அறிஞர் அறிந்து தெரிவிப்பாராயின், அது தமிழகத்திற்குப் பெரிது மகிழ்ச்சி விளைக்குமென்பது ஒருதலை.

# 10

# அந்தாதிகள்

## அந்தாதி லட்சணம்

அந்தாதி என்பது இறுதிமுதலாகத் தொடுப்பதாகும். அஃதாவது, பலவடிகளால் ஆயதோர் செய்யுளாயின், முன்னடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முன்னடியிற்பெரும்பான்மையேனும் வருமடி முதற்கண் வருதலும்; பல செய்யுளான் ஆயதோர் நூலாயின், முற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி, இவற்றிலொன்று வருஞ்செய்யுளின் முதற்கண் வருதலுமாம். ஒரு செய்யுளகத்தடி அடிகள் இவ்வாந்தியசற்றொடுக்கப்படின், அஃது அந்தாதித் தொடையெனப்படும். ஒரு நூலகத்துச்செய்யுட்கள் இவ்வந்தாதியாற் றொடர்ந்துவரப்பெறின், அஃது அந்தாதித்தொடர் நிலையெனப்படும் இதனை அந்தாதித் தொகை என்றலும் உண்டு. இவ்வந்தாதிநூலெல்லாம் முற்செய்யுளினிறுதியும் வருஞ்செய்யுளின் முதலும் ஒன்றாய் வருதலேயன்றி பெரும்பாலும் நூலிறுதிச்செய்யுளினிறுதியுந் நூன்முதற்செய்யுளின் முதலும் ஒன்றாகியும் வரும். அந்தாதித்தொடைச் செய்யுளும அடிகளின் ஈறும் முதலும ஒன்றாய் வருதலேயன்றிச் சிறுபான்மையுச்செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாகியும் வரும். திருநூற்றந்தாதி முதலியன நூற்செய்யுளும் அந்தாதியாகத் தொடர்ந்து வந்தமையேயன்றி, இறுதிச்செய்யுளின் இறுதியும் முதற் செய்யுளின் முதலும் முறையே 'பூக்கொண்டதே' பூக்கொண்டு' என ஒன்றாய் வந்தனையும் நோக்கிக் கொள்க.

உலகுடன் விளக்கு மொளிகிள ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழுமுக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவினை
யறிவுசே ருள்ளமொடருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தரஃ தென்ப
பண்ணருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே''

இவ்வந்தாதித் தொடைச்செய்யுளிற் பலவடிகளும் ஈறும் முதலும் ஒன்ருய் வந்தனவேயன்றிச் செய்யுளின் ஈறும் முதலும் ஒன்ருய் வந்ததனையும் நோக்கிக்கொள்க.

## நால்வகை அந்தாதி

இவ்வந்தாதி, எழுத்து அசைசீர் அடி இவைபற்றி ஈறுமுதலாத் தொடுக்கப்பட்டவாறே, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என நான்காக வகுக்கப்படும். ''உலகுடன் விளக்கும்'' என்னும் ஆசிரியத்துள் எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி மூன்றும் வந்தன காண்க.

''ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி பரவுதும்''

இதன்கண் அடியந்தாதி வந்தது. இவ்வாறே அந்தாதி நூலுள்ளும் எழுத்தசை சீரடிகள் அந்தாதியாகவருதல் ஆங்காங்குக் கண்டு கொள்க. திருவாய்மொழியில் ''கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே'' என்னுஞ் செய்யுளீற்றடிப்பின் ''ஏபாவம்பரமே யேழுலகும்'' என வேறுசெய்யுண் முதலடிவந்தது எழுத்தந்தாதியாம். ''தலையில் வணங்கவு மாங்கொலோ தையலார் முன்பே'' என்பதன்பின் 'பேய்முலை யுண்டு சகடம்பாய்ந்து மருதிடை' என வந்ததும் அது. அசையுஞ்சீரும் அந்தாதியாக வருவனவே, அந்நூலுள்ளும் பிறநூலுள்ளும் மிகப்பலவாம். பதிற்றுப்பத்து நான்காம்பத்தின்கணுள்ள 1,2,3, ஆம் பாட்டுக்கள் அடியந்தாதி யாற் றொடர்ந்து வந்தன.

## பிறவகை விகற்பங்கள்

இனி ஒரு செய்யுட்கண் இறுதியடியினிறுதியும் முதலடியின் முதலும் ஒன்ருய் வருவனவற்றை மண்டலவந்தாதியென்றும், அவ்வாறு வராதவற்றைச் செந்நடையந்தாதியென்றும், பலவிரவி வருவனவற்றை மயக்கந்தாதியென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்டு வருவனவற்றை இடையீட்டந்தாதி யென்றும், எழுத்தசை சீர்களால் இடையிட்ட அடியந்தாதியை இடையீட்டடி யந்தாதி யென்றுங்கூறி, அவை மண்டலவெழுத்தந்தாதி, செந்நடையெழுத்தந்தாதி, மண்டலவசையந்தாதி, செந்நடை யசையந்தாதி, மண்டலச்சீரந்தாதி, செந்நடைச்சீரந்தாதி, மண்டலவடியந்தாதி, செந்நடையடியந்தாதி, மண்டலமயக்கந்

தாதி, செந்நடைமயக்கந்தாதி, மண்டலவிடை யீட்டந்தாதி, செந்நடையிடையீட்டந்தாதி என விரிப்பாருமுளர். இவை யன்றி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடையந்தாதிகளும் கூறுவர். இவ்வந்தாதித்தொடைவிகற்பமும் இவற்றிற்கு தாரணமும் பிறவும் ''ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென், ருரைதினர் மாதோவுணர்ந்திசி னோரே'' என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்துக்குக் கூறிய விருத்தியுரையுட் கண்டுகொள்க.

மேலெடுத்தோதியவாறன்றி, இறுதிநின்ற சொற்பொரு ளேக்கத்தால் ஆகுபெயரால் அந்தாதியாக வருதலும் உண்டு. இதனை மாறனலங்கார வுரைகாரர், '' இறுதிநின்ற சொற்பொரு ளேக்கத்தான் ஆகுபெயராற் சொற்றொடர் வருவனவுமுள. அதற்குச் செய்யுள்,

''பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே''

''மதுவார் தண்ணந் துழாயான்
முதுவே தமுத லவனுக்
கெதுவே தென்பணி யென்னா
ததுவே யாட்செயு மீடே.''

இவை முதற்பத்தின் ஆறுந்திருவாய் மொழியின் முதற் பாட்டும் இரண்டாம் பாட்டும். இவற்றுட் பூ என்ற சொல்லின் பொருளேக் கத்தாற் சினையைக்கூற முதலை அறிவிக்கும் ஆகுபெயரால் அந்தாதி வந்தவாறு காண்க'' எனக் கூறியவாற்றான் அறிந்து கொள்க அந்தாதியை இயலிசையந்தாதி யெனவும், பொருளிசை யந்தாதி யெனவும் இரண்டாகப் பகுத்து, இத்திருவாய்மொழி களைப் பொருளிசை யந்தாதி எனப்பணிப்பர் திருவாய்மொழி யீட்டினருப்பதவுரையாளர்.

## தொன்மை வழக்கினது

இவ்வாறு வரும் அந்தாதி விகற்பமெல்லாம் தொல்காப் பியனார் கூறிய இயைபு. (செய்- 241) என்பதன் வகையாய் அடங்கும். ஆண்டுப் பேராசிரியர் ''பொருட்டொடராகவும், சொற்றொடராகவுஞ்செய்வது இயைபு எனப்படும்'' எனவும், 'சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது' எனவும் கூறிய வாற்றான் உணர்ந்துகொள்க. இக்கருத்தானே மாறனலங்கார முடையாரும்,

சொல்லாற் பொருளாற் றொடருந் தொடர்நிலைக
ளெல்லா மவற்று ளெழுத்தசைசீர்—மல்கு
மடிசொற் றொடர்நிலைக ளந்த முதலாப்
படிவைத் தனர்முன் பகுத்து. (பொதுவியல்-6)

என்பதனல் அந்தாதியினைச் சொற்றொடர்நிலை யென்று கூறினர்" இங்ஙனம் அந்தாதியாக ஒரு செய்யுட் பலவடிகளையும் ஒரு நூலுட் பலசெய்யுட்களையும் தொடுப்பது தமிழிற் றென்று தொட்டேயுள்ள பெருவழக்கமாம் இதனை யாப்பருங்கல விருத்திகாரர் (53) ''பன் மணிமாலையும், மும்மணிக்கோவையும், உதயண குமாரன் கதையும்,தேசிகமாலையும் முதலாகவுடைய செய்யுட்களுள் அந்தாதிவந்தவாறு காண்க'' எனவும், (53)'' இறுதியெழுத்துஞ்சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன் கதையும் கலியாணகதையும் பணமணிமாலையும் மும்மணிகோவையும் என்னுமவற்றுட் கண்டு கொள்க'' எனவும் கூறியதனலும், பேராசியர்''விருந்தே தானும், புதுவது கிளத்த யாப்பின் மேற்றே'' என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில்''புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னையெனின், புதிதாகத் தாம்வேண்டியவாற்ருற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினர் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க'' என வுரைத்ததனனும், பதிற்றுப்பத்தின்கட் காப்பியாற்றுக்காப்பியனுர் பாடிய நான்காம் பத்து அந்தாதியாகச் தொடர்ந்து வந்ததனனும் அறிந்து கொள்க. பாட்டியலுடையார் கலம்பகம், பல்சந்தமாலை, இணைமணிமாலை, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை,நான்மணிமாலை, மும்மணிக்கோவை, வசந்தமாலை, நவமணிமாலை, கலியந்தாதி, ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதிமுதலிய பல பிரபந்தங்களிற்செய்யுட்கள் அந்தாதியாயத் தொடர்ந்து வரப்பெறு மென்ப.

## வருமாறு

இவ்வந்தாதிச்செய்யுட்கள் எழுமுதல் ஆயிரம் இறுதியாகத் தொடர்ந்து வருவன எனவுணர்க.சடகோபர், திருவாசிரியம் ஏழு பாட்டு அந்தாதியாகவந்தது; திருவாசகத்துக் கோயிற்றிருப்பதிகம், கோயின் மூத்ததிருப்பதிகம் முதலாயின பத்துப் பத்துச்செய்யுட்கள் அந்தாதியாகத்தொடாந்தன. நீத்தல் விண்ணப்பம் ஐம்பது செய்யுட்களும் திருச்சதகம் நூறுசெய்யுட்களும் அந்தாதியாகத் தொடர்ந்தன. திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள் அந்தாதியாக வந்தது. எல்லாப்பாக்களும் பாவினங்களும் இவ்வாறந்தாதியாற் றொடர்ந்து வரவும் பெறும். பாவும் பாவினமுங் கலந்து அந்தாதியாகத் தொடர்ந்தது கலம்பகத்துட்காண்க: பாக்களுள் வெண்பாவும்

பாவினங்களுட் கலித்துறையும் அந்தாதியாற் றொடர்ந்து வந்தனவே மிகப்பலவாம்.

> ''வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
> பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே''

என்று பன்னிருபாட்டியலாருங்கூறுதல் காண்க. இதனைக் கபில தேவர், பரணதேவர், நக்கீரதேவர், காரைக்காலம்மையார், பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைப்பிரானர், சடகோபர் வெண்பாவந்தாதிகளானும்; திருவாதவூரர் நீத்தல்விண்ணப்பம், சடகோபர்திரு விருத்தம், சேரமான் பெருமாணயனர் பொன் வண்ணத்தந்தாதி, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி, திருவரங்கத்த,முதனர் இராமாநுச நூற்றந்தாதி, கம்பர் சடகோபரந்தாதி,முதலிய கலித்துறை யந்தாதிகளானும் உணர்ந்து கொள்க.

# இரட்டையர்

இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் எனப்பட்ட பெருங்கவிப் புலவர்கள் எனவும் திருவக்கையிலிருந்த ஆட்கொண்டான் எனப் பெயரிய கொங்கராயன் காலத்திருந்தவர்கள் எனவும் அக்கொங் கராயனாலும் கச்சியிலிருந்த சம்பராயனாலும் நன்றுபோற்றப்பட்ட வர்கள் எனவும் திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடினார்கள் எனவும் திருவண்ணாமலைச் சம்பந்தன் சொன்ன சமுத்திபாடினார்களெனவும் ஆறுவிலகப் பாடினார்களெனவும் வறுமைமிகுத்துக் குன்றும்வனமுங் கடந்து போய்ப் பலர்பிறரைப் புகழ்ந்துபாடி வாணாள்கழித்தனர்கள் எனவும் தமிழ்நாவலர் சரிதையால் அறியலாவன. 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' எனப்பிற்காலத்தார் பாடியது, இவர்களியற்றிய ஆமாத்தூர்க்கலம்பகம்பற்றியே யாமெனத் தோன்றுகின்றது. இவர்களில் ஒருவர் முடவரும் ஒருவர்குருடருமாயிருந்தனர் எனவும் குருடர் முடவரைத்தூக்க முடவர் குருடர்க்கு வழியுணர்த்திச் செல்வார்களெனவும் ஒருசெய்யுளை ஒருவர் பாதியும் மற்றொருவர் பாதியுமாகப் பாடி முடிப்பார்கள் எனவுங் கூறுவர்.

இனி வில்லிபுத்தூரர் மகனார் வரந்தருவார் பாடிய பாரத சிறப்புப் பாயிரத்தில்,

தார காயண வண்டலை தண்டலைச் சனியூர்
வீர ராகவ னருள்பெறு வில்லிபுத் தூர
னூர ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித
தீர காகளம் பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன்.

திருவண்ணாமலைச் சம்பந்தன் சமுத்தி பாடச்சொன்னபோது பாடியது.

மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதென்-மின்னி
னிளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

சம்பராஜன் விகடசமுத்தி பாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்
தெறிக்குந் துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே.

படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்று லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து
மேற்று னெடுத்து வளைத்தெய்து—மாற்றுத
செம்பொன் மலையில்லைச் சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

ஆறுவிலகிய பாட்டு

[1]ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட் லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகிநின் ருர்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டரர்புரஞ்சீறிய வெங்கணைக்கே

திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச்சொன்னபோது பாடியது.

[2]தொல்காப் பியதேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் [3]பொருளழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே.

காட்டுவழியிற் போகும்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடை கூறியது.

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—வொன்றுங்
கொடாதாரைச் சாகென்றுங் கோவென்றுஞ் சொன்ன
லிடாதோ வதுவே யிது.

---

1. ஆற்குழை- ஆலந்தளிர்.
2. தொல்காப்பியதேவர்-இவரொரு புலவர்.
3. பொருளழற்கும்-பிள்ளையழுதற்கும்.

12

# செவ்வைச்சூடுவாரும், அநதாரியும்.

## செவ்வைச் சூடுவார்

இவ்விருவரும் மிகச்சிறந்த செந்தமிழ்க்கவிஞராவர். இவருட் செவ்வைச்சூடுவார்பாடியது 'விண்டுபாகவதபுராண' மாகும். இப்பாக வதமே இக்காலத்து 'ஆரியப்பப்புலவர்' பாடியதென்று வெளியிடப்பட்டுள்ளது. வேம்பத்தூரினின்று மதுரைத்தமிழ்ச் சங்கத்துக்குக் கிடைத்த அப்பாகவத வேட்டுப் பிரதிகளிலெல்லாம் அந்நூலைப்பாடியவர் பெயர் முதலியன நன்குணர்தற் கேதுவான பாயிரப் பாட்டொன்று வரையப்பட்டுள்ளது. அது—

கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத கதையை முன்ன
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருள வியாதமுனி வரனே மீள
வுதிக்குநிம்பை மாதவபண் டிதச்செவ்வைச் சூடியென வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் றேன்றியருந் தமிழாலும் விளம்பினனே.

என்பது. இச்செய்யுளால் வடமொழியில் வியாசர் பாடிய பாகவதபுராணத்தைத் தமிழாற் பாடியவர் 'நிம்பை' யென்னு மூரிலிருந்த மாதவபண்டிதராகிய செவ்வைச்சூடுவா ரென்னும் புலவரந்தணரென்பது இனிது விளங்குவது. இஃதன்றி, அவ்வேம் பத்தூர்க்கண் சிறந்து விளங்கிய புலவர் நன்மக்கள் பெயர்களையும் அவர் செய்த பிரபந்தப்பெயர்களையும் விளங்கவுரைத்தற்கெழுந்த பழையபாட்டொன்று கர்ணபரம்பரைபற்றி வழங்குவது ஈண்டுக் கேட்கப்படுகின்றது. அது

திருமருவு பஞ்சலக் கணவேலை பொங்கிச்
செழிக்குமிரு நிதிகொ ழிக்குந்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சூடுவார்

சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்
துலங்கும்வா சிட்ட மதனைச்
சொல்லிஞ ராளவந் தார்மாத வப்பட்டர்
சொன்னதிரு விளையாடலும்;
... ... ... ... ... ...
... ... புகழ்சவுந்தரிய லகரி
பெருமைமிகு கவிராச பண்டிதர் புகன்றனர்
பிரதாபமிகு திருநெல் வேலிப்
பெருமாளை யன்சொனு னெல்லையன் கோவைப்
பிரபந்தவகை புகழ்பெருகவே.

என்பது. இதன்கண் 'தென்னிம்பை நகரமதில் வாழு மந்தணரிற் சிறந்த செவ்வைச்சூடுவார் சுருதிபுகழ்பாகவத பௌராணமோதினர்' என்பது மேற்குறித்த பாயிரச் செய்யுளோடு முழுது மொத்து நின்று இவ்வுண்மை விளக்குதல் காண்க. இவ் வேம்பத்தூர்க்கட் சிறந்து விளங்கிய புலவர் பலருள்ளும் இச்செவ் வைச்சூடுவாரை முதற்கண்ணே வைத்து இச்செய்யுளுடையார் ஓதுதலால், இவரே அப்பலருள்ளும் முந்தியோரென்பது ஊகிக்கப் படுகின்றது.

## ஆரியப்பப் புலவர்

இங்ஙனமாகவும் கோமளபுரம் இராசகோபாலபிள்ளையார் மேற் குறித்த பாகவதபுராணத்தை ஆரியப்பப்புலவர் அருளிச்செய்தது எனக்கொண்டு வெளியிட்டனர், அங்ஙன மவர்கொண்டது அந்நூ லிறுதியில் அவர் ''அபியுக்தரொருவர் செய்த நேரிசை வெண்பா'' எனத் தலைப்பிட்டுப் பதிப்பித்துள்ள,

''கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக்
கூத்தனென்றுங்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வாரோ—வம்புவியின்
மன்னு வலர்புடைசூழ் வாழ்குடந்தை யாரியப்ப
னந்நாளி லேயிருந்தக் கால்''

என்னும் பாடல்பற்றியேயாமென்றுய்த்துணரலாகும். இவ் வெண்பா,

மிண்டரை வெல்லும் வளர்சிங்க ராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ்மேக முறத்தூரில் வேதியன் ருனும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ்கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்பனதாரி யுந்தொண்டை மண்டலமே.

என்னுந் தொண்டை மண்டல சதகச் செய்யுளுக்கு மேற்கோட் பாட்டாகக் காட்டப்பட்டுள்ள—

கம்பனென்றும் கும்பனென்றுங்-* காளியொட்டக்
கூத்தனென்றுங்
கும்பமுனியென்றும்பேர் கொள்வாரோ—வம்புவியின்
மன்னு வலர்பரவும் வாயலந தாரியப்ப
னந்நாளி லேயிருந்தக் கால்.

என்பதன் றிரிபே யென்பது தமிழ்வல்லவர் எளிதினுணர்ப. இப்பாட்டின் மூன்ருமடி இவ்வாறு வேறுபடுதற்குக் காரணம் ஒருவர் வாயல் என்பதைக் குடவாயல் எனவும், அநதாரியப்பன் என்னும் பெயரை அந்த, ஆரியப்பன் என்பனவற்றின் மருஉவாகிய அந்தாரியப்பன் எனவும் கருதிக்கொண்டு அக்கருத்துக்கியையப் பிறிதொன்று பாடி வைத்ததேயா மொன்ருகிக்கப்படுகிறது. ஆரியப்பன் என்னும் பெயர் இப்பிறழ்ந்த அடிக்கணன்றி வேறியாண்டும் கேட்கப்படுதலேயில்லை, அன்றியும் இவ்வடியிற் குறிக்கப்பட்ட புலவர்க்கும் பாகவத நூலுக்கும் யாதோரியைபும் இல்லையென்பதும் மேலுரைத்துப் போந்தவாற்ருனும் இச்செய்யுளானும் நன்கறியப்படும். ஆரியப்பன் என்னும் ஓர் பெயருண்மைக் கெடுத்துக்காட்டியதாகக் கருதப்படுமப்பாட்டு அநதாரியப்பன் என்பாரைப்பற்றியதாகத் தேறுமிடத்து அவ்வாரியப்பன் என்னும் பெயர் எழுதினர் பிழைப்பானும் பாடகர் பிழைப்பானும் உண்டாயதோர் பொய்ப்பெயர் எனவும் தெளியலாகும். இப்பொய்ப்பெயர்க்கும் பாகவத நூலுக்கும் எவ்வாறியை புண்டாயிற்ருே அஃதியாமறியோம். இனி அநதாரி என்பதைப்பற்றி ஆராய்வோம்.

## அநதாரி

இப்பெயர் அநதா, அரிஎன்னும் இருமொழி புணர்ந்தாயது. அநதா என்பது வணங்கலர், அடியரல்லார் எனப்பொருள்படும். அரிஎன்பது பகைவன், பொல்லான் எனப்பொருள்படும். இவற்ருல் இப்பெயர்ப்பொருள் வணங்கலர்க்குப் பகைவன், அடியரல்லார்க்குப் பொல்லான் எனக்கொள்ளப்படும். இங்ஙனம் கொள்ளுமிடத்து இப்பெயர் அடியார்க்குநல்லான் என்ருற்போல்வதொன்றென்று முய்த்துணரலாகும். மேற்குறித்த ''மிண்டரை வெல்லும்'' என்னுந் தொண்டைமண்டலசதகச் செய்யுளால் இவர் தொண்டைநாட்டு வாயற்பதியினர் எனவும் உறத்தூரின்கண் ஓர்வேதியர்பாற் றமிழ்க் கல்விபயின்றனர். எனவும் அவராற் சிங்கரரயன் என்பானுக்கு

---

* காழியெனவும் பாடமுண்டு.

விற்கப்பட்டு அவனுடன் சென்று தம்முவாத்தியார் சொல்லிய வாறெழுதிப் புகழ்படைத்தன ரெனவும் தமிழறிவாற் கும்பமுனிவரை யொத்தனரெவுனம் அறியலாகும். சோழமண்டல சதகத்து—

ஏட்டிற் பொலிய வான்பசுவொன் றெழுதுங் கன்றுப்
புடைராயன்
சீட்டுக் கவிதை யநதாரி செப்புந்தமிழின் றிறனறிந்தோ
னூட்டிற் புகழ்க ணன்குடையா னுளுந் தண்டா யுதன்பெருமை
வாட்டுப் படுமோ வவன்காணி வளஞ்சேர்சோழ மண்டலமே.

மேற்கோள்

திரம்பெறுகன் றுப்புடைய சிங்கப் பெருமா
னுரம்பெறுதண் டாயுதனுக் கோலை—பெரும்பகலே
யந்திவரு நீநினைந்தா லல்லவென்று லுங்காலம்
பிந்திவரு முந்திவரும் பேச்சு.

எனவருதலான் இவர் கன்றுப்பூரிலிருந்த தண்டாயுதன் என்பானொருவனுக்கு 'திரம்பெறு' என்னும் வெண்பாவினை ஓலைத்தூக்காக விடுத்தனர் எனவும், அவனு லினிதளிக்கப்பெற்றனரெனவும் அறியலாகும். இவர் பாடிய ஓலைத்தூக்கின் கண் தண்டாயுதனைக் கன்றுப்புடைய சிங்கப்பெருமான் எனப்பாடுதலால் அவனே தான் மேற்குறித்த சிங்கராயனுவான் என ஊகிக்கப்படுகின்றது. தொண்டை நாட்டு வாயற்பதியிற் பிறந்தவர் கல்விபயிலுதற்குச் சோனாட்டு உறத்தூர்க்குப் போந்தாரெனவும் இவரது மதிநுட்பத்தைக்கண்டு கன்றுப்பூர்த்தண்டாயுதனுன சிங்கராயன் விலைகொடுத்து இவரைப்பெற்றனன் எனவும் உய்த்துணரப்படும்.

சுந்தரபாண்டியம் பாடியது.

இனி இக்கவிஞர் பெருமான் பாடியது சுந்தரபாண்டியம் எனப் பெயரிய திருவாலவாயுடையார் திருவிளையாடலாம் *. இவ்வரிய நூலாற் கல்லூர், மன்றை என்னும் ஊர்களுக்குரியவனும் கச்சிவீரப்பனென்னும் மதுரையரசனுக்கு அமைச்சனுகிய செவ்வந்தியின் றுணைவனும் படைத்தலைவனும் ஆகிய திருவிருந்தான் என்னும் உபகாரிவேண்டத் தேவபாடையிலிருந்த சுந்தரபாண்டியன் கதையைத் தமிழால் வாயல்-அநதாரி என்பார் பாடினுரென்று நன்கு விளங்குகின்றது. இச்சுந்தரபாண்டிய நூல் திருவாலவாயுடையார் திருக்கோயிலில் அறுகாற்பீடத்திற் றிருவிருந்தானவையினிலரங்கேறியது. இவற்றுக்கு மேற்கோள்கள்—

---

* இவ்வரிய பெரிய நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நன்முயற்சியாற்கிடைத்தது.

மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூ
ரதிப னுந்திரு விருந்தவ னவையினில் வரயற்
பதியில் வாழந தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்.

(சுந்தரபாண்டியம் பாயிரம்)

ஆய சொக்க ரருட்கடல் வெள்ளமார்
நேயன் வெண்குடை நீழவிற் சேடன்போற்
சேய பார்ச்சுமை செந்நுகந் தாங்கினன்
றூய நெஞ்சின னீதி தொடர்ந்துளான்.

அன்னவ னரசர்சூழுங் கச்சிவீ ரப்பனென்னு
மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி துணைவன்
வாய்மைத்
தென்னவன் றிருவிருந்தான் சவுந்தரன் றேவ பாடைத்
துன்னிருங் கதைதென் னூலாற் சொல்கெனச் சொல்ல
லுற்றேன்.

(ஷை நகரச் மருக்கம். 46, 47.)

குடக்கொடு குணக்குநிறை யத்திறை கொடுப்ப
வடக்கர சிரிற்கரு னடப்படையை மாருய்த்
திடத்தொடுசெவ் வந்திதுணை வன்றிருவிருந்தா
னடர்த்தசெய விற்பொரு தடாதகை யடர்த்தாள்.

(விசயச்சருக்கம் 23.)

இதன் கண் கன்னடப்படையைச் செவ்வந்தி துணைவன் அடர்த்த செயலை உவமித்தலால் திருவிருந்தான் படைத்தலைவனு தலுணரப்படும்.

இருவெஞ்சிலை குனியத்தனி மதனீலந்தொட் டெனமேற்
புருவந்துணை விழிபெற்றருண் மயிலேபொன்னி நதிவா
யுருவந்திக ழரங்கக்கரு மணியுத்தரத் தொருபான்
மருவுந்திரு விருந்தானுரு மன்றைப்பதி யிதுவே.

(ஷை நகர்புகு சருக்கம் 20.)

இதனல் திருவிருந்தானுடைய மன்றைப்பதி சீரங்கத்துக்கு வடக்கணுள்ள தெனத்தெரிவது.

இனி மதுரைத் திருப்பணிமாலை என்னும் நூற்கண் வீரப்பன் பெயரும் செவ்வந்தி பெயரும் பல்காற் பயில்கின்றன. அதனலிந் நூலாசிரியர் காலமும் உய்த்துணரப்படும்.

விதிக்கு முகுந்தற்கு மெட்டாத சொக்கற்கு மேதினியோர்
துதிக்குங் கொடிக்கம்ப மண்டப மொன்று துலங்கச்
செய்தான்
கதிக்குங் பரமன்னர் பொன்னுர் முடிகளைக் காலிலெற்றி
மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்கிட்ண வீரப்பனே.

கிருஷ்ண வீரப்ப நாயகர் காலம் சகாத்தம் 1494

(திருப்பணி மாலை.)

சுரிகுழ லங்கயற் கண்ணிபொற் கோயிலைச் சூழ்ந்த
தெற்குத்
திருமதி லுக்கரு கேயொரு மண்டபஞ் செய்ததிலே
யுரிமையி னுலருட் செவ்வந்தி யீசரை யுண்டாக்கினுன்
திருவளர் கல்லூர்ச் சனிப்பெரு மாடந்த செவ்வந்தியே.

இது நிகழ்ந்தது சக—1486. (திருப்பணி மாலை)

இப்பாட்டால் திருவிருந்தவன் தந்தை சனிப்பெருமாளென் றுய்த்துணரலாகும்: அநதாரியாரின் காலமும் இச்சகாத்தமாமென் ருேர்ந்து கொள்க. இத்திருப்பணிமாலையில் "தெண்டிரைப் பார்புகழ் கல்லூர் வருசின்னச் செவ்வந்தியே" "மற்புயவேள் சின்னச் செவ்வந்தி நாத வரோதயனே" என்பன போல, பலவிடங் களிற் சின்னச்செவ்வந்தி என ஒருபெயர் பயின்றுள்ளது. அப் பெயரினுன் முன்னைச் செவ்வந்திக்குப் பிற்பட்டவன் போலும். ஆழ்வார்திருநகரியினின்று மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குக் கிடைத்த "பலதிரட்டு" என்னும் ஏடொன்றில்,

செவ்வந்தி தந்த திருவிருந்தான் மன்றைத் திண்கிரிமேற்
பவ்வந் தருந்திரு மாமயி லேபவ ளக்கிரிவாய்த்
[1] தவ்வொன்று ஙவ்வொன்று மவ்வா றிரண்டொன்று தானிருக்க
[2] மவ்வஞ்சு தவ்வஞ்சு கவ்வஞ்சு காட்டல் வழக்கிலையே.

என ஓர் செய்யுள் காணப்படுகின்றது. இதன் கண் செவ்வந்தி தந்த திருவிருந்தான் எனவந்தது திருவிருந்தான் செவ்வந்தி துணைவன் என அநதாரியாரால் பலவிடத்து வழங்கியவற்றிற்கு மாருவது. செவ்வந்தி தம்பி என்பது பிற்காலத்துப் பாடம்பிழைத் தது போலும்.

இத்துணையுங்கூறியவாற்ருல் இவ்விருபெரும் புலவர்களின் வரலாறு ஒருவாறுணரப்படும்.

---

1. தனம் 2. முதுகு

# சயங்கொண்டார் ஊர்.

''செய்யும் வினையு மிருளுண் பதுவுந் தேனு நறவு மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறவுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார்
தமதூர்
கையு முகமு மிதழும் விழியுங் காலு நிறமும் போலுங் கமலங்
கொய்யு மடவார் விழிவா யதரங் கோபங் கமழுந் தீபங்
குடியே.''

இவ்வாறு ஒரு செய்யுள் இத்தமிழ்ச் சங்கத்துள்ள ''தமிழ்நாவலர்சரிதை'' என்னும் நூலிற் கண்டது. இப்பாடலின் தலைக்குறியீடாக ''சயங்கொண்டார், அபயன் 'நுமதூர் யாது' என்று கேட்டபோது, சொன்ன கவி'' என்று வரையப்பட்டுள்ளது. இதனாலும், சயங்கொண்டார் அரசனுக்கு விடையாகக்கூறிய மேற்கண்ட பாடலாலும் அப்புலவர் பெருமானது ஊர் 'தீபங்குடி' என்பது தெளிவாகும், தீபங்குடி—திண்டிவனத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூர்.

மேற்குறித்த பாடலுள் முன்னிரண்டடியையும் உற்று நோக்குமிடத்துச் சயங்கொண்டார் சைநாபிமானி என்று தோற்றுகின்றது. இல்லையாயின், பொய் கொலை முதலிய தவிர்தலோடு, சமணர்க்குச் சிறந்த இரவுண்டல் தவிர்தலையும், தமதூர் சைநக் கடவுளின் தலமாயிருத்தற் சிறப்பையும் எடுத்தோதிப் புகழாரன்றே. தீபங்குடி இன்றைக்கும் சைநர் மிகுந்துறையும் கிராமமாகவுள்ளது.

# 14

# ஆவிநன்குடி

## ஆவியர்

முற்காலத்து இத்தமிழகத்து **ஆவியர்** என்னும் பெயரில் ஓர் குடியினர் இருந்தனரென்பதும். தமிழ் வள்ளல்கள் எழுவரி லொருவனான **பேகன்** என்பான் அக்குடிப்பிறந்தானும் அவரிற் சிறந்தானும் ஆவன் என்பதும்

''அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கனுடன் பேகனும்''

எனவரும் சிறுபாணாற்றுப்படையாலும்.

''அதுமனெம் பரிசிலாவியர் கோவே''

எனவரும் புறப்பட்டாலும் (147) நன்கறியலாகும்.

''வண்டுபடத் ததைந்த கண்ணி யொன்கழ
பருவக் குதிரை மழவ ரோட்டிய
முருக னற்போர் நெடுவே ளாவி
யறுகோட் டியானைப் பொதினி யாங்கண்''

(அகம்-1) எனவும்

''முழவுறழ்திணிதோணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி''

(அகம்-61) எனவும் வரும்அகப்பாட்டுக்களாலும். ''நெடுவேளாவி குறுநிலமன்னன். பொதினி-ஆவிமலை'' எனவரும் அதனுரை யாலும் பொதினியிடத்து ஆவி என்னும் பெயரில் ஓர் குறுநில மன்னனிருந்தமை தெளியலாகும். ஆவியர் என்பார் ஆவிவழித் தோன்றியோராதலால் இவ்வாவி அவ்வாவியர் குடிக்கு முதல்வனாதல் தெள்ளிது. அரிசில்கிழார் என்னும் புலவராற்பாடப் பட்ட தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னுஞ் சேர மானுடைய தாயாகிய பதுமன்றேவையின்றந்தைக்கு **வேளாவிக்கோ** என்பது பெயராதல் பதிற்றுப்பத்தினுள் எட்டாம் பத்தின் பதிகத்தாலறியலாவது அரிசில்கிழார் பேகனாற்றுறக்கப் பட்ட கண்ணகி என்பவளை அவனோடு சேர்த்தல் வேண்டி

அவனைப்பாடினர் என்பது 146 ஆம் புறப்பாட்டால் அறியப் படுதலால் வேளாவிக்கோவின் மகன் மகனாகிய தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையும். பேகனும் ஒரு காலத்தவராம் நன் குணரலாகும்.

தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்கு வேளாவிக்கோ என்பான் மாதாமகராய் அணிமைக்காலத்தவனாதலின் பேகன் என்னும் வள்ளற்கும் அவன் அணிமைக் காலத்தவனாவன். இத்துணை அணிமைக் காலத்தே இவ்வேளாவிக் கோவின் வழித் தோன்றியோர் பெருகிச் சிறந்து ஆவியர் எனக் குடிபற்றிய பெயரான் வழங்கப்பட்டாரென்றலினும் இவ்வேளாவிக்கோவுக்கும் முற்பட்ட சேய்மைக் காலத்தே ஆவியென்னும் பெயரான் ஒருவனிருந்தனன் எனவும் அவன் வழியினரே ஆவியரெனவும் இவ்வேளா விக்கோவும் பேகனும் அக்குடியினராவர் எனவும் கொள்ளுதல் தகுதியுடைத்ததாகும். இங்ஙனமன்றி இவ்வேளாவிக்கோவே ஆவியர் குடி முதல்வனாகிய ஆவி எனக்கொண்டு அவன் தானுளனாய காலத்தே தன்வழிபெருகவும் தன் பெயர் சிறக்கவும் நின்றான் எனக்கூறினும் இழுக்காது. சேரர் தலைநகராகிய வஞ்சிப் புறத்து **வேளாவிக் கோமந்திரம்** என்னும் பெயரில் ஒரு மாளிகையிருந்தமை

"பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி"

எனவரும் சிலப்பதிகார நடுகற்காதையடிகளான் அறியப்படுவது

## வையாவி

பேகன் என்னும் வள்ளலை **வையாவிக் கோப்பெரும் பேகன்** எனவும் வழங்குவரென்பது 1.1- ஆம் புறப்பாட்டல் அறியலாகும். ஆவியர் குடியிற் பிறந்து சிறத்தலான் அக்குடி முதல்வனான ஆவி யின் பகுதிப்பட்டானாகச் சிறப்பித்து **வையாவி** என வழங்கின போலும். வை-பகுதி; "வைக்கோலுங்கூர்மையும் பகுதியும் வையெனல்" என்பது பிங்கலம், இத்துணையும் கூறியவாற்றான் ஆவி என்னும் குறுநில மன்னன் பெயர்ப் பெருவழக்கு நன்று தேறப்படும். இனி ஆய் என்னும் வள்ளலிருந்த ஊர் ஆய்குடி என வழங்கப்பட்டதாகும் என்பது தெள்ளிது.

## ஆவிநன்குடி

முருகக் கடவுள் திருப்பதிகளுளொன்றாய் இக்காலத்து ஆவினன்குடி எனவும் பழனிமலை எனவும் வழங்கப்படுவதே இந்த

ஆவிநன்குடியாகவும் இவனுடைய பொதினிமலையாகவும் கொள்ளல் பொருந்திற்றுகும்.

பழனியில் ஓர்குளம் இன்றைக்கும் வையாபுரி (வையாவிபுரி) என்னும் பெயரான் வழங்கப்படுவது பலரும் அறிவர். இதுவும் முன்னுரைத்த வையாவி என்னும் பெயர் வழக்கினைப் புலப்படுத்தல் கண்டு கொள்க. முன்னை அகப்பாட்டில் முருகன், நெடுவேள் என வந்த பெயர்கள் அப்பொதினி மலைக்கண் முருகக்கடவுள் கோயில் கொண்டமைஅறிவுறுத்தும். பொதினி என்பது பிற்காலத்துப் பழனி எனச் சிதைத்து வழங்கப்பட்டது. போலும்.

ஆவி நன் குடி-ஆவி நன்குடி
வையாவி-வையாவிபுரி
பொதினி-பழனி

இவற்றை ஆராய்ந்து கொள்க. மதுரைக்குத் தெற்கே ஒரு காத தூரத்து ஆவியூர்: என்னும் பெயரில் ஒருருள்ளது. இதுவும் இவ்வாவியின் பெயரான் பல ஊர்கள் வழங்கப்பட்டமையினை வெளிப்படுத்தும்.

# 15

# மாந்தையும், மரந்தையும்

இவற்றுள் முன்னது மேற்குக் கடற்றுறையிற் சேரர்க்குரிய தாகிய பட்டினமென்பது ''குட்டுவன் மாந்தை''(அகம்-376குறுந் தொகை35), ''கடல் கெழுமாந்தை'' (நற்றிணை-395), என வருத லான் அறியப்பட்டது.[1] தாலமி என்னும் யவனுசிரியர் தம்பூகோள நூலிற் சேரநாட்டிற்கு வடக்கட் கடற்றுறைப் பட்டினமாக மாந்தைக் கரையினையும் சேரநாட்டின் தெற்கே ஆஅய் நாட்டிற் கடற்றுறையிலில்லாது அகநாட்டுள்ளதாக மரந்தையினையுங் கூறினர்.

**மாந்தை**

பரணர் பாடிய அகப்பாட்டில் (376),

''குரங்குளைப் புரவிக்குட்டுவன்

மாந்தையன்னவென் னலந்தந்து சென்மே''

என்புழிக் ''குரங்குளை'' என்னுஞ் சீருக்கு எதுகைத்தொடை இயைய வருதலான் இவ்வூர் ''மரந்தை'' என்று படிக்கப்பட வேண்டுமென்று சிலர் கருதினர். எதுகை நயம் ஒன்றே கருதி இவ் வூரை இங்ஙனம் படிப்பது பிறசான்றுகளால் ஆதரிக்கப்படுவது கொல்லோ என்று இங்குச் சிறிது ஆராய்வாம்.பரணர் பாடல்களிற் பெரும்பாலன எதுகை நயம்பட வந்தனவேனுஞ் சிறுபாலன

''காமங் கைம்மிக வுறுதர
வாஞ வரும்படர் தலைத்தந் தோயே'' (அகம்-258)

எனவும்,

''நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே'' (குறுந்-120)

எனவும்,

''மாயா வியற்கைப் பாவையில்
போத லொல்லாளென் னெஞ்சத்தானே''(நற்றிணை-201)

எனவும், எதுகை நயமில்லாமலும் வருதலான் இவ்வூர் வந்தசீர்

---

[1] See Ancient India Potolemy p. 45, 57

எதுகையில் நின்றது, எதுகையில் நின்றதன்று எனத்துணிதற்கட் பிறசான்றுகளே வேண்டுதல் இன்றிமையாதென்றுணரலாம்.

## மாந்தை கடற்றுறைப் பட்டினமே

இவ்வூர் வந்த பல்லிடத்தும், நல்லிசைப்புலவர்.

''கடல் கெழு மாந்தை'' (நற்றிணை-395)

எனவும்,

''பொங்கு திரை பொருத வார்மணலடைகரை
............துறைகெழு மாந்தை (ஷை 35)

எனவும்,

''யானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மன்ன ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை'' (குறுந்-34)

எனவும் பாடிக்காட்டுதலான், இவ்வூர் கடற்றுறைப் பட்டினமென நன்கு துணியப்படுவது. கடல் கெழீஇய இந்நகர் குட்டுவனுடைய தென்று கூறுதலான் இது மேற்குக் கடற்கரையிலுள்ளதென்று தெளியத்தக்கதாம். அகப்பாட்டினும் குறுந்தொகையினும் குட்டுவனுடையதாகக் கூறிய மாந்தை கடற்றுறைப் பட்டினமாகவே நினைதல் தகும். அகப்பாட்டில் (127) மாமூலனர்

''வலம்படு முரசிற் சேர லாதன்
முந்நீ ரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத் தொன்னர்
பணிதிறை தந்த பாடுசா னன்கலம்
பொன்செய் பாவை வயிரமோ டாம்பல்
ஒன்றுவாய், நிறையக் குவைஇ யன்றவ
ணிலந்தினத் துறந்த நிதியத் தன்ன
வொருநா ளொருபகற் பெறினும் வழிநாட்
டங்கலர்''

எனக் கூறுதலாற் சேரலாதன் என்பவன் இந்நகர்க்கண்ணே அளவில்லாத பெருஞ் செல்வம் தொகுத்துப் புதைத்திருந்தவன் ஏதோ ஒரு காரணத்தால் அந்நாளில் அவற்றை எல்லாம் நிலந் தின்னும்படி விட்டுத்துறந்தனன் என்றும் அறியப்படுவது. ஈண்டு

''மாந்தை முற்றத் தொன்னர்
பணி திறை தந்த பாடுசா னன்கலம்''

என்பதனானும் சேரலாதன் தன் தொகுத்த பெருஞ் செல்வத்தை நிலந்தினத் துறந்தனன் என்பதனாலும் இவ்வூர் இவன் நாட்டின்

எல்லைப் புறத்ததென்று உய்த்துணரலாகும். "முந்நீரோட்டிக் கடம்பறுத்து அக்கடம் பறுத்த வென்றியை நிலைநாட்டவேண்டி இமயத்து விற்பொறித்து மீள்கின்றவன் நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னுர் பணி திறை தந்த நன்கலம், பொற்பாவை இவையெல்லாம் ஆம்பலென்னும் பெரிய எண்ணளவாகக் குவித்துப்பின் இவற்றை நிலந்தின்னும்படி விட்டுத்துறந்தது கூறுதலான் இவ்வாறு கருதப்பட்டதென்க.

பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்திற் பரணரோடொருகாலத்தவரான பெருங்குன்றூர் கிழார்,

"வளைகடன் முழவிற் றொண்டியோர் பொருந" (பதிற்-88)
"கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே" (பதிற்-90)
"மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே" (ஷ)
"எழா அத்துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை" (ஷ)
"இலங்கு நீர்ப்பரம்பின் மாந்தையோர் பொருந" (ஷ)

எனப்பாடுதலான், இவ்வூர் தொண்டிப் புறத்தும், கொங்குநாட்டும் குட்டநாட்டும், பூழிநாட்டுமில்லாது சேரருடைய வேறோர் தனி நாட்டிருப்பது நன்கு தெளியலாகும். ஈண்டுத் தொண்டியோர், கொங்கர், குட்டுவர், பூழியர், மாந்தையோர் என்று கூறப்பட்ட மக்கள் வேறு வேறு நாட்டவராதலே தகுமென்க. இதனுன் மாந்தையுள்ள நாடு பூழிநாட்டிற்கும் வடக்கணுள்ளதாகலாம். அன்றிக்கடன் மலை நாட்டின் தெற்கணுள்ளதாகலாம். கடன்மலை நாட்டின் தெற்கணுள்ள நாடு அக்காலத்து ஆஅய் என்னும் வள்ளலுடையதாயிருந்ததென்பது இந்நல்லிசைப் புலவர் காலத்தேயிருந்த மேற்றிசை யவனுசிரியரான தாலமி என்பவரெழுதிய பூகோள நூலானன் கறிந்தது.

"தென்றிசை யா அய்குடி யின்றுயின் (புறம்-132)
எனவும்,
"பொதுமீக் கூற்றத்து நாடுகிழவோயே" (ஷ-135)

எனவும் நல்லிசைப் புலவர் வேள் ஆஅயைப் பாடுதல்கொண்டு இவ்வுண்மை வலியுறுதல் காண்க.

### மரந்தை அகநாட்டூராதல்

இந்த ஆஅயினுடையதாய் அவனுட்டுக் கடற்றுறையிலில்லாததால் அவனுடைய அகநாட்டே அவனுக்குச் சிறந்த ஊர் 'Morounda' மரந்தை என்பது ஒன்றுண்டென்பது அத்தாலமி நூலானறியலாகிறியலாது இம்மரந்தை கடற்றுறைப்பட்டினமாகாது

அகநாட்டுரே யாதலால் ஈண்டுக் குறித்த கடல்கெழு நன்னகர் அஃது ஆகாதென்பது ஒருதலை. இம் மாந்தை என்னும் ஊர் ஆஅய்வேட்குப் பின்னர்ச் சேரர் மலைநாட்டொடு சேர்ந்து சேரர்க் குரியதாதலால் இதனை "வஞ்சியர் மரந்தை" (குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்) எனப்பின்னுள்ளோர் பாடுவாராயின ரென அறிக. "வஞ்சியு முறந்தையு மரந்தையும கோதையுமளிக் கும பயன்வருகவே" என்பதும் அது. இதனாலிம் மரந்தையின் வேருய மாந்தைக் கடற்றுறைப்பட்டினம் பூழி நாட்டிற்கு வடக் கணுள்ளதெனக் கருதுவது பொருந்தும். கொச்சிக்கு வடக்கண் 28கல் தூரத்திற் கொண்கானத்துள்ள ஏழின் மலைக்குத் தெற்கில் மாதை என்னும் பெயரில் இப்போது வழங்கும் ஓர் கடற்றுறையூர் உண்மை (Vide Logan's Malabar Manual, p 78, 224, 231 etc) அறியப்படுதலால் இவ்வூரே பண்டைக்காலத்துச் சேருடைய மாந்தை யென்னத்துணியப் படுவது. மாந்தையை மாதை யெனத் துளுவர் வழங்கினர் போலும்.

"கொண்கான,
நன்னனன்னாட்டேழிற் குன்றம்" (நற்றிணை 391)

என்பதனால் ஏழின்மலை கொண்கானத்திருத்தல் புலனாம்.

## மாந்தை ஏழின் மலைக்குத் தெற்கினது

இவ்வூர் பழையவரசரின் கோவிலக முள்ளதென்று கேரளோற் பத்தி கூறுதல் காணலாம். (Vide Logan's Manual P. 286). இதன் கண்ணே முதன் முதல் புத்தவிகாரம் ஏற்படுத்தப்பட்ட தென்றும் அந்நூல் கூறும்[1]. இவற்றால் இவ்வூரின் பழைமையும் முக்கியமும் நன்குணரலாகும். பதிற்றுப்பத்திற்பெருங்குன்றூர்கிழார் தொண்டி யுள்ள பக்கத்தையும் பூழி நாட்டையும் குட்டநாட்டையும், கொங்கு நாட்டையும் பிரித்துத் தனித்தனியே கூறி இவற்றின் வேறாக "மாந்தையோர் பொருந" என்று கூறுதலானும் மாந்தை தெற்கணுள்ளதெனத் தெளியப்பட்டதனானும் இம் மாந்தை கொண்கானத்து ஏழில் மலைக்குத் தெற்கணுள்ளதாகக் கருதப் பட்ட தென்க. ஏழில்நன்னனைக் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், போரிற் கொன்ற செய்தி 199. ஆம் அகப்பாட்டிற்

"குடா அ
திரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலப்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல்

1. Logan's Manual p.224.

இழந்த நாடுதந் தன்ன''

எனவும், பதிற்றுப்பத்துள்

(88) சுடர் வீவாகை நன்னற் றேய்த்துக்
குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றோ
டுருகெழு மரபி னயிரை பரைஇ''

எனவும் கூறுதல் கொண்டு அறியப்படும். இதனாற் சேரர் ஏழில் மலைக்குத் தெற்கணுள்ள மாந்தைப் புறத்து நாட்டை மீளவும் வென்று கொண்டது புலப்படுதலான் சேரன் மாந்தையோர் பொருநன் எனப்பாடல் பெறுதல் பொருத்தமேயாமென்க.

## பகவதி காவலரால் மாந்தையாயிற்றெனல்

இனி இங்ஙனமன்றி ஏழில் அரசர் குலதேவதை யாகிய பகவதி இவ்வூரிற் கோயில் கொண்டது பற்றி இது மாதாயூர்[1] என வழங்கப்பட்டு, அதுவே மாதை, மாந்தை எனப் புலவராற்றிரித்துக் கொள்ளப்பட்டதோ எனக் கருதினும் பொருந்தும். இஃது உறை யூர் என வழக்கினும் உறந்தையென நூலினும் வழங்குவது போலு மெனக் கொள்ளத்தகும். அகநானூற்றில்,

ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய (345)
வினமழை தவழு மேழிற் குன்றத்து

என்பதனாற் சிறப்பிக்கப்பட்ட 'ஓங்குபுகழ்க் கானமர் செல்வி' இப் பகவதி என்பது நன்கு பொருந்தும். இவ்வகப்பாட்டுப்பாடிய குடவாயிற் கீரத்தனார்க்கு முன் இவ்வேழில் மலையைப் பாடியவர் பரணரும், (அகம்-152) மாமூலனாரும் (அகம்-347) ஆவர். இவ் விருவருள் யாரை

''நுணங்கு நுண்பனுவற் புலவர்''

என்பதனா லிப்புலவர் குறித்தனரோ, நன்கு தெரிகிலேம்.

''அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை
யணங்குடை நெடுவரைப் பாழிச்சிலம்பின்'' (அகம்-372)

எனப்பரணர் இவ்வேழினெடுவரையிலுள்ள பாழிச்சிலம்பினை இங்ஙனம் விசேடித்துப்பாடுதலான் ''நுணங்கு நுண் பனுவற் புலவன்'' என்பதனாற் கருதப்பெற்றவர் பரணரென ஒருவாறு துணியலாம். கடவுள் பெண்டெய்வத்திற்காதல் ''கடவுட் பெயரிய கானம் (பதிற்-88) என்றது விந்தாடவியை; கடவுளென்றது ஆண்டுறையுங் கொற்றவையினை'' எனப்பழைய வுரைகாரர்

கூறியதனுனும் ''கடவுளெழுதவோர் கற்ருரானெனின்'' (சிலப். காட்சிக்-130) என இளங்கோவடிகள் கூறுதலானும் அறியலாம். 'கடவுளெழுத' என்புழிக் கடவுள் தெய்வமாகிய கண்ணகி யாதல் காண்க. 'கடவுள் அயிரை' (பதிற், 79) என் புழியும் கடவுள் கொற்றவை என்ருர் பழைய வுரைகாரர். இதனுல் ஏழின் மலைப் புறம் இப்பகவதி காவலாற் பண்டு சிறந்தது நன்குணரலாகும். இதனுல் இவ்வூர் மாதாய், மாதை என வழங்கப்பட்டதன் காரணமு முணரலாகும். குடவாயிலினும் உறையூரினுமில்லாத நகர தகரவொலிகள் ஏறி, முறையே குடந்தை, உறந்தையெனத் திரிந்து வருதல் தமிழ்ச் செய்யுள் வழக்காயின் மாதாயூர் என்பது மாதையெனவும் அதுவே மாந்தை யெனவும் வழங்கப்படுதல் நூனெறியே யாமென்று கொள்க. இவ்வூர் சேரலாதனுற் பெருநிதி முழுதும் நிலந்தின்னும் வண்ணம் விட்டுத் துறக்க நேர்ந்ததன் காரணம் பெரும் போர்த்தோல்வி யாகலாமென்று முன்னரே கூறி னும். ''நிலந்தினத்துறந்த நிதியத்தன்ன'' எனப்பாடுதலான் இது சேரலாதன் சந்நியாசமாகக் கொள்ளற் கியையாமை உணர்க. சந்நியாசமாயின் இவன் வழியினன் அந்நிதியை ஆண்டுதுய்த்து வழங்குவன் என்க.

## மாந்தைத்துறையில் குதிரை வாணிகம்

இனிப்பரணர்

''குரங்குளைப் புரவிக் குட்டுவன்
..............மாந்தை'' (அகம் 376)

எனப்பாடியது

''கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப்புரவி யெய்திய தொல்லிசை'' (ஷை 345)

யைக் கருதியதோஎன ஊகிக்கவும் இவ்வரலாறு இடந்தருகின்றது கானமர் செல்வி யருளலாற் போர்ப்படைக்கு மாவந்தவாயி லாதலான் இக்கடற்றுறையூர் மாந்தை யெனப்பட்டதோ என நினைக்கவும் இடனுண்டு. இருந்த வளமுடையார் கோயிலுடைமை யால் இருந்தையூர் என்ருற்போல இதனைக் கொள்ளலாம். ஏழின் மலைக்குத் தெற்கண் ஒருகாத தூரத்திற்குள் இத்துறைமுகத்தூர் உள்ளதனுல் ஏழிற்கு எய்திய புரவிகள்இத்துறைவாயிலாக வருதல் கூடுமென்க. இதன் கணுள்ள பகவதி குடவாயிற் கீரத்தனுர் பாடிய ''கானமர் செல்வி'' ஆவளென்றுணரலாம். கானமர் செல்வி—காடுகிழாள். துர்க்கா தேவிக்கு இப்பெயர் வந்தது தக்ஷிண பதங்காவல் பூண்டு முதன் முதல் இத்தெய்வம் விந்தியா டவியில் வதிதலான் என்றுணரலாகும். இவ்வுண்மை ''கடவுட் பெயரியகானம்'' எனவரும் பதிற்றுப்பத் (88) துரையிற் ''கானம்

என்றது விந்தாடவியை கடவுள் என்றது ஆண்டுறையுங் கொற்ற வையினே'' எனப்பழைய வுரைகாரர் கூறுதலானுணரலாம். இதனல் இவ்வூர் மாவிந்தை யெனப்பட்டது மருவி மாந்தையென வழங்கலாயிற் றெனினுமமையும்.

விந்தை...................சீர்சால் பகவதி சிறந்ததொல்
றெயரே'' (திவாகரம் தெய்வப்பெயர்)

சாத்தூர் சமீனைச் சேர்ந்ததான ஓர் ஊரில் மாதாயின் கோயில் ஒன்றுள்ளது. அதன் றேவியை மாதாவரசி என வழங்குவர். இக் கொற்றவை குதிரை வாணிகரால் இன்றைக்கும் பூசிக்கப்படுவது ஈண்டைக்கு நினைக்கத்தக்கது. குதிரைகள் தேவர்காவலிற் கடல் வழியாக வந்திறங்குமெனப்பாடுதல் பண்டைவழக்கென்பது.

''செல்லா நல்லிசை, யமரர்காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்'' (184-185)

எனப்பட்டினப்பாலையுள் வருதலானறியலாம். பிற்காலத்து மேற் றிசையினின்று வந்த யாத்திரிகர்கள் பலரும் இவ்வூரையும் இதன் றுறையையும் மாராவியா, மாராபியா, ஏழில் மாராவி என வழங் கினர் என்றும், இவ்வூர் இந்நாளில் மாதாவி, மாதாய், மௌதாய் என வழங்குவதென்றும் கர்னல்யூல் என்பவர் மார்க்கோ போலோ யாத்திரை நூலில் எழுதி விளக்கியுள்ளார் (பக்கம் 387—388) அவர் ராஷிட்உடீன் என்பவர் ஏலி மலையினின்று கீழே 12 கல். தூரத்திலுள்ள சேரபட்டினத்திற்கு (Jorpathan)ச் சென்றதாகக் கூறுகின்ருர் என்றெழுதிக் காட்டலான் (ஷை பக். 386) இம் மாந்தையே ஏழிலையடுத்துள்ள சேரர் பட்டினமாதல் உணரலாம். அவர் அரபிய எழுத்திலுள்ள ''ராஷிட்உடீன்'' நூற்கையெழுத் துப் பிரதியை (Royal Asiatic Societyயில்) நேரிற் பார்த்தபோது அங்கு ஹேலி மாராவி (Heli Marawi) என்றே எழுதியிருப்பதைத் தெரிந்ததாகக் கூறியுள்ளனர். அவர் இத்தொடர்க்குரிய அம்மொழி எழுத்துக்களை ஆண்டுள்ளபடியே அச்சிற்பதித்துக் காட்டியுள்ளனர். இவற்ருல் இவ்வூரின் முதலெழுத்துமா என நெடிலாதலல்லது, ம. எனக் குறிலாதலின்றென்பது நன்கறியப் படுவது. இப்பல பெயருமே சங்க நூலிற் புரவிவந்த வரலாறு குறித்து மாவருவாய் என்பதன் சிதைவோ என்று ஊகிக்கப்படுவது மராபீத என்பது குதிரைப்பந்திக்கும் முராபிதாத் என்பது நிறுவப் பட்ட குதிரைப்படைச் சூழலுக்கும் பெயராகப் பாரஸீக மொழி யின் வழங்கலான் சங்க காலத்துப் புரவிவந்த கதைபற்றி அவர் மொழி பெயர்த்திட்டதனல் இவ்வூர்ப்பெயர் இங்ஙனமெல்லாம் வழங்கல்பட்டது என்பது நன்கு பொருந்தும். மேல் கடற்கரையில் மாந்தைக்கரை எனப்பெயரிய துறைமுகப்பட்டினம் உள்ளதெனத் தாலமியும் பெரிப்ளஸூம் கூறினர். அவர் நன்கு

இடம் விளங்கக் கூறினாரில்லை. தாலமி. இடங்களைப்பற்றிப் பல வாறு பிறழக் கூறுதலால் இவர் சொல்லும் ஊர்களின் நிலை ஒரு தலையாகத் துணிதற்கில்லை யென்று யூல், காம்பெல் முதலியோர் அபிப்பிராயங்கொள்வர்.

## மரந்தையென்ற பெயர் வழக்கினுண்மை

எங்ஙனநோக்கினும் கானமர் செல்வியருளான் மாவந்தவூர் இஃதாதல் உய்த்துணரலாகும். இனி இத்துறையையே வங்கம் வருவாயென்பது கருதி மரவாய் என்றுவழங்கியதை மாராவியென யாத்திரிகரும் மரந்தையெனப் புலவருந்திரித்து வழங்கினரெனக் கொள்ளலாமெனிற் கூறுவாம். முசிரியாசிரியர் நீலகண்டனார் எடுத்தாண்ட இறையனார் களவியல் உரைமேற்கோட் கலித்து றைகள் பல வற்றுள்

''வேல் கொண்ட வேந்தனம் மாந்தையன்னாள்''

எனவும்

''மன்னேந்திய புகழ் வணெடுமாறன்றன்
மாந்தையன்ன''

''வாருங் கமழ்கண்ணி வசனவன் மாறன்றன்
மாந்தையன்ன,''

எனவும்

''வானலங் கொண்டகை யான்மன்னன் மாறன்
றன் மாந்தையன்னாள்''

எனவும்

வருவன கொண்டு இவ்வழக்கினுண்மை யுணரப்படுதல் கண்டு கொள்க. ஈண்டெல்லாம் வேந்தன் மரந்தை, மாறன் மரந்தை யெனவும் இயைத்துப்பாடாது, அம்மாந்தை, தன்மாந்தை யெனப் பாடும் வண்ணம் புலவரையேவியது மாந்தையெனவே அந்நாளில் இத்தமிழ் நாடு வழங்கிய வழக்காகுமென்றெளிதிலுணரலாம். ஈண்டுக் காட்டிய கலித்துறையடிகள் பாண்டியன் அரிகேசரியைப் பாடிய பாண்டிக் கோவையிலுள்ளனவாகும். பாண்டியன் அரி கேசரி காலம் கி. பி. 670 முதல் 710 வரையும் ஆகுமென்பது ஆராய்ச்சியாளர் துணிபாதலான் இவ்வழக்கு இற்றைக்கு 1100 ஆண்டுகட்கு முற்பட்டதால் அறியலாம். இப்பழங்காலஞ் சங்க நூல்வழக்கு மறந்தகாலமென்று கருதுவது பொருந்தாதாகும்.

இனி, அக்காலத்து மரந்தையென்று தான் ஏடுகளிலிருந்தது. அதனைப் படித்தவர் மரந்தை யெனப் படித்துக்கொண்டு வெண் டளை பிழையாமைக்கு அம்மாந்தை யெனவும் தன்மாந்தையென வும் பிரதிசெய்து வைத்தனர். அப்பிரதியினடியாகவே இம்மாந்தை

வழக்குண்டாயதென்று வாதிக்கலாமெனிற் கூறுவாம். இப்பாண் டிக்கோவைக்கு முற்பட்டவரும் சங்கநூல் வழக்கெல்லாம் வடித் துணர்ந்தவரும், சங்க காலத்திற்கு மிகவும் பிற்படாதவரும். தமிழ் மூவேந்தர் உள்ள காலத்தே தந்நூல் செய்தவரும் ஆகிய முத்தொள்ளாயிர முடையார்,

''மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டும் நம்குறை—நல்ல
திலகங் கிடந்த திருநுதலா யஃதா
லுலகங் கிடந்த வியல்பு''

என்பதனுல் இவ்வூரை ''மரந்தை எனவே தெளியக் கொள்ளு தலறியலாம். இதனுல் இவ்வழக்கின் பழமையும் உண்மையும் இனிதுணரலாகும். ஈண்டு மரக்கடுங்கோ எனப்பட்டவன் சேரன் என்பது 'மாந்தரன் பொறையன்' கடுங்கோ'' (அகம் 142) என வருதலான் அறிக. சங்க நூல்கள் இவ்வூரைக் ''கடல் கெழு மாந்தை'' ''இலங்கு நீர்ப்பரப்பின் மாந்தை'' ''பொங்குதிரை பொருதவார் மணலடைகரை...... துறை கெழுமாந்தை'' எனக் கூறுதற்கியையவே ''மல்லனீர் மாந்தை'' என இவ்வாசிரியர் பாடுதல் கண்டுகொள்க. ''மல்லனீர்'' என்பது கடலாதல் மல்ல னீர்த் திரையூர்பு'' (31) என நெய்தற்கலியுள் வருதலானறிய லாம். ஈண்டு மல்லனீரென்றே ஆசிரியர் கருதினுராதல் அடுத்த அடிமுதலிற் **சொல்லவே** என இன்னேசைப்பட எதுகையின் வைத்துத் தொகுத்தவாற்ரு னன்குணரலாம். ஈண்டு மாந்தை யெனப் படித்தால், தளைசிதைந்து வெண்பாவிலக்கணங் கெடு மாதலால் மாந்தையெனவே படிக்க வேண்டியதை நோக்கி இவ் வூர்ப் பெயருண்மை யிஃயெனத்துணிந்துகொள்க. சோணுட்டா ரும் தொண்டி, முசிரி, மாந்தை என்னும் பெயர்களைத் தம்மூர்க் கிட்டு வழங்கியுள்ளனராதலால் இப்பெயர் வழக்கினுண்மையுண ரலாகும். மாந்தை மாயூரஞ் சேகரத்துள்ளதோரூர். பாண்டி நாட்டும் **மேன்மாந்தை** என்ற சிறு சமீன் உண்டு. இதுவும் இப் பெயர் வழக்கினைக் காட்டும். இவற்ருற் கடற்கரையிலில்லாது அந்நாட்டுராகிய ஆஅய்வேள் மரந்தையும் கடற்றுடைப் பட்டின மாகிய சேரர்மரந்தையுந் தம்முள் வேருதல் தெளியலாம்.

இனி மாக்கடுங்கோ மாந்தரன் எனவழக்குப் பெறுதல்பற்றி அவனூர் மாந்தரனூர் எனப்பயிலப்பட்டு அதுவே மாந்தை எனப் புலவாரற்றிரித்துக் கொள்ளப் பட்டதெனினும் அமையும். இவற் ருற் மேல் கடற்றுறைப் பட்டினமாகிய ஊர் **மாந்தை** யென்றும் கடலடுக்காது அகநாட்டுள்ள ஊர், அதனினும் வேருய **மரந்தை** என்றும் நன்கறிந்து கொள்க.

16

# தோல்வித்தானம்

தோல்வித்தானமாவது யாதேனும் ஒரு விஷயத்திலே ஒருவர் கொள்கைக்கு மற்றொருவர் கொள்கை மாறுபட்டுழி மெய்யுணர்வு கைவருதல் காரணமாக நியாயசபையிலே வாதியும், பிரதிவாதியுமாகி நின்று பிரமாணாதிகளோடும் வாதிக்குந் தருக்கவாதத்திலே தடுமாறிக் கூறுதலினாலாவது வேறொன்றாகக் கூறுதலினாலாவது ஒருவர் தோல்விக்கிடனாதலேயாம். ''வாதம் பேசுவார் தோல்வியுறுதற்கேதுவே தோல்வித்தானம்'' என்பது தருக்கசங்கிரகதீபிகை. தோல்வித்தானத்தினை நூலார் நிக்கிரகத்தானம் என்பர். நிக்கிரகம்-தோல்வி, தள்ளுதல், தானம்- இடம் இருக்கை. வாதி- தன்பக்ஷத்தை முதலெடுத்துக் கூறுவோன். பிரதிவாதி- வாதிக்கூற்றுக்களை மறுத்துரைப்போன்.

## தோல்வித்தானத்தின் வகைகள்

தோல்வித்தானம் இருபத்திரண்டு வகைப்படும் என்று சில தருக்க நூல்களுஞ் சிவஞானசித்தியும் கூறும். ''காண்டுந் தோல்வித்தான மிரண்டிருபத்திரண்டாம்'' என்பது சிவஞானசித்தி தோல்வித்தானங்கள் இருபத்திரண்டும் சிவஞானசித்தி யுரைகளுள்ளே மறை ஞானசம்பந்தர், சிவாக்கிரயோகியர், சிவஞான முனிவர். நிரம்பவழகியதேசிகர் என்னும் நால்வரும் செய்த உரைகளிலும், கௌதமருடைய நியாயசூத்திரவுரையிலும், தருக்கசங்கிரகதீபிகையின் உரையாகிய நீலகண்டீயத்திலும் விரித்துக் கூறப்படுகின்றன. நியாயசூத்திரத்திலே கூறப்பட்டுள்ள பதினாறு பதார்த்தங்களுள்ளே தோல்வித்தானமும் ஒன்று; அதுவே இறுதியிற் கூறப்பட்டுள்ளது. தருக்க சங்கிரகதீபிகையிலும் உத்தேசமாத்திரையாகக் கூறப்பட்டிருக்கின்றன. தருக்க பரிபாடையிலுஞ் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பிரபாகரம், பாட்டம் முதலிய நூல்களிலே விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன என்பது சில நூலுரைகளால் விளங்குகின்றது.

தோல்வித்தானங்கள் இருபத்திரண்டினுள்ளே சில சிலவற்றிலே மேற்சொல்லப்பட்ட சிவஞானசித்தியுரைகாரர்களும் தம்முள்ளே மாறுடுவர். அவர்களுரைகளோடு நியாயசூத்திரவுரையும்,

நீலகண்டீயமும் மாறுடும். ஆயினும் இவைகளுள்ளே நம்மறிவிற்குப் புலப்பட்டவைகளையே பெரும்பாலும் அநுசரித்துத் தோல் வித்தானங்கள் இருபத்திரண்டும் இங்கே எழுதப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதிஞ்ஞாஹாநி | 12. | அதிகம் |
| 2. | பிரதிஞ்ஞாந்தரம் | 13. | புநருத்தம் |
| 3. | பிரதிஞ்ஞாவிரோதம் | 14. | அநநுபாடணம் |
| 4. | பிரதிஞ்ஞாசந்நியாசம் | 15. | அஞ்ஞாகம் |
| 5. | ஏத்துவந்தரம் | 16. | அப்பிரதிபை |
| 6. | அர்த்தாந்தரம் | 17. | விக்ஷேபம் |
| 7. | நிரர்த்தகம் | 18. | மதாநுஞ்ஞை |
| 8. | அவிஞ்ஞாதார்த்தம் | 19. | பரியநுயோச்சியோபேக்ஷணம் |
| 9. | அபார்த்தகம் | 20. | நிரநுயோச்சியாநுயோகம் |
| 10. | அப்பிராத்தகாலம் | 21. | அபசித்தாந்தம் |
| 11. | நியூநம் | 22. | ஏத்துவாபாசம் |

## 17

# பொய்யாமை

### பொய்யே தலையாய பாவம்

இந்நாவலந் தீவிலுள்ள நம்பெரியோரெல்லாம் உலகிற் பெரும் பாவங்கள் ஐந்தாம் எனவும், அவை பொய், கொலை, களவு, கள் காமம் என்பனவாம் எனவும் உரைப்பர். ''கள்ளும் பொய்யுங் காமமுங்கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை'' என்றார் மணிமேகலையினும். இதன் கண் செய்யுணோக்கிக் 'கள்ளும் பொய்யும்' என எண்ணினாரேனும், பொய்முதலாக எண்ணுதலே வழக்காம் என்க. இவற்றுட் பொய்யொன்றே மற்றைக் கொலை முதலிய நான்கிலும் வியாபிக்கும் வலியுடையதாதலின், இதனையே தலையாய பாவம் என்பர். அது பொய்யுணர்வு, பொய்யுரை, பொய் யொழுக்கம் என மூன்றாகவைத்துக் கடியப்படும். இவ்வாறு பெரும் பாவங்கள் என்னும் வரிசையிற் பொய்முதலிய ஐந்தனையும் வைத்து, அவை எல்லாவற்றுள்ளும் பொய்யைத் தலைமையான பாவமாகக்கொண்டு அதனைத்திரிகரணத்தாலும் பற்றறக் கடிந் தொழுகுவது நமக்குச் சிறந்த அறமாம். பிறநாட்டார், இப்பெரும் பாவங்களுட் பலவற்றைச் சிறுகுற்றமாகவுங் கருதார். பிறநாடுகள் பலவற்றிற் கொலையுங் கள்ளும் பாவவுணர்ச்சியில்லாமலே பயிலப் படும்.

இனிப் பொய்யை நம்மவர் தலைமையான பாவமாகக் கருதிய தற்குக் காரணம் என்னவெனிற் கூறுவேன்;...பொய்யுணர்வு காரணமாகவே கொலை முதலிய பாவங்களெல்லாம் பிறக்கும். மெய்யுணர்ந்தவழி அப்பாவங்கள் பிறவாவாம். கொலைமுதலியன மனப்பரிசுத்தம் இல்லாதாராற் புரியப்படும். மனப்பரிசுத்தம் சத்தியத்துடனிகழுமென்பர். ''அகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்'' என்பது திருக்குறள். கொலைகள் களவு காமம் நான்கும், மனவுணர்ச்சி நன்கமையாத மூடர்களாலும் விலங்கு களாலும் ''இது கொலை, இது கள்ளுண்டல், இது களவு, இது காமம்'' என்னும் பாவவுணர்ச்சியின்றி இயல்பாகவே செய்யப் படும். பொய்யோ விலங்குகளால் ஆகாமல், மானுடப்பிறவியின ரால், தந்நெஞ்சால் நன்கு அறியப்பட்டு, இது பொய் என்னும் உணர்ச்சியோடே நிகழ்த்தப்படும்.

## பொய்யின் விளைவு

கொலை முதலிய நான்கும் பிறபொருள்கள் உண்டாயவழி உண்டாம்; பொய் பிறபொருளை வேண்டாமல் ஒருவன் தன்னானே எளிதிலாக்கப்படும். ஒரு பொய்யைக் கூறிக் கொலை முதலியவற்றை இயற்றுவித்தல் கூடும்; கொலை முதலியன பெரும்பாலும் பிறவு டலையும் பொருளையும் அழிக்கும். பொய் பிறருணர்வைக்கெடுத்து அவரைக் கொலைமுதலிய பாதகங்கட்கு உள்ளாக்குவதற்கும் வாயி லாக நிகழும். கொலை முதலிய நான்கும் ஒருவன் காயத்தின் வலியளவே செய்யப்படும். பொய் அவ்வாறளவுபடாமற் பரக்கும். கொலை முதலியன இப்பொய்யின் கண்ணே மறைந்துகொள்ளும்; பொய் இருண்டபெருங்காடுபோல்வது. கொலை முதலியன அக்காட்டுத்திரிந்து இடரிழைக்கும் கொடிய விலங்குகள் போலும்.

கொலைமுதலிய வினைகள், அவ்வவ்வினையுண்ட பொருள்கண் மட்டில் நிற்கும்; பொய்யை ஒருவன் கூறியொழிந்தால் அது பெரு விரைவிற் பரந்தோடி உலகை மூடிக்கொள்ளும். நரகம் என்னும் கொடிய அரக்கனது வலிய கையிலுள்ள ஐந்துவிரல்களாகும். இவ்வைந்து பாவங்களும். பொய்என்பது அவ்வைந்துவிரல்களுள் ளும் அங்குஷ்டமாகும். கொலை முதலிய நான்கும் மற்றை விரல் களாம். எங்ஙனம் நான்குவிரல்களும் அங்குஷ்டத்தைத் தொட்டுக் கொண்டே ஒருவினை புரியப்படுமோ, அங்ஙனமே, கொலை முதலியன நான்கும் பொய்யைத்தொட்டுக்கொண்டே இயற்றப்படும் (அவ்வரக்கன் இவ்வைந்து பாவங்களாம் ஐந்துவிரல்களாலும் தீய உயிர்த்தொகைகளைப் பற்றித் தன் எரிவயிற்றிட்டு வருத்து கிறான்) இவற்றாற் பொய்ப்பாவத்தின் தலைமையுணர்ந்துகொள்க. எல்லாத்தீயொழுக்கங்களும் பொய்யறிவடியாகவே பிறப்பன என்னுங் கருத்துப்பற்றியே, ஞானபூரணரான ஸ்ரீசடகோபர் ''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாம உறாமை உயிரளிப்பான்'' என முற்படப்பணித்தருளினார். 'மெய்யுணர்ந்தான் வீடு பெறும்' என்பதனால், மெய்யுணர்வு வீட்டிற்கு ஏது ஆகவும், பொய்யுணர்வு அதற்கு விரோதியாகவும் அறியப்படுதலின், பொய்ப்பாவத் தலைமை எளிதிலுணரப்படும்.

## பொய்மையின் சீர்மை

இனித், திருவள்ளுவர் ''ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றத னபின்சாரப் பொய்யாமை நன்று'' என்பதனால், தன்னோடு இணையொப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமையென் னும், பொய்யாமை அதன் பின்னே நிற்க நல்லது என்றும் உரைத்

தமையின், கொலையினையே தலையாய பாவம் என்றலும், பொய்யை அதன் பின்னேவைத்துப் பாவம் என்றலும் அவர்க்குக் கருத்தா மெனத்துணியலாகும். அவர், பொய்யென்பது சிறிதுந் தீமைபய வாமல் நன்மையே பயக்கும்வழி மெய்போலவுங் கொள்ளப்படு தலால் திரியும் இயல்புடையதென்றும், கொலை அங்ஙனம் ஆகாது வேள்விமுதலாகயாண்டுச் செய்யப்படினும் ஒன்றனுயிர் நீத்தலா கிய இன்னாமையையே பயந்துவிடுதலால் திரியா இயல்புடைய தென்றுங் கருதிப், பொய்க்கு முன்னே கொலையினை வைத்தனரா வர். வேள்வியிற் செய்யப்படும் கொலைக்கும் பிராயச்சித்தம் இயற் ப்படுதலின் அது பாவமாதல் கண்டுகொள்க.

அன்றியும், பொய் பாவமென்று கருதப்படுவது அதனால் விளையும் பலதீங்குகள் பற்றியேயாம். அத்தீங்குகளிலெல்லாம் 'சாதலின் இன்னாத தில்லை' என்பதனாற் கொலையே தலையாய தீங்கு என்னலாகும். இத்தலையாய தீங்குபுரியாமல் ஒழுகுதலே தலையாய அறம் எனக்கொண்டாரெனினும் ஆம். அங்ஙனம் கொண்டாரேனும், அவர், ''பொய்யாமை பொய்யாமையாற்றி னறம் பிறர்செய்யாமை செய்யாமை நன்று'' என்பதனாற் பொய்யா மையையே இடைவிடாமற் செய்க எனவும், அங்ஙனம் செய்தாற் பிற வறமொன்றும் செய்யாமை ஒருதலையாக நன்றாம் எனவும் கூறியவாற்றாற் கொல்லாமை முதலாகிய எல்லாவறத்தின் பயனை யும் இப்பொய்யாமையொன்றே தரவல்லதென்று அவர் கருதி யுள்ளா ரென்று தேறலாகும்.

பொய்யாமை எல்லாவறத்தின் பயனையும் தரவல்லதென்று கருதினார்க்கு, பொய் எல்லாப்பாவத்தின் பயனையும் தரவல்லதென் பதும் கருத்தாமென்பது எளிதிலுய்த்துணரப்படும். இதனால் அவரும் பொய்யே எல்லாத்தீங்குகட்குங் காரணமாமெனக் கருதி னாராதல் காண்க. இஃதன்றி, 'யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என்பதனால், 'யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையாலும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறஅறங்களில்லை' என்று இப்பொய்யாமையின் சிறப்புணர்த்தற்குத், தாமே முன் வந்து கரிகூறிநின்றதுங்காண்க.

திருவள்ளுவர், பொய்யுரை பொய்ந்நினைவு பொய்யொழுக்கம் இலராகிப் பொய்யாமையினைத் திரிகரணத்தானும் பேரறமாகக் கொண்டொழுகிய சிறப்பால் 'பொய்யில் புலவர்' எனப் பெயர் சிறந் தாராலால் அவர் பொய்யாமைக்குக் கரிகூறிநின்றாராவர். இவற் றாற் பொய்யாமையின் மிக்கனவாகப் பிறவறங்களில்லையென்பதும் எல்லாப் பாவங்களையும் அப்பொய்யொன்றே தரவல்லதென்பதும்

அவர்க்கும் உடன்பாடாத லுணர்க. சீத்தலைச்சாத்தனர் 'கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையுந், தள்ளா தாகுங் காமந் தம்பா லாங்காது கடிந்தோ ரல்லவை கடிந்தோர்' (சிறைசெய்காதை) என்பதனல், இடம்பற்றிக் காமத்தையே தலையாய பாவமாக வைத்து, அதனைக்கடிந்தோரே மற்றை நான்கையுங் கடிந்தவரா வார். எனவுரைத்தார். இக்கருத்தேகொண்டு 'காமமே கொலைகட் கெல்லாங் காரணம்' எனக் கூறினருமுளர். இவ்வாறு ஓரோர் பாபபுண்ணியத்தை எடுத்துக் கூறுமிடத்து, முறையே விடுதற்கும் பற்றுதற்கும் ஏற்றபெற்றியால் மிக இழித்தும் மிகவுயர்த்துங்கூறு வது நூல்வழக்கேயாம். இங்ஙனம் காமம், கொலைமுதலியவற்றிற் குப் பாதகத்தலைமை கூறும் ஆசிரியர்க் கெல்லாம் இத்தீங்குகள் மயக்கவுண்ர்வடியாகப் பிறப்பின என்பதும், அம்மயக்கவுணர்வு பொய்யுணர்வேயென்பதும் உடன்பாடாம். ஆதலாற் கொலை முதலிய தீங்குகளெல்லாம் பொய்யுணர்வைத் தள்ளா என்பது தெளிந்துகொள்க. இவையெல்லாய் நன்ருய்ந்த பெரியார் பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும்' எனப்பணித்தமையினை யும் நோக்குக.

பொய்யுணர்வாவது, வஞ்சவுணர்ச்சி. இதனை விபர்யயம் என் பர். அது கடவுளும் இருவினைப்பயனுமுதலாகப் பெரியோர் கண்டு உண்டென்றவற்றை இலவென்றுகொண்டு, நூலானும் உலகத்தோரானும் கடியப்பட்டனவற்றைப்புரிதற்கும், புரிந்தும் நல்லோனகத் தோற்றுதற்கும், ஏற்றவஞ்சவுரை வஞ்சவொழுக் கங்களைத் தன்னுள்யே தேர்தல். இது பல்வகைத் தீங்குகளுக்கும் மூலமாதலின் மாபாவமாதல் கண்டுகொள்க. வஞ்சவுரை, வஞ்ச வொழுக்கங்களை நிகழ்த்தற்குச் சமயம் வாயாவிடினும் ஒருவன் தேர்ந்த வஞ்சவுணர்ச்சிமட்டில் அவனைப் பெரும்பாவி யாக்கிவிடு மென்றுணர்க.

## பொய்யுரை பெரும் பாதகம்

பொய்யுரையாவது 'அஃதன்று' எனத் தன் நெஞ்சு அறிந்தி ருப்பவும் பிறனுக்கு அது தோன்ருதவாறு மறைத்துச் சொல்லும் வஞ்சவுரை—இதனை,

''அற்றன் ருத லதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனேர்த்தன்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்,''

(நீலகேசித்தெருட்டுரை மேற்கோள்.)

எனவருதலால் உணர்க. ''ஒருவன் சொல்லல்வேண்டும், அவன் சொல்லியவாறு அன்றுதல் வேண்டும், அங்ஙனம் அன்றுதலை அவன் உணர்ந்தவனுதல் வேண்டும், அச்சொல்லைப் பிறன் கேட்டல் வேண்டும்—இந் நான்குங் கூடியவழியே பொய்யுரையாம்'' என்பது இதனுலறியப்படும். இப்பொய்யுரை சொற்குற்றம் நான்கனுட் டலையாயதெனப்படும்; இதனைப் ''பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்,சொல்லெனச் சொல்லிற் ருேன்றுவ நான்கும்'' என மணிமேகலைக் கண் வருதலானுணர்க. குறளை, மெய்பற்றியதாயினும், அதனுற் பிறனுக்குவிளையுந் தீங்குபற்றியே பாவமெனவிலக்கப்பட்டது. தீமை பயப்பன வன்றி நன்மை பயவாதனவும் பாவமாம் என நம்பெரியோர் கருதியுள்ளாரென்பதற்கு, அவர், வாக்கினுலாகும். பாவங்களுட் பயனில் சொல்லையும் ஒன்றுக எண்ணியதே சான்றும். இதனுல், அவர் தீமை பயக்கும் பொய்யுரையை எத்துணைப்பாதகமாக வைத்துக் கடிந்தன ரென்பது தேறப்படும். இப்பொய்யுரையாமையின் மிக்க பேரறம் வேறில்லையென் பதனையும், எல்லா நல்லறங்களும் இப்பொய்யுரையாமை யொன்றுண்டாக வுண்டாம் என்பதனையும் நன்குணர்த்தற்கன்றே, நந்தெய்வப்பழமறையும் 'தர்மஞ்சர' என்பதற்கு முற்படவைத்து 'ஸத்யம்வத' என முழங்குவதூஉமாயிற்று என்க. சத்தியங்கூறுதலும்பிற்கூறப்பட்ட தருமத்திஞென்ருயிருப்பவும். அதனைத் தனியே பிரித்து முற்படவைத்து ஓதியதே அவ்வாய்மையின் றலைமை விளக்குமன்றே?

இனி, நன்மையே பயவாது சிறிதுதீமை பயக்கும் வழியும் இப்பொய்யுரை பாவமாகுமெனவும், சிறிதுந்தீமை பயவாது நன்மையே பயக்கும் வழிப்புண்ணியமாகும் எனவும் கூறுதலுமுண்டு. பொய்க்கு மறுதலையாகிய வாய்மையும் சிறிது தீமை பயக்கும் வழியும்பாவமாம் என்பர். ''வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்'' என்ருர். இதனுல் நம்பெரியார் கருத்தெல்லாம், எவ்வாற்ருனும் உயிர்கட்குத் தீங்கு பயவாமல் நன்மையேபயக்க வொழுகுதலையே நோக்கியன என்பது உணரத்தகும். இவற்றையெல்லாம் நோக்கின் தீமைபயப்பனவும் நன்மை பயவாதனவும் பாவமாமெனவும், தீமைபயவாதனவும் நன்மை பயப்பனவுமே புண்ணியமா மெனவும் நம்மவர் பதத்துள் ளமை வெளியாம். ''பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய்யுரைத்தலும் ஆம் என்பதுபற்றி, நன்மை வேண்டிக் கொலையும் ஆமோ எனின், நன்மையாவது ஜீவன்கட்குப் பீடைபுகுதாமல் வர்த்தித்தலாதலின், கொலை, ஜீவன்கட்குப் பீடாநிமித்தமாதலின் ஆகாதென்று கொள்க.''

## பொய்யொழுக்கம் தவிர்தல்

பொய்யொழுக்கமாவது வஞ்சவொழுக்கம். அது, நூல்களிற் கூறப்பட்ட நன்னெறிகளில் உள்ளத்தால் ஒழுகானாகி, அவ்வந் நெறிகட்குரிய வேடங்களையும் ஆசாரங்களையும் உலகத்தை மோகித்தற் பொருட்டுப் புனைந்து நடித்தலாம். இது! கூடாவொழுக்கினன் ஒருவன் மோனசந்நியாசிபோல ஒழுகுதல் முதலியனவாம். பொய், ஒழுக்கத்தினும் உண்டென்பதனைப் ''பொய்யாற் றொழுக்கம்'' 'பொய்தீ ரொழுக்கம்' பொய்யடிமை' எனவருவனவற்றா லுணர்க, 'வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்படன்' என்னுந் திருமந்திரமும் இப்பொய்யொழுக்கத்தினையே நிந்தித்ததாம். 'நெஞ்சிற் றுறவார் துறந்தார் போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணாரில்' எனவுரைத்தருளிய தெய்வப்புலவர் கருத்தால் நோக்கின், இவ்வஞ்சவொழுக்கத்தின் பெரும்பாதகத்தலைமை நன்கறியலாகும்.

## சில எடுத்துக்காட்டுக்கள்

இவ்வாறு, உள்ளம் உரைசெயல் என்னும் மூன்றனும் பொய்த்தலில்லாமையே நம்மவர் பொய்யாமை என்பர். சைந பௌத்தரும், இப்பொய்யாமையினை, முறையே பஞ்சமஹாவிரதத்து ளொன்றாகவும் பஞ்சசீலத்துளொன்றாகவும் வைத்து இனிது போற்றுவர் எனவறிக. இவ்வாறு திரிகரணத்தானும் பொய்யாம் பெரும்பாவம் எய்தாமலொழுகுதலே ஒருவனுயிர்க்குச் சிறந்த பேரறமாம் என்பதற்குப்பொருந்த, நம் பெருநூல்களுட் கேட்கப் படும் இதிகாசங்கள் மிகப்பலவாம். அரிச்சந்திரன் என்னும் அரசர் பெருந்தகை ஒரு பொய் கூறமாட்டாமல், தன்னரசிழந்து மனையிழந்து மகனிழந்து, தானும் புலையற்கடியனாய்ப் புக்குப் படாதனபட்டதும்; தசரதன் என்னும் சக்கரவர்த்தி ஒருபொய் கூறிவறியாது தன் அன்புடைததிருமகனாரைக் காடுபோக்கித் தன்னுருயிர் துறந்ததும் நம்புண்ணிய சரிதங்களேயாம்.

நல்லோர்பாலன்றித், தன்னுயிரைப் போக்கவல்ல கொடியோர்பாலும் பொய்கூறலாகாதென்பதற்குத், தன்னைக் கொல்லப் புகுந்த கொடியபுலியிடத்தும் ஒருபொய்கூறவறியாதொழுகிய சுமதிகதை சேஷதர்மத்துப் பிரசித்தி பெற்றதன்றே.

அறங்களுக் கெல்லாம் பெருநிலயமாகச் சிறந்த தருமனும், தன்கருத்தால் மெய்யேயாயினும் வேறோர் பொருள்படுதலால் துரோணருக்குத் தீங்கிழைப்பதொன்றைச் சொல்லியதனானே பொய்யனெனக்கொள்ளப்பட்டு, அப்பாதகத்தின் பயனாகக்

கொடுநரகங்கண்டு நடுங்கினன் என்பது, நாம் பொய்யாமைக்கு எடுத்துக்காட்டும் மெய்ச்சரிதையாகும்.

இனித் தந்நெஞ்சறிவது பொய்யாமைக்கு, நக்கீரனர் ஓர் பேரிலக்கியமாவர். இவர் 'கொங்குதேர்வாழ்க்கை' என்னுஞ் செய்யுட்குத் தந்நெஞ்சறிந்த குற்றத்தைக் கூறியதும், அச்செய்யுளை அருளிச்செய்த இறையனர் இவர்முற்போந்து தம் நெற்றிக்கண்ணைக் காட்டித் தாந்தெய்வமாதலை இவர்க்குணர்த்திய காலத்தும் அவ்விறையனரை நோக்கி, நக்கீரர், 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனவுரைத்துத் தந்நெஞ்சறிந்ததைப் பொய்யாது நின்றதும் தமிழுலகம் நன்றறிந்தனவேயாம். வாய்மையினை முன்னிட்டுப், 'பொய்யில் புலவன்' 'பொய்யாமொழி' எனப் புலவர்க்கும், 'திருவாய்மொழி' 'பொய்யாமொழி' 'வாயுறைவாழ்த்து' என நூல்கட்குஞ் செய்யுட்கும் பெயர்வைத்தாளுதலும் நமக்குச் சிறந்ததாம். அறிவிலிக்கு மகிழ்ச்சியே பயக்குமாயினும், அவன் செய்யாதனவற்றைக் கூறி அவனைப் பொய்யேபுகழ்தலை, நம்பெரியாரது செவ்வியநா ஒருபோதும் அறியா என்பர். இதனைச் 'செய்யா கூறிப் புகழ்த, லெய்யா தாகுமெஞ் சிறுசெந் நாவே' (புறம் 148) எனக் கல்விவீறுடையார் கூறுதலான் அறிக. ஒருவற்கில்லாதனவற்றைக் கூறிப் புகழ்தலினும், அவனை வைதலையே இவர் நன்றென்று கொள்வர்; 'இல்ல புகழ்தலின் வைதலே நன்று' என்பது மேற்கோள். சிலபுல்லறிவோர், ஒருகால் ஔவையாரை எதிர்ப்பட்டுத் தம்மைப்பாடும்படி வேண்டியபோது, அவர்பால் ஒருகுணமுங்காணுமையால் 'நும்மை யான் எங்ஙனம் பாடுவேன்' என்று அவர் மறுத்ததும் ஈண்டு நினைக்கத்தகும். இவ்வாறு பொய்யை விலக்கியும் பொய்யாமையைப் போற்றியும் நம்மவர் ஒழுகியதற்குப் பலபல மெய்க்கதைகள் எடுத்துக்காட்டலாகும். அவற்றையெல்லாம் இங்கு விரிப்பின் வரம்பின்றிப் பெருகுமென்க.

## பொய்யாமைக்கண் இந்தியர்க்குள்ள பெருமதிப்பு

இனிப் பொய்யாமைக்கண் நம்மவர்க்குள்ள பெருமதிப்பை நன்கு தெளிவதற்கு, எழுதாமறையினும் எழுதும் மறையினும் முறையே ஸத்யம், வாய்மை என்ற பெயர்களாற் பரம்பொருளை வழங்கியதே தக்ககருவியாகும். 'ஸத்யம் ஞானமநந்தம்' என்பது வேதம். 'தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது, வாஅய்மை வேண்ட வரும்' என்பது திருக்குறள். இவ்விடங்களில் ஸத்யம், வாய்மை யென்பன பரம்பொருளையே குறித்தன. இவ்வரிய பெரிய வழக்கம் நமக்கே வுரியுது. எழுதாமறைக்கண் 'ஞானம்'

என்ற சிறந்த பெயர்க்கும் முன்னுக 'ஸத்யம்' என்ற பெயரை வைத்தமையானே இதன்றலைமை ஆராயப்படும். இத்துணையும் கூறியவாற்றுற் பொய்யைப் பெரும்பாவங்களுட்டலையாகவைத்து, அதனைத் திரிகரணத்தானும் எய்தாமல் விலக்குவதூஉம், பொய்யாமையாகிய வாய்மையே எல்லாஅறங்களுள்ளுந் தலையாய தெனக்கொண்டு அதனையே தெய்வத்தின் திருப்பெயராகவைத்துப் போற்றுவதூஉம் நமக்கே அடிப்பட்டு வந்த வழக்கென்பது நன்கு தேறப்படும், வேற்றுநாடுகளிற் சிறுகுற்றமாகவுங் கருதப்படாத புலாலுண்ணல், கள்ளுண்ணல் இவற்றை விலக்கியொழுகுதற்கண் இந்நாவலந் தீவு எங்ஙனம் எல்லாரானும் புகழப்பட்டதோ, அங்ஙனமே, பொய்யாமையைத் தலையாய அறமாகக்கருதி யொழுகுதற்கண்ணும், இத்தீவமே தொன்றுதொட்டுப் புகழ்பெறு வதென்க. வேற்று நாட்டாரால்புகழப்படும்கிறிஸ்துபிறந்த21-ஆம் ஆண்டில் (அஃதாவது இன்றைக்கு 1884 வருஷங்கட்குமுன்) இருந்தவரும், மேற்றேயத்துப் பழைய பூகோளசாஸ்திரிகளுட் பெருந்தலைமை வாய்ந்தவருமாகிய ஸ்ட்ரேபோ (Strabo) என்னும் யவனுசிரியர், தம்முடைய பூகோள நூற்கண் இந்தியரைப் பற்றிக் கூறுமிடத்து, *"அவர்கள் (இந்தியர்கள்) சத்தியத்தை அறத்தோடொப்பப்போற்றுகின்றுர்கள்...... பொய்க்கரி கூறின வனுகக் குற்றப்பட்டவன் தன் உறுப்பறையுண்பவனுவன்" என உரைத்தவாற்றுனே நம்மவர் பொய்யாமையை எவ்வளவாக மதித்துப் போற்றினரென்பதும், பொய்யினை எவ்வளவாகக் கடிந்தனரென்பதும் நன்குதெளியலாகும். இந்நாவலந்தீவினர் சத்தியத்தினை அறத்தோடொப்பப் போற்றுதலை, மேற்றிசைத் தொல்லாசிரியர் ஓர் புதுமையாகக் கருதியதனையும் நோக்கிக் கொள்க. ஸ்ட்ரேபோ ஆசிரியர் இவ்வாறு நம்முன்னேரைப் புகழ்கின்றகாலத்து வேற்றுநாட்டார் பலர், அநாகரிக வடிவினராயிருந்தனரென்பது பலரும் அறிவர்.

நம்மவர் பெரும்பாவமாகக் கருதியன பலவற்றுள் ஒருசில வற்றை, மேனுட்டார் சிறுகுற்றங்களாகக்கொண்டு அவற்றை விலக்கக்கருதி, இக்காலத்தேதான் சிறுகூட்டங்கள் கூட்டுகின்றனர். இதனுல், அவரது நவீனசாரமுயற்சியும், நமதுதொன்மைப் பட்ட ஆசாரமுதிர்ச்சியும் நன்கறியத்தகும். இங்ஙனமாகவும், பொய்யினை ஓர் பாவமாகவேகருதாமல் அதனைச் சொல்வன்மையினுல் மெய்போலக்காட்டிக் கேட்டாரை மயக்குதலே தமக்குச்

* "They respect alike Truth and Virtue.................A person convicted of bearing false witness suffers a mutilation of his extrenities"- (Strabo. Page 57. Ancient India by J. W. M. CRINDLE, M.A., L.L.D.)

சிறந்த சாதுரியமாகக்கொண்டு இறுமாக்கும் வேற்றுநாட்டாரொருவர், மேலெடுத்துக்காட்டியவாறு பல்லாற்றானும் நமக்கே சிறந்த பேரறமாகிய பொய்யாமையினைப் புதிதாக உபதேசிப்பது, விழிகண் குருடாயிருப்பவுங் கண்ணுடையான்போல நடிப்பான் ஒருவன், இருகண்ணும் இயல்பாகவே நன்குடையான் ஒருவனுக்கு வழிகாட்டுதலோடொக்கும் என்று துணியலாகும்.

இதுகாறும் உரைத்துப் போந்தவற்றாற் பொய்யாமையென்னும் பேரறத்தினியல்பும், அப்பேரறம் நமக்கே தொன்றுதொட்டுச் சிறந்ததாலும், அதனை நம்மினுஞ் சிறப்பித்துப் போற்றுவார் வேறில்லையாதலும், அவ்வறம் நமக்குப்புதிதாக ஒருவராற் 'பேர்த்தும் பேசக்கிடந்த' தில்லையாதலும் உணர்ந்துகொள்க.

* *

18

# ஆராய்ச்சி

### பரிபாடலுரையாசிரியர்

பரிபாடல் என்பது சங்கத்தாராற் றெருக்கப்பட்ட எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. பாவகையுள் ஒன்ருகிய பரிபாடல் என்பது அப்பாவாலாகிய நூலுக்கு ஆகுபெயர். இஃது சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர் பல்லோர் இயற்றிய எழுபது பாக்களையுடையது. அவ்வெழுபதும் திருமாற்கு எட்டும், முருகக் கடவுட்கு முப்பத்தொன்றும், கடலுக்கு ஒன்றும்; வையைக்கு இரு பத்தாறும், மதுரைமா நகர்க்கு நான்குமாகப்பகுக்கட்டுள்ளன என்பது,

''திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் [1] கார்கோளுக் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.''

என்னும் வெண்பாவான் விளங்குகின்றது,

### பரிபாடல் உரைசிறப்பு பாயிரம்

இத்தமிழ்ச் சங்கத்திற்கு யான் ஏடுதேடிய காலத்துக்கிடைத்த திருக்குறட் பரிமேலகருரையேட்டுமுகத்து வரையப்பட்டிருந்த ஓர் பாயிரத்தால் இப்பரிபாடலைப் பற்றி இதுகாறும் வெளிவராத அரியவிஷயங்கள் சில வெளியாகின்றன. அப்பாயிராமாவது:

''கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனைவேள் முருக னெனவிவர் முதலிய

---

1 ஆழ்வார் திருநகரியிலும் ஆறுமுகமங்கலத்திலும் உள்ள இப்பாடல் எழுதிய ஏடுகளில் 'காடுகாட்கொன்று' என்ற பாடம் காணப்படுகின்றது. ''காடு கிழான் என்பது இக்காலத்துக் காடுகள் என மரீஇயிற்று'' என்பர் நச்சினர்க்கினியர் (திருமுருகாற்றுப்படையுரை) பரிபாடல் நூல் அகப்படாமையால் இதனுண்மை புலப்படவில்லை.

திருந்துமொழிப் புலவ ரருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலு
ளரிதி னெழுந்த பரிபாட் டமுத
மாசுநிலை திரீஇய வளப்பருங் காலங்
கோதில் சொன்மக ணோதக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலிற்
றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பு
மெழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பு
மொருங்குடன் கிடந்த வொவ்வொரு பாடந்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
யெல்லையில் சிறப்பிற் றெல்லோர் பாடிய
வணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டின
னீணிலங் கடந்தோன் ருடொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே.'' என்பது.

இப்பாயிரம் ஆழ்வார் திருநகரித் திருமேனி இரத்தின கவிராயர் வம்சத்துத் தாயவலந்தீர்த்த கவிராயர் அவர்கள் வீட்டிலும், தேவர்பிரான் கவிராயரவர்கள் வீட்டினுமுள்ள திருக்குறட் பரிமேலழகர் உரைப்பிரதிகண் முகத்திருந்தன. இச்செய்யுளின் கீழ்ப் ''பரிபாடற்கு உரையெழுதினன் பரிமேலழகரையன் என்பது இதனன் உணர்க'' என்றும் எழுதப்பட்டுள்ளது.

இவ்வுரைச்சிறப்புப் பாயிரத்தால், * கந்தியாரென்பவர் இப்பரிபாடலுட் டம்சொற்களை இடைமடுத்துப் பிழைபடுத்தா ரென்பதும், இஃது எழுதுவோராற் பெரிதும் பாடம் பிழைத்தலின் உண்மை நிலைகாண்டல் அரிதாயிருந்த தென்பதும், இதனைப்படிப் போரும் ஒரெழுத்தினை மற்றோரெழுத்தாகக் கருதிப் பிழைபடப் படித்துப்போந்தா ரென்பதும், அக்காலத்துப் பரிமேலழகர், கந்தியாரது புன்சொற்களைக்களைந்து எவ்வகைப் பிழைப்பும் போக்கி யாவருக்கும் விளங்கச் சுருங்கியதோர் உரை இயற்றியருளினுரென்பதும் நன்குணரலாவன.

---

* சிந்தாமணியுட்டஞ் செய்யுட்கள் பலவற்றை இடைமடுத்தவரும் இக்கந்தியாரே ஆவர்.

## பரிபாடலுரையாசிரியர் பரிமேலழகரே

இற்றைக்கு முந்நூறு வருஷங்கட்கு முன்பிருந்தவரும் மாறனலங்காரத்திற்கு உரையிட்டவருமாகிய கவிராஜகேசரி திருமேனி இரத்தினகவிராயர், திருக்குறட் பரிமேலழகருரைக்கு விளக்கமாக இயற்றிய 'நுண்பொருண்மாலை'யுள் ''இவ்வுரையாசிரிரே பரிபாடலுளோதியவாற்ருனுணர்க'' எனக்கூறுதலாற் றிருவள்ளுவர்க்கு உரையருளிய ஆசிரியர் பரிமேலழகரே பரிபாடற்கும் உரையருளினுர் என்பது நன்று தெரிகின்றது.

ஈண்டைப் பாயிரத்துள் ''நீணிலங்கடந்தோன் ருடொழும் மரபிற் பரிமேலழகன்'' என்பது, அப்பரிமேலழகர் காஞ்சீபுரத்து உலகளந்த பெருமாள்கோவில் அருச்சகர் மரபில் உதித்தவர் என்னும் கர்ணபரம்பரைச் செய்தியின் உண்மையைப் புலப்படுத்துகின்றது. இப்பாயிரத்துடன்—

''விரும்பி யருணீல வெற்பிமயக் குன்றின்
வரும்பரிசு புள்ளூரு மாலே—சுரும்பு
வரிபாட லின்சீர் வளர்துளவத் தோளாய்
பரிபாட லின்சீர்ப் பயன்''
எனினுஞ் செய்யுள் ஒன்றும் வரையப்பட்டுள்ளது.

* *

# 19

# திருத்தக்கதேவரும், கம்பரும்

## இருவரும் யாத்தகாவியம்

இவர்கள் இருவரும் தமிழிற் பெருங்காப்பிய நூல்கள் இயற்றி மிகச் சிறந்த புகழ்படைத்த புலவர் பெருமக்களாவர். துறையடுத்த விருத்தத்தொகைக்கவிகளாற் றொடர்நிலைச் செய்யுளை வளம்பெறப் பாடுதலில் இவர்களுடைய பேராற்றல் அளத்தற்கு அரியதேயாகும். இவருள் திருத்தக்கதேவர் பாடியது சீவகசிந்தாமணி என்பது. கம்பர் பாடியது இராமாவதாரமென்பது. இவ்விரு பெரும் புலவர்களுடைய அறிவின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்தறிதற்கு இவ்விரண்டு நூல்களுமே உற்ற கருவிகளாவன.

## சீவகன் கதையும், ராம காதையும்

சீவகன் கதைக்கும் சீராமகாதைக்கும் சரிதையினியல்புபற்றி நோக்குமிடத்துச் சிறிய உவர்க்குட்டத்துக்கும் பெரியபாற்கடற்குமுள்ள வேற்றுமை புலனாகும். சீவகன் கதை யாண்டுஞ் சிற்றின்பமே பெரும்பான்மை பயின்று வருகின்றது. சீராமகாதை அறம் பொருளின்பம் வீடு என்னும் நாற்பொருளும் மலிந்து இயல்வது. இக்காப்பியங்களின் றலைவர்களை நோக்குமிடத்துச் சீவகன் பல தாரங்களை மணந்தவனாவன்; சீராமமூர்த்தி ஏகதார மகாவிரதனாவன். சீவகசரிதையில் இரண்டோரிடங்களில் வாழ்வு தாழ்வுங் கலந்து இன்பச்சுவையும் துன்பச்சுவையும் காணப்படினும் பெரும்பாலும் கதையினைச் செல்வ வாழ்க்கையிலே கொண்டு செலுத்த சுவையின்றுவது. சீராமகாதைக்கண் யாண்டும் வாழ்வுந் தாழ்வும்பற்றி இன்பமுந் துன்பமும் விரவிவருதலிற் சுவை மிகுதி பயக்கின்றது. இன்னோரன்ன சரித்திரஞ்யல்புபற்றி இவ்விரண்டு நூல்களுக்குள் உயர்வு தாழ்வு காண்டல் எளிதேயாகும். ஆதலாற் சரித்திரவியல்பினை விடுத்து இவ்விரு பெருங்காப்பியங்களையும் நன்றியற்றிய இவ்விரு நூலாசிரியருக்குள் புலமைத்திறன் பற்றியுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையே யான் இவ்விடத்தாராயப் புக்கேன்.

## புலமைத்திறன்

இவ்விரு புலவர்களும் காலத்தானுங்கொள்கையினுனும் வேற்றுமைப்பட்டவர்களேயாயினும் புலமை எய்தியது தமிழ்க்கல்வியிலே யாதலால் இவர்கள் அம்மொழியிற் கற்ற பெருநூல்களெல்லாம் பழைய சங்கநூல்களே யாகுமென்று துணியலாம். இவ்விருவர் வாக்கிலும் திருக்குறள் புறநானூறு அகநானூறு முதலிய பழைய நூல்களின் அரிய வழக்குகள் பல விரவியிருத்தலானே ஈதறியப்படும். இவ்விருவரும் எடுத்தாண்ட சங்கநூல் மேற்கோள்களை இங்கு ஒவ்வொன்ருக எடுத்துக்காட்டப்புகின் மிக விரியுமாதலால் ஒரு சிலவே கூறிச்செல்வேன்.

## சிந்தாமணியும் திருக்குறளும்

சிந்தாமணிக்கண்'

''வோட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வேய்மென்
றேேள்''

என்பது (குணமாலை-192)

''வேட்டபொழுதினவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்'' (1305)

என்னுந் திருக்குறளையும்;

''கண்ணினு லின்று கண்டாங் கூற்றினைக் காமர் செவ்வாய்
... ... ... ... ...
பெண்ணுடைப் பேதைநீர்மைப் பெருந்தடங் கண்ணிற்
றம்மா''

என்பது (இலக்கணை-81)

''பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க்கட்டு'' (1083)

என்னுங் திருக்குறளையும் கொண்டுவந்தனவாதல் அறிக. இவ்வாறு முழுமுழுத் திருக்குறளைக்கொண்டுவருவன இந்நூலுண் மிகப்பலவாகும். இவையன்றி ஒவ்வோர் திருக்குறளிற் குறித்த உவமைபற்றி வருவனவும் பலவுள.

''பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந் தாங்கி''
(முத்தி-186)

எனப் பகட்டிற்கு ஆடவரை-உவமித்தது ''மடுத்த வாயெல்லாம் பகடன்னுன்'' (திருக்குறள்-624) என்பது கொண்டு என அறிக. ''போதுவாய் திறந்த போதே பூப்பொறி வண்டு சேர்ந்தாங், கூதுமே மகளிர்க்கொத்த போகமு மன்னதொன்றே'' (கேமசரி 379) என்பது ''மலரினு மெல்லிது காமம்'' (1289) என்னுந் திருக்குறட் கருத்தினை விளங்கவுரைத்ததாம்.

''வாய்ப்படுங் கேடு மின்றும் வரிசையி னரிந்து நாளுங்
காய்த்தநெற் கவளத் தீற்றிற் களிறுதான் கழனிமேயின்
வாய்ப்பட லின்றிப் பொன்றும் வல்லனுய் மன்னன்
கொள்ளின்''
(முத்தி-309)

என்பது

''சாய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாந்தை வில்லதும் பன்றைட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்பகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெயறிந்து கொளினே'' (184)

என்னும் புறப்பாட்டையும்;

''நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டு செப்பிற்
புல்லுயிர்............மன்னர்கண்டாய் நல்லுயிர்.........''
(முத்தி-310)

என்பது

''நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்'' (186)

என்னும் புறப்பாட்டையுங் கொண்டுவந்தன. இவைபோல வந்தன பிறவுங் கண்டுகொள்க.

## இராமாவதாரத்தில் திருக்குறள்

இனி இராமாவதாரத்தில்,

''ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தன் றுகவுந்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றூர்கள்யார்''
(அயோத்தி-மந்திரப்-82)

என்பது

''ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறிவாளன் திரு'' (215)

''பயன்மா முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடைய யான்கட் படின்'' (216)

''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு'' (211)

என்னுந் திருக்குறளையுட்கொண்டு எழுந்தது என்று துணியத்தகும். பேரறிவாளனும், நயனுடையானுமாகிய இராமன் அரசச் செல்வம் எய்தல் ஊருணிநிறைதல் போலவும் பக்கத்துயர்ந்த

பயன்மரம் பழுத்தது போலவும் கார்மழை பொழிதல் போலவும், கழனி பாய்ந்து பெருகல்போலவும் எல்லாரானும் தத்தமக்கு வரும் நன்மையாகக் கொண்டு விரும்பப்படும் என்றதாம். இதன் கண் நதிபெருகலொழித்து மற்றை மூன்றுந் திருக்குறளைக் கொண்டு நின்றன.

''மானநோக்கிற் கவரிமாவனையநீரார்''
(அயோத்தி-மந்திரப்-7)

என்பது

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்''

என்னுந் திருக்குறளைக்கொண்டு வந்தது.

''உரைசெயற் கெளிதுமாகி யரிதுமா மொழுக்கி னின்றான்''
(கிட்கிந்தை. அரசியல்-44)

என்பது

''சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்'' (664)

என்னுந் திருக்குறளைக் கருதிவந்தது. இதன்கண் உரைசெயற்கு என்பதனை ஒரு சொல்லாகக் கொள்ளாது உரைக்கு செயற்கு எனப் பிரித்து உரைக்கு எளிதுமாகிச் செயற்கு அரிதுமாம் என இயைத் துரை கொள்க.

''கொடுப்பது விலக்குகொடி போயுனது சுற்ற
முடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடு கின்றாய்''
(பால-வேள்வி-33)

என்பது

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்'' (165)

என்னுந் திருக்குறளைப்பற்றி வந்தது. இவைபோல வந்தன பல வுள. கம்பர் திருக்குறளை ''எழுதுண்டமறை'' என்று வழங்கலால் அவருக்கு அந்நூற்கண் உள்ள நன்மதிப்பினை எளிதிலறியலாகும்.

## சங்கத்தமிழும் கம்பரும்

இனிக் கிட்கிந்தாகாண்ட கார்காலப்படலத்து

''காலமறி வுற்றுணர்தல் கன்னலள வல்லான்
மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ.''

என்பது

''நிலனும் விசும்பு நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்ன லெண்ணு நரல்லது
கதிர்மருங்கறியா தஞ்சுவாப் பாஅய்த்
தளிமயங் கின்றே தண்குர லெழிலி'' (43)

என்னும் அகபாட்டினையே கருதிவந்தமைகண்டு கொள்க, கம்பர் கன்னல் என்றது குறுநீர்க்கன்னலை. குறுநீர்க்கன்னல் என்பது அளவுபட்ட நீரினையுடைய நாழிகைவட்டில்; ஒரு கடாரத்துநீரிலே ஓர் நுண்ணிய துளையுடையதோர் வட்டிலையிட்டு அதன்கண் நீர் புகுவதுபற்றி நாழிகையளப்பதோர் கருவியாகும் *. சூர்ப்பநகைப் படலத்து.

> ''சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
> சூற்றவளை வயலுழக்குந் துறைகெழுநீர் வளநாடா''

என்பது

> ''கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை
> நாகிளந் தவளையொடு பகன்மணம் புகூஉ
> நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்'' (296)

என்னும் புறப்பாட்டைக்கொண்டு கூறியதென்றுணரப்படும். புறப்பாட்டுரையாசிரியர் இப்பாடத்தினை எடுத்தோதி ''நந்தி னேற்றை நாகிளந்தவளையுடனே தத்தம் இனத்தொடு பகன்மணம்புகூஉம் எனினுமமையும்'' என்றார். இவ்வுரைக்குத் 'தத்தமினத்தொடு' பாடத்திலில்லாமல் வருவித்ததாம். இங்ஙனம் வருவித்துரையாது இப்பாடத்தின் நேர்பொருளேகொண்டு கம்பர் கூறியுள்ளாரென்று துணியப்படும். இவ்வாறு சங்கநூல்வழக்குப் பற்றி வருவன இராமாவதாரத்து மிகப்பலவாகும். இவற்றால் திருத்தக்கதேவருக்கும் கம்பருக்கும சங்கம் மருவிய பழைய பெரு நூல்களிலெல்லாம நல்லதேர்ச்சியுண்டென்று கொள்ளப்படும்.

### கம்பர்க்குற்ற ஏற்றம்

பண்டைத் தமிழ்நூற்பயிற்சி இருவர்க்கும் ஒத்ததென்று துணியப்பட்டவிடத்தும் கம்பருக்குச் சிந்தாமணியாரினுஞ் சிறந்ததோரேற்றமுள்ளது. அஃதாவது கம்பர் சிந்தாமணியார் பேரறிவையும் நன்கறிந்தவராவார், சிந்தாமணியார் கம்பருக்கு முற்பட்டகாலத்தவராதலால். சிந்தாமணியாரோ கல்வியிற் பெரியராகிய கம்பரது விழுப்பேரறிவையறியார். கம்பர், சிந்தாமணி தமிழ்மக்களாற் பெரிதும் போற்றப்படுதலைக் கண்டுவைத்து அதனினுஞ்சிறக்கவே ஒரு பெருங்காப்பியஞ்செய்து புகழ்பெறவேண்டுமென்ற ஊக்கத்துடனே இராமாவதாரத்தைப் பாடியிருப்பர். இவர் காலமோ சிந்தாமணியையே அரியபெரிய காப்பியமாகப்போற்றிப் படித்த காலமாகும். அன்றியும் இவர்காலம் சயங்கொண்டார், சேக்கிழார் நாயனார், புகழேந்தியார், ஒட்டக்கூத்தர் முதலிய கவிவேந்தர்களெல்லாம் பெரியபெரிய நூல்கள்பாடி அழியாப் புகழ் நிறுத்திய காலமாம். கம்பர் இவர்கள் அறிவையெல்லாமும் அளந்தறிந்து

* பத்துப்பாட்டு, பக்கம்-153. (முல்லைப்பாட்டுரை)

கொண்டவருமாவர். அளக்கலாகா இயற்கையறிவின் மாட்சி நன்று பெற்ற ஒருவருக்குப்பல பெரியபுலவர்களின் புலமையையும் அளந்து கொண்ட செயற்கையறிவும் நன்கு கூடுமாயின் அவருக்கு அரியவா வனயாவை? ''மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை'' என்பது பொய்யாமொழியன்றே.

## சிந்தாமணியினும் சிறக்கப்பாடுதல்

இதனாற்றிருத்தக்கதேவர்க்கும் கம்பருக்கும் நூலான் எய்திய செயற்கையுணர்விலுஞ் சில வேற்றுமையுண்டென்று கொள்ளப் படும். மற்றுக் கம்பர் திருதக்கதேவர் கவிகளையும் நன்றறிந்தவர் என்றற்றுச் சான்று என்னையெனின் இராமாவதார நூற்கண்ணே சிந்தாமணிச்சொல்லும் கருத்தும் ஆங்காங்குப்பயின்றிருத்தலேயா மென்க. கம்பர் சிந்தாமணிக்கருத்தை எடுத்தாளுமிடங்களிலெல் லாம் அந்நூற்கண் உள்ளவாறே கூறியொழியாது தாமெடுத்தாளப் புகுந்த ஒவ்வொரு கருத்தையும் முன்னதினுஞ்சிறக்கப்புனைந்து பல அழகும் ஒருங்கு பெறப்பாடுவரெனவறிக. சிந்தாமணியார் கருத்தும் கம்பர்பாற்பட்டு இனிய சுவையுடைத்தாமென்று கொள்க. இவ்வாறு வந்தன பலவற்றுள் ஈண்டுச் சில கூறுவல்.

## குவளை மலர்ந்ததாமரை

கம்பர் ஆரணியகாண்டத்து மாரீசன்வதைப் படலத்து,

''ஆற்றுராகிற்றம்மைக்கொண்டடங்காரோ வென்னுருயிர்க்குக்
கூற்றுய் நின்றகுலச்சனகிகுவளைமலர்ந்ததாமரைக்குத்
தோற்றுயதனுனகங்கரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத
தொடங்கினுய்
மாற்றுர்செல்வங்கண்டழிந்தால்வெற்றியாகவற்றுமோ''

எனப்பாடியுள்ளார். இது சூர்ப்பநகையாற் சீதையின் பேரழகை நன்றுகேட்டு அச்சீதைபாற் பெருங்காமங்கொண்ட இராவணன், இரவிற்றண்ணிலவெறிப்பக்கண்டு, என்றுங் குளிர்கின்ற மதி மயங் கிச்சுடுகின்றதெனக்கருதி, மதிமயங்கி அத்திங்களை நோக்கிக்கூறி யதுக்குச் செய்யுள். இதன்கட் 'குவளை மலர்ந்ததாமரை' என்பது சிந்தாமணியார் கருத்தாம்.

''தாமரைப் போதிற் பூத்த தண்ணறுங் குவளைப் பூப்போற்
காமரு முகத்திற் பூத்த கருமழைத் தடங்கண டம்மால்.''
(மண்மகள்-32)

எனவும்

''இழையொளி பரந்த கோயி லினமர்க் குவளைப் பொற்பூ
விழைதகு கமல வட்டத் திடைவிராய்ப் பூத்த தேபோல.''
(ஷ-29)

எனவும் வருனவற்றானுணர்க. கம்பருக்குக் ''குவளைமலர்ந்த தாமரை ''என்னுங்கருத்து இச்சிந்தாமணி யடிகளினின்றும் உண்டாயிற்று என்று கொள்ளலாமாயினும், கம்பர் சிந்தாமணியார் கூறியாங்குக் கூருமல், அக்குவளைதாமரைகளுக்கும் திங்களுக்கும் உள்ள இயைபினைத் தெளிந்து,குவளையும் தாமரையும் வேறு வேறிடங்களிலுளவாயின் முன்னதை யலர்த்தியும் பின்னதைக் குவித்து வாடுவித்தும் போதுகின்ற அத்திங்கள், குவளையைத் தன்னடுவில் வைத்துக் கொண்டதோர் தாமரையுளதாயின் அதனைக் குவிக்கலாற்ருது தோற்கும் என்று கண்டு, யாண்டுந் தாமரை திங்களுக்குத் தோற்றறுபோய் ஈண்டுச் சாநகிதாமரைக்குத் திங்கள் தோற்றது என்று வைத்துச் சமயோசிதமாகக் 'குவளைமலர்ந்த தாமரைக்குத் தோற்ருய்' என்று அலங்கரித்தனர். திங்கள், குவளையைத் தன் நடுவில் வைத்துக்கொண்டதோர் தாமரைக்குத் தோற்றவாறு யாங்ஙனமெனின், திங்களின் இயல்பு குவளையை அலர்த்தி தாமரையைக் குவித்தல் அன்றே?இத்தாமரை குவளையைத்தன் நடுவில் வைத்துக்கொண்டதாதலால் தாமரையைக் குவித்தால் அதனடுவிலுள்ள குவளையும் அதனுள்ளே சாம்பும்: அப்போது தானியல்பாக அலர்த்தும் குவளையை இவ்விடத்தலர்த்திஞனுகான்; குவளையை அலர்த்தினும் அதனை நடுவிலுடைய தாமரையும் அலர்ந்துவிடும்: அப்போது தானியல்பாகக் குவிக்கின்ற தாமரையை ஈண்டுக் குவித்தாஞகான்; இவ்வாறு தன்னியற்கையான செயல் ஈண்டு நிகழ்த்தலாகாற்ருது தோற்ருன் என்க. இத்தகைய தாமரை சாநகிபாலுள்ளது. அதற்குமதி தோற்ருனென்க. இவ்வியைபெல்லாம் தம்முடைய பரந்தவுள்ளத்து விரைந்துபட்டன வில்லையாயின் ''குவளைமலர்ந்த தாமரைக்கு தோற்ருய் அதனுல் அகங்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத் தொடங்கிஞய்'' என அழகு பொலியக் கூறலாகாதென்க.

திங்கள் சாநகியினுடைய கண்களாகிய குவளைமலர்ந்த முகத்தாமரைக்குத்தோற்றதனு லுண்டாய உள்வெதுப்பு, அத்திங்களை அகங்கரிந்து மெலியச்செய்து புறத்தும் வெதும்பத் தொடங்கிற்ருனென்க. இப்பாட்டில் ''மாற்ருர் செல்வங் கண்டழிந்தால் வெற்றியாகவற்ருமோ'' என்னும் அறவுரை நினைக்கத்தக்கது. இவ்வறவுரை உபதேசஞ் செய்கின்ற இராவணஞர், தாம் இப்போதுபுரிகின்றது அம்மாற்ருர் செல்வங்கண்டழிதலின் வேறேயோ! இவர் மாற்ருர் செல்வங்கேட்டறிபவர் போலும்.! இதனுற் சிந்தாமணியார் கருத்து என்னப்பட்டதோர் நல்லவண்ணத்தில் கம்பர் தம்பேரறிவாகிய எழுதுகோலைத்தோய்த்துக், கண்டார் கண்ணும் மனமும் கவருந்தகைத்தாக ஓர் செய்யுளாகிய திருவுருவைச் சித்திரித்தனர் என்று துணியலாகும்.

## இல்லை உண்டு என்னும் இடை

கம்பர் கோலங்காண்படலத்து,

''பல்லியனெறியிற்பார்க்கும்பரம்பொருளென்னயார்க்கும்
இல்லையுண்டென்னநின்றவிடையினுக்கிடுக்கண்
செய்தார்''

என்ருர், இது

''.........................கண்கொள்ளாநுடங்கிடையை
யுண்டெனத்தமர்மதிப்பர்நோக்கினர்பிறரெல்லா
முண்டில்லையெனவையமல்லதொன்றுணர்வரிதே''
(நாமகள்-146)

என்பதுபற்றி வந்தது என்னலாம். இதன்கண் 'உண்டெனத்தமர் மதிப்பர்' என்பதுபற்றியே பின்னும் நாடவிட்டபடலத்தின்கண் சீராமபிரான் ''தொட்டஎற்குணரலாமற் றுண்டெனுஞ் சொல்லு மில்லை'' எனக்கூறியருளியதாகப் பாடினரெனவுங்கருதலாம். இவ் வீரிடத்துஞ் சிந்தாமணியார் கருத்தே பயின்றதாயினும்கம்பர் சிந் தாமணியார் கூறியாங்கு 'உண்டு இல்லை யென வையம் உணர் வரிது எனக் கூறியொழியாமல் ''பல்லிய னெறியிற்பார்க்கும் பரம்பொருளென்ன யார்க்கும் இல்லையுண்டென்ன நின்ற இடை'' என்ன மிகவும் அழகியதோருவமையினை முன்வைத்து இன்மையும் உண்மையுங் கூறுதல் காட்டியது எத்துணையேற்ற முடையதென்பது உய்த்துணர்ந்துகொள்க. பரம்பொருளை யெய்தி யறிந்த சுவாநுபூதிமான்களுக்கே அதனுண்மை புலனும்; ஏனை யோர்க்காகாது: அதுபோல இவளிடையும் தொட்டறிந்தவனுக் குணரலாமல்லாது ஏனையோர்க்காகாது. இக்கருத்துப்பற்றி யன்றே ''தொட்டவெற்குணரலா'' மென்று சீராமமூர்த்தி திரு வாக்கில் வைத்ததூஉமென்க.

*

20

# கபிலர் முதல் எழுவர்

கபில ரதிகமான் காற்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை—நிகரிலா
வள்ளுவ ரவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை
யெண்ணி லெழுவ ரிவர்.

இவ்வரிய வெண்பா இச்சங்கத்திற்குக் கிடைத்த ஆத்திசூடி முதலியன அடங்கிய மிகப்பழையதோர் * ஏட்டில் கண்டது.

'அறப்பயன் றீரின்' என்னும் ஞானமிர்த அகவலுள் :—

'யாளி, கூவற்றூண்டு மாதப் புலைச்சி
காதற் சரணி யாகி மேதினி
யின்னிசை யெழுவர்ப் பயந்தோளீண்டே'

எனவுரைத்ததனானும், இதனுரையாள்:-'யாளிதத்தன் தனக்கு விகிர்தமாய் தன்னாலே வெட்டுண்டு கிணற்றில் வீழ்த்தப்பட்ட அறிவில்லாத சண்டாளப்பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டு போய் உத்தர பூமியில் வளர்த்து இவனுக்கே பின்னர்க்கொடுக்க இவனுக்கு அவள் காதலித்த பார்ப்பனியாய் இந்நிலவுலகின் கண்ணே இனிய கீர்த்தி பெற்ற கபிலர் முதலாகிய பிள்ளைகளெழுவரை ஈங்குப்பெற்றாளன்றே?' எனக்கூறுதலானும் இவ்வெழுவர் பிறந்த வரலாறு ஒருவாறு உணரப்படும்.

இவ்வேட்டிற் றமிழ்கற்குஞ்சிறுவர்க்குப் பெரிதும் பயன்படத் தக்க நூல்கள் சில கோக்கப்பட்டுள்ளன, அவற்றுள் முதற்கண் உள்ளது :—

**போற்றிமாலை**

போற்றிமாலையென்பது இது சிவபிரான் நாமங்களை மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடைவேகொண்டு இருசீரடியான் வருவது.

---

* இவ்வேடு இச்சங்கத்திற்கு ஏடுதேடுவராகிய சேற்றூர் வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ கந்தசாமி கவிராயரவர் நன்முயற்சியாற் கிடைத்தது.

உ-ம். ஆறணிகடவுள்
இளம்பிறைசூடி
எனவரும்

**நீதியொழுக்கம்**

மற்ளுென்று,—**நீதியொழுக்கம்** என்பது. அது சிலவாய நல்லொழுக்கங்களைப்பற்றி முச்சீரடியான் வருவது.

உ-ம். காலா லெழுத்தைக் கீருதே
மூத்தோர் சொல்லைப் பழியாதே
எனவரும்

இதனிறுதியில் 'எல்லாநீதியும் இப்படியே, என்று பெரியோர் சொல்வார்கள்; கல்லாரும் பொழில் செங்கோட்டுக், கந்தசுவாமி திருப்புகழே. என்றுள்ளது.

**கல்வியொழுக்கம்**

வேளுென்று,—**கல்வியொழுக்கம்** என்பது. இது மொழிக்கு முதலாம் எழுத்துக்ளின் அடைவே நாற்சீரடியான் வருவது.

உ-ம். சட்டிய பொருளின் எழுத்தே யுடைமை
சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே
எனவரும்

**பாண்டியன் கலிப்பா**

இன்னுமொன்று,—**பாண்டியன் கலிப்பா** என்பது. இது பாண்டியன்மேல் இன்பம்பற்றி வருவது.

உ-ம். முன்ளுெருத்தி கூந்தன் முடிப்பித்தாய் தீவினையேன்
பொன்ளுெருத்தி கூந்தன் முடிக்கரிதோ போர்வீரா.
முன்றி லெங்கு நிறைந்தது வெண்ணிலா
மூரி வாடை பரந்ததிவ் வூரெலா
மின்றென் மான்விழி துஞ்சுவ தெங்ஙனே
யிந்து வின்குல ராச முகுந்தனே. எனவரும்

**கொன்றை வேந்தன்**

பிறிதொன்று,—**கொன்றை வேந்தன்** என்பது, இப்பொழுது வழங்குவதற்கும் இதற்கும் பாடபேதம் சிறிதுள்ளது, அவை வருமாறு—

ஈயா தீட்டிற் றீயார் கொள்வர்.
கூரிய ளாகிலும் வீரியம் பேசேல்
கேட்ட லுறுதி கூட்ட முடைமை
கோச்செவிக் குறளை காற்றுட னெருப்பு.
கௌவை சொல்லி லெவ்வ ரும்பகை
சான்றோ ரென்கை யீன்றோர்க் கின்பம்
சினத்தைப் பேணிற் றனத்துக் கழிவு
சொக்க ரென்பவ ரத்தம் பொதிவர்
நூன்மறை தெரிந்தோர் சீலத் தொழுகு
பையச் சென்று வையந் தங்கு
மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு
மைவிழி யார் தமைக் கையகன் றொழுகு

## சுந்தரபாண்டியன் தொகுதி

மற்றது,—சுந்தரபாண்டியன்றொகுதி யென்பது.

இஃது இக்காலத்து வெற்றிவேற்கை யெனவும், நறுந் தொகை யெனவும் பெயர் பெற்று வழங்குவதாகும்.

இது பாடபேதமுடையதனோடு இப்பொழுது வழங்காத சில அரிய அடிகளையும் உடையதாகும். அவை வருமாறு—

சிறியோர்க் கழகு பெரியோரைச் செறிதல்
பெரியோர்க் கழகு பிழைபல பொறுத்தல்

தேன்படு பெண்ணைத் திரள்பழத் தொருவிரை
வானுற வோங்கி விசும்புற நிமிரினு
மொருவற் கிருக்க நிழலா காதே
கற்றோ ரெல்லா மறிஞரு மல்லர்
சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராகிற் பொறுக்கவும் வேண்டும்;
சிறியோ ரப்பிழை செய்தில ராகிற்
பெரியோர்க் கப்புகழ் பெறுதலு மரிதே
* குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே;

---

* "கோம்பிக் கொதுங்கிமே யாபஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேய்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்றா
ளாம்பொற் றடமலர் சூடுமென் னுற்ற லகற்றியதே"
என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையினையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க

பாம்பின் பைத்தலை கொத்தும் மஞ்ஞை
கோம்பிக் கஞ்சு மதனே போலப்
பெண்டிற் கஞ்சும் பேதை யாண்மகன்
கண்டுழிக் கண்டுழி விருந்தஞ் சும்மே

அறுசுவை யடிசி லமர்ந்திருந் துண்டவர்
குடிமிசை பிடகை கூறினுங் கூறுவர்

பிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோ
ரறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்;
அறக்கூ ழுண்டங் கந்நிலை திரிந்தோ
ரெமக்கும் பிறர்க்கு முதவினு முதவுவர்

ஓத்துண ரந்தண ரொழுக்கங் குன்றிப்
பாப்பு மறந்தோன் பதரெனப் படுமே

அங்கண்மா ஞாலத் தரசுவீற்றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே

நன்மனைக் கிழத்தி தன்மனை யிருக்கப்
பிறன்மனைக் கிரங்கும் பேதையும் பதரே

வித்தை கல்லா வெற்றுடம் பொருவனுங்
கொச்சை மக்களும் பதரெனப் படுமே
அல்ல லில்லை யறிவுடை யோற்கே
யானைக் கில்லை கானமு மிருளும்
இரும்புலிக் கில்லை யிரவும் பகலும்
பெரும்படைக் கில்லை யரணுஞ் சிறையும்
காமுகற் கில்லை நாணமு மச்சமும்
விரைந்தோற் கில்லை நாளுங் கோளும்
இல்லோற் கில்லை யிருந்து வாழ்தல்
எல்லா மில்லை சொல்லறியார்க்கே
பெறும்வழக் குடையோன் பெற்றி லாமையான்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறைமுறை கேளா மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே

இதனிறுதியில்,—

தென்னவன் மணிதிகழ் திருமே னியனூர்
மன்னவன் மேலே வளம்பட நின்றவ
னிந்திரன் மேலே யினவளை யெறிந்தவன்

செந்தமிழ்க் காரி சிறப்புக ளுடையோன்
சந்திர குலபதி சுந்தர பாண்டியன்

ளுருகுதி முற்றும்

என்றுள்ளது*

---

* ''இவற்றோடு ஆத்திசூடியும், மூதுரையும், நல்வழியும் உள்ளன அவற்றிற் கண்ட பாடபேதங்களையும்; இக்காலத்து அரியவாய் அவற்றிலுள்ள சிலபாடல்களையும் அடுத்த பகுதியில் வெளியிடுவேன்'' என்னும் குறிப்புடன் இக்கட்டுரை நிறைவுறுகிறது.

# OTHER TITLES FROM NEW ERA

| | |
|---|---|
| GEORGE W. SPENCER (ed), Temples, Kings and Peasants : Perceptions of South India's past. | Rs. 150 |
| S. LEELA SHANTAKUMARI, History of the Agraharas : Karnataka, 400—1300. | Rs. 60 |
| R. E. FRYKENBERG, and PAULINE KOLENDA (eds.), Studies of South India : An Anthology of Recent Research and Scholarship. | Rs. 150 |
| NOBORU KARASHIMA (ed.), Indus Valley to Mekong Delta : Explorations in Epigraphy. | Rs. 180 |
| R. SOMA REDDY, Hindu and Muslim Religious Institutions : Andhra Desa, 1300—1600. | Rs. 110 |
| BURTON STEIN, All the Kings' Mana : Papers on Medieval South Indian History. | Rs. 150 |
| K. SUBRAMANYAM, The Press and The National Movement in South India : Andhra, 1905—1932. | Rs. 110 |
| K. V. RAMAN, et. al., (eds.)., Srinidhih : Perspectives in Indian Archaeology, Art and Culture. | Rs. 550 |
| K. R. BASAVARAJA, Administration Under the Chalukyas of Kalyana. | Rs. 60 |
| GEORGE W. SPENCER, The Politics of Expansion : The Chola Conquest of Sri Lanka and Sri Vijaya. | Rs. 90 |
| N. S. RAMASWAMI (ed), The Chief Secretary : Madras Diaries of Alexandar Falconar. 1790—1809. | Rs. 50 |
| H. S. RAMANNA, Megaliths of South India and South-East Asia : A Comparative Study. | Rs. 50 |
| FRED W. CLOTHEY (ed.) Images Man : Religion and Historical, Process in South Asia. | Rs. 100 |
| Y. VAIKUNTHAM, Education and Social Change in South India : Andhra, 1880—1920. | Rs. 100 |
| B. R. GOPAL, Minor Dynasties of South India: Karnataka, Vol. I. | Rs. 80 |
| K. G. KRISHNAN, Studies in South Indian History and Epigraphy, Vol I. | Rs. 70 |
| S. Gopalakrishnan, Political Movements in South India : 1914—1929. | Rs. 80 |
| C. RAMACHANDRAN, East India Company and South Indian Economy. | Rs. 80 |
| N. S. RAMASWAMI, Mamallapuram : An Annotated Bibliography. | Rs. 30 |

**NEW ERA PUBLICATIONS**
Post Box No. 2459, Raja Annamalaipuram,
**MADRAS-600 028.**